# ஸ்ரீ பிருஹத் பாகவதாமிர்தம்

## (பாகம் - 1)

**நாரத முனிவர் சுத்த கிருஷ்ண பக்தரை தேடல்**

Source:

Sri Brhad Bhagavatamrta

Canto 1, Part-1

ஒன்றாம் பதிப்பு
(Version 1.0)
January 10, 2026

**ஸ்ரீ கௌரங்கா ஸ்ரீ ஸ்ரீ ராதா மதன் மோகன் ஆலயம்**
(கொட்டாரம், கன்னியாகுமரி)

**ஒரே இறைவன்!**
ஜாதியில்லை, நிறமில்லை, மதமில்லை.

**ஒரே மந்திரம்!**
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

*Copyrights & Acknowledgements*


Original Author:

**Srila Sanatana Goswami**

Translation by:

**Yuga Acharya Sri Srimad Bhakti Vedanta Narayana Goswami Maharaja**

கருணை, மேற்பார்வை:

**குரு மகாராஜா ஸ்ரீபகவதி காந்தி  தாஸா**

இந்த நூலின் ஆசிரியர்கள்:

**ஸ்ரீமதி ராதிகா தேவி தாசி**

**ஸ்ரீமதி கிருஷ்ண பிரியா தாசி**



Gokul Publications
Gokul Bhavan, 2/5 Mission Compound
Kottaram - 629703, Kanyakumari,
Tamil Nadu, South India



**Contact:** bkdasa@gmail.com

**Website:** gokulbhajan.com
**Youtube:** youtube.com/c/bkdasa

**Phone:** +91 959 796 9492
+91 750 222 2794
+91 960 066 8797



© Gaudiya Vedanta Publications – Some rights reserved.
Books and Content licensed under CC BY-ND 3.0
Permissions: purebhakti.com/pluslicense |
gvp.contactus@gmail.com

# பொருளடக்கம்

மூல நூலாசிரியரைப் பற்றி....................................................8
ஸ்ரீல சனாதன கோஸ்வாமி....................................................8
தோற்றம்........................................................................8
அமைச்சர் பதவி..............................................................9
சைதன்ய மஹாபிரபுவை சந்தித்தல்.................................9
ஸ்ரீ சைதன்யரிடம் சரணடைதல்......................................10
ரூபகோஸ்வாமியும் சனாதன கோஸ்வாமியும்...................11
சனாதனர் வழிபட்ட ஸ்ரீ ராதா மதன் மோகன்...................11
உப்பு கேட்ட மதன் மோகன்............................................12
ஸ்ரீ கிருஷ்ணர் தந்த கோவர்த்தன சிலை.........................13
சக்லேஷ்வரரின் உதவி....................................................14
ஸ்ரீகிருஷ்ணர் கொடுத்த பால்..........................................14
சனாதன கோஸ்வாமியின் வைபவங்கள்..........................15

அத்தியாயம் 1..................................................................16
ஸ்ரீமத் பாகவதமும் பிருஹத் பாகவதாமிர்தமும்................16
பிருஹத் பாகவதாமிர்தம் உருவான சூழல்........................16
பௌமா (பூமி கிரகம்).......................................................17
பிராமணரின் வருகையும், அவரது வழிபாடும்...................18
நாரதரின் புகழுரை............................................................19
பிராமணரின் வெட்கமும் - பதிலும்...................................20
பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமான தென்னிந்திய அரசன்........................................................20
தென்னிந்திய அரசன் வெட்கப்பட்டார்............................23
ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமானவர்கள் தேவர்களே!..............................................................23
பகவானின் கருணையை முழுவதும் பெற்றவன் இந்திரனே!..............................................................24
விஷ்ணுவே வாமன தேவராக அங்கு இருக்கிறார்!...........24

அத்தியாயம் 2........................................................................26
திவ்யா - சொர்க்கலோகம்..........................................26
சொர்க்கலோகத்தில் நாரதர்........................................26
பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் இந்திரனே! 28
பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் நான் அல்ல! ........................................................................29
நாங்கள் பயத்திலேயே வாழ்கிறோம்!..............................29
நாங்கள் சத்வ குணத்தில் இல்லை!...............................31
பகவான் என்னை ஒரு பொருட்டாகவே வைக்கவில்லை! ........................................................................31
நிவேதனங்களை நேரடியாகப் பெறவில்லை!..................32
பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமானவர் பிரம்மதேவரே!.........................................................33
நாரதர் பிரம்மலோகத்திற்கு வந்தார்..............................35
நாரதர் பிரம்ம தேவரிடம் பேசலானார்:...........................36
பிரம்மதேவரின் கோபம்...............................................37
ஜீவதத்துவம் வேறு! பகவான் தத்துவம் வேறு!..................38
பயத்தில் வாழ்கிறேன் !..................................................38
பகவானுக்கு எதிரான அபராதங்கள்...............................39
சிவபெருமானே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர்!..........................................................41
சிவபெருமானின் மகிமைகள்.........................................41
நாரதர் சிவலோகம் புறப்பட்டார்....................................42
சதாசிவலோகத்தின் பெருமை.......................................43

அத்தியாயம் 3........................................................................44
பிரபஞ்சத்திற்கு அப்பால்..............................................44
பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் சிவபெருமானே!.........................................................45
பகவான் கருணை எனக்கு இல்லை...............................45
பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் நான் அல்ல 49
வைகுண்டலோக வாசிகளின் சிறப்புகள்.........................50
பகவானின் கருணை பிரகலாதருக்கே!..........................54

அத்தியாயம் 4....................................................................57
பக்தன்...............................................................................57
பரீட்சித் மகாராஜா தன் தாயாரிடம் கூறுகிறார்...............57
பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் பிரகலாதரே! 57
பகவானுக்கு உன்மீது எத்தனை கருணை!.....................59
பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் நான் அல்ல! ..............................................................................60
தூயபக்தர் அனுமானின் சிறப்புகள்................................62
கிம்புருஷவர்ஷத்தில் நாரதர்.........................................64
பகவானின் கருணை எனக்கு இல்லை!..........................66
பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர்கள் பாண்டவர்களே!...................................................67
அனுமானின் குழப்பம்....................................................69

அத்தியாயம் 5....................................................................73
பிரியமான பக்தர்கள்.....................................................73
அவதாரங்களும் அவதாரியும்..........................................75
பகவானின் கருணை எங்களுக்கு இல்லை!....................78
அர்ஜுனனின் புலம்பல்..................................................81
நகுல- சகாதேவர்களின் கவலை!....................................82
திரௌபதியின் துயரம்....................................................83
குந்திதேவியின் வேதனை..............................................84
பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் யாதவர்களே ..............................................................................87
பகவான் கிருஷ்ணர் வைகுண்டத்தையே மறந்து விட்டார்! ..............................................................................88
பகவான் கிருஷ்ணரின் கருணை உத்தவருக்கே !...........89

அத்தியாயம் 6....................................................................92
மிகவும் பிரியமான பக்தர்கள்.........................................92
விரஜ பூமியில் புல்லாக பிறக்க வேண்டும்.......................95
விரஜபூமியில் கோபியர்களின் நிலை:..............................96
கிருஷ்ணரின் விரஜ லீலைகள்!.......................................97
கருணையே இல்லாத கோபர்கள் - பத்மாவதி குற்றச்சாட்டு.......................................................97

கிருஷ்ணரின் இதயம் வெண்ணெய் போன்றது -- ருக்மணியின் கவலை!....................................................98
பலராமரின் கோபம்!......................................................100
பகவான் கிருஷ்ணர் பேசினார்!......................................100
பத்மாவதியின் கவலை!..................................................101
விரஜவாசிகளுக்கு கிருஷ்ணர் மட்டுமே வேண்டும்.........102
கோபியர்களின் கிருஷ்ண பிரேமை................................103
விருந்தாவனத்தின் சிறப்பு:.............................................104
கோபியர்கள் உடலைக் கூட விட முடியவில்லை!.........105
பலராமரும் கிருஷ்ணரும் புரண்டு அழுதனர்..................106

அத்தியாயம் 7..................................................................107
மிகச்சிறந்த பக்தர்களின் சிகரம்..................................107
கிருஷ்ணரை இந்த கோலத்தில் பார்த்தவர்களின் நிலை! ...................................................................................108
கிருஷ்ணரது செயல்!.....................................................109
அன்னையே, நான் ஓர் கனவு கண்டேன்!........................110
விரஜ பிரேமையுடன் கிருஷ்ணரைப் பார்ப்பவர்கள்........112
பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மனக்குழப்பம்.......................113
நீ வைகுண்ட வாசனே!...................................................113
துவாரகையின் அரசன்!...................................................114
தேவகியின் தவமும் -யசோதா வின் தவமும்!..................115
கோபிகைகளுக்கு பரிந்து பேசும் ருக்மணிதேவி!.........116
சாதுக்களால் கூட செய்ய முடியாத பிரேமை.................117
சத்யபாமாவின் கோபம்!.................................................117
விரஜகோபிகளின் கிருஷ்ண பிரேமை எத்தகையது?....118
துவாரகையின் ராணிகள்...............................................119
விரஜபூமியும் - பகவானின் லீலைகளும்!........................119
ராகானுக பிரேமையை இங்கு உருவாக்க முடியாது!.....120
விரஜலீலைகளை சுகதேவரால் கொஞ்சம் பேச முடியும்! ...................................................................................121
உத்தவரின் செயல்.........................................................121
நாரதரின் தயக்கம்.........................................................121
நாரதா! நீ என் நலத்தை விரும்புபவர்!...........................122
பக்தியின் தரத்தில் வேறுபாடு.......................................123

நாரதர் பெற்ற வரங்கள் !........................................123
நாரதர் கேட்ட முதல் வரம்:............................................124
நாரதர் கேட்ட இரண்டாவது வரம்:.................................124
நாரதரின் பிரயாகைப் பயணம்!......................................125
கோப கிஷோரரை பாடுங்கள்!..........................................125
யாருக்கு கோபி பிரேமை கிடைக்கும்?..........................126

வினாக்கள்......................................................................127

# மூல நூலாசிரியரைப் பற்றி

# ஸ்ரீல சனாதன கோஸ்வாமி

பகவான் சைதன்ய மஹாபிரபுவின் ஆணைக்கிணங்க, விருந்தாவனத்தின் ஆறு கோஸ்வாமிகள் ஏராளமான சாஸ்திரங்களைத் தொகுத்து நமக்கு வழங்கினார்கள். அவர்கள் ஸ்ரீல சனாதன கோஸ்வாமி, ஸ்ரீல ரூப கோஸ்வாமி, ஸ்ரீல ரகுநாத பட்ட கோஸ்வாமி, ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி, ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி, ஸ்ரீல கோபால பட்ட கோஸ்வாமி ஆகியோராவர். இவர்கள் கௌடிய வைஷ்ணவ சம்பிரதாயத்தின் பிரதான தூண்களாவர். இவர்களில் முதன்மையானவர் ஸ்ரீல சனாதன கோஸ்வாமியாவார். அவரே பிருஹத் பாகவதாமிர்தம் என்னும் இந்த சாஸ்திரத்தின் ஆசிரியராவார்.

## *தோற்றம்*

கர்நாடகத்தை பூர்வீகமாகக் கொண்டவரும், யசூர் வேத பிராமணரும், பரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தவருமான குமாரதேவரின் திருக்குமாரனாக ஸ்ரீல சனாதன கோஸ்வாமி 1488 இல் தோன்றினார். இவரது இயற்பெயர் அமரன். இவருக்கு சந்தோஷ் (ரூப கோஸ்வாமி), வல்லபர் (அனுபமா) என்ற இரண்டு தம்பிகள் இருந்தனர். கௌட தேசத்தில் தாய் மாமன் வீட்டிலிருந்தபடி கல்வி கற்ற இந்த மூன்று சகோதரர்களும் சிறுவயதிலிருந்தே ஸ்ரீகிருஷ்ணரின் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தனர். ஸ்ரீல சனாதன கோஸ்வாமி, தன் முந்தைய அவதார லீலையில் நான்கு குமாரர்களுள் ஒருவராகவும், ஸ்ரீகிருஷ்ண லீலையில் லவங்க மஞ்சரியாகவும் உள்ளார்.

ஸ்ரீல சனாதன கோஸ்வாமி, வித்யா வசஸ்பதி என்பவரிடம் மிக குறுகிய காலத்திலேயே அனைத்து சாஸ்திரங்களையும் கற்று தேர்ந்தார். ஸ்ரீமத் பாகவதத்தின் மீது மிகவும் ஈடுபாடு உடையவராகவும் மற்றும் வழிபடுபவராகவும் இருந்தார். ஒருநாள் அழகிய பிராமண சிறுவன் ஒருவன் ஸ்ரீமத் பாகவத புராணத்தைத் தனக்கு கொடுப்பது போல சனாதன கோஸ்வாமி கனவு கண்டார். அவர் கண் விழித்துப் பார்த்தார். அங்கே எந்த சிறுவனும் இல்லை;

பாகவதமும் இல்லை. மிகவும் வருத்தம் அடைந்த அவர், குளித்த பின்னர் தன் பூஜையைத் தொடங்கிய போது, நிஜமாகவே ஸ்ரீ கிருஷ்ணர் அழகிய சிறுவனாக வந்து, ஸ்ரீமத் பாகவத்தைக் கொடுத்து அதை தினமும் நன்றாக படிக்குமாறு அறிவுறுத்தினார். எனவே, அன்று முதல் அவர் ஸ்ரீமத் பாகவதத்தை வேதங்களின் சாரமாக தினமும் படிக்கத் தொடங்கினார்.

## *அமைச்சர் பதவி*

ரூப, சனாதன சகோதரர்களின் அறிவையும், புத்திசாலித்தனத்தையும் கேள்விப்பட்டு, கௌட தேசத்தின் இஸ்லாமிய மன்னரான நவாப் ஹுசேன்ஷா, அவர்கள் இருவரையும் அமைச்சர்களாக நியமிக்க ஆணையிட்டார். அவர்களுக்கு அதில் விருப்பமில்லை என்ற போதிலும், நவாப்பின் கட்டளையை மீற முடியாமல் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டனர். அதனால் அவர்களது பெயர்கள் சாகர மாலிக் (சனாதரர்), தபீர் காஸ் (ரூபர்) என்று மாற்றப்பட்டன. அதைத் தொடர்ந்து, இவர்கள் கௌட தேசத்தின் தலைநகரான இராமகேலியில் குடியேறினர்.

இரு சகோதரர்களின் திறமையைப் பார்த்து, மன்னர் அவர்களுக்கு பொன்னும் பொருளும் வாரிக் கொடுத்தார். இஸ்லாமிய அமைச்சரவையில் பணியாற்றினாலும் அவர்கள் சாஸ்திரங்களில் ஆழ்ந்து ஈடுபட்டவர்களக இருந்தனர்.

## *சைதன்ய மஹாபிரபுவை சந்தித்தல்*

அப்போது, நவத்வீபத்தில் நிமாய் பண்டிதர் என்பவர் சந்நியாசம் ஏற்றுள்ளார் என்பதையும், ஸ்ரீசைதன்யர் என்ற பெயரில் ஜகந்நாத பூரியில் வசிக்கிறார் என்பதையும் கேள்விப்பட்டு, மூன்று சகோதரர்களும் ஸ்ரீசைதன்ய மகாபிரபுவை சந்திப்பதற்காக ஆவலை வளர்த்துக் கொண்டனர். சில வருடங்கள் கழித்து, பூரியிலிருந்து விருந்தாவன யாத்திரை செல்ல விரும்பிய சைதன்ய மகாபிரபு, வழியில் தன் அன்னையையும், கங்கையையும் காண வேண்டும் என்பதற்காக வங்காளத்தின் வழியே பயணித்தார்.

சாந்திப்பூரை அடைந்த மகாபிரபு அங்கே அத்வைத ஆச்சாரியாரின் இல்லத்தில் அன்னையை சந்தித்து சில நாட்கள் தங்கியிருந்தார். பின்னர் அவர் இராமகேலி வந்தடைந்தார். மகாபிரபுவின் வருகையை கேள்விப்பட்டு, மூன்று சகோதரர்களும்

அவரை அணுகி, அவரது திருவடியில் தஞ்சமடைந்தனர். மகாபிரபுவும் அவர்களை ஏற்று சனாதனர், ரூபர், அனுபமார் என்று பெயரிட்டார். "ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் இஸ்லாமிய மன்னரின் ஆளுமைக்கு உட்பட்ட பகுதியின் வழியாக விருந்தாவனம் செல்லுதல் உச்சிதமல்ல", என்று சனாதனர் கூற, மகாபிரபுவும் அதனை ஏற்று அங்கிருந்து பூரிக்கு திரும்பினார். அன்றிலிருந்து அவரது தாமரைத் திருவடிகளில் முழுமையாக சரணடைவதற்கான பேராவலும் உறுதியும் அவர்களிடத்தில் பெருகிக் கொண்டே இருந்தன.

## *ஸ்ரீ சைதன்யரிடம் சரணடைதல்*

மகாபிரபு மீண்டும் பூரியிலிருந்து விருந்தாவனத்திற்கு ஜாரிகண்ட் என்ற காட்டின் வழியாக புறப்பட்டு செல்கிறார் என்ற தகவலைப் பெற்றவுடன் ரூபரும், அனுபமாவும் இராமகேலியிலிருந்து விருந்தாவனம் நோக்கி புறப்பட்டனர். சனாதனருக்கு தேவைப்படலாம் என்பதற்காக ரூப கோஸ்வாமி 10,000 தங்கக் காசுகளை ஒரு வணிகரிடம் கொடுத்துவிட்டு, அதனை சனாதனருக்கும் தெரிவித்தார். மகாபிரபு விருந்தாவனத்திலிருந்து திரும்புகையில், அவரை அவர்கள் பிரயாகையில் சந்தித்தனர். ரூப கோஸ்வாமிக்கு ஏழு நாட்கள் உபதேசித்த பின்னர் மகாபிரபு அவரை விருந்தாவனத்திற்கு அனுப்பி வைத்தார்.

ஆனால் வங்காளத்திலிருந்து சனாதன கோஸ்வாமியினால் அவ்வளவு எளிதில் அமைச்சரவையிலிருந்து விலக முடியவில்லை. அனுமதியளிக்க மறுத்த நவாப், சனாதனரை சிறையில் அடைத்துவிட்டு போருக்கு புறப்பட்டார். சனாதனர் ரூப கோஸ்வாமி அளித்த தங்கக் காசுகளில் ஏழாயிரத்தை சிறைக்காவலருக்கு இலஞ்சமாக வழங்கி விட்டு சிறையிலிருந்து தப்பினார். கங்கையைக் கடந்து ஆள் நடமாட்டம் இல்லாத பாதையின் வழியாக மிகுந்த சிரமத்துடன் விருந்தாவனம் நோக்கி பயணித்த சனாதனர் மகாபிரபுவை காசியில் சந்தித்தார். முப்பது நாட்கள் காசியில் தங்கிய மகாபிரபு சனாதன கோஸ்வாமிக்கு பக்தி தத்துவங்களை விரிவாக எடுத்துரைத்த பின்னர், விருந்தாவனத்திற்கு சென்று பின்வரும் நான்கு முக்கிய திருப்பணிகளை மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டார்.

1. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் லீலை புரிந்த இடங்களை

கண்டுபிடித்தல்.

2. விக்ரஹங்களை பிரதிஷ்டை செய்து அன்றாட ஆராதனைக்கு ஏற்பாடு செய்தல்
3. பக்தி சாஸ்திரங்களை தொகுத்து வழங்குதல்
4. பக்தி வாழ்க்கையின் நெறிமுறைகளை பரப்புதல்

## *ரூபகோஸ்வாமியும் சனாதன கோஸ்வாமியும்*

சைதன்ய மகாபிரபுவின் ஆணையை ஏற்று ரூப கோஸ்வாமியும், சனாதன கோஸ்வாமியும் விருந்தாவனம் சென்றனர். அவர்கள் அங்கே தங்களுக்கென எந்தவொரு நிலையான வசிப்பிடத்தையும் ஏற்காமல் மரத்தடிகளில் தங்கினர். விருந்தாவனம் முழுவதும் பயணித்து ராதா- மாதவரின் லீலா-தலங்களை தேடித் கண்டுபிடித்தனர். இவர்கள் நாள் முழுவதையும் சாஸ்திரங்களை எழுதுவதிலும், கிருஷ்ண லீலைகளைப் பேசுவதிலும், கிருஷ்ணரின் திருநாமங்களை உச்சரிப்பதிலும் செலவிட்டனர்.

சனாதன கோஸ்வாமி தினமும் சிறுதளவு கோதுமை மாவை யாசகமாகப் பெற்று, அதனுடன் யமுனை நீரை சேர்த்து சிறு உருண்டைகளாக உருட்டி அதனை அடுப்பில் இட்டு ரொட்டியாக சமைப்பார். உப்பில்லாத அந்த ரொட்டியை அவர் தாம் தினமும் ஆராதிக்கும் ஸ்ரீராதா மதன்மோகனுக்கு நைவேத்தியம் செய்து வந்தார். வங்காளத்தில் பெரும் செல்வந்தராக இருந்த சனாதன கோஸ்வாமி, விருந்தாவனத்தில் எல்லாவித பௌதீக இன்பங்களையும் துறந்து எளிமையாக வாழ்ந்தார். 43 ஆண்டுகள் விருந்தாவனத்தில் வாழ்ந்த சனாதன கோஸ்வாமியை விரஜவாசிகள் சொந்த தந்தையாகவே பாவித்து அன்புடன் பழகினார்கள். அவர் சில நேரங்களில் பொறுமையுடனும் அக்கறையுடனும் கிராமவாசிகளின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பார்.

## *சனாதனர் வழிபட்ட ஸ்ரீ ராதா மதன் மோகன்*

ஒரு நாள் சனாதன கோஸ்வாமி, புருஷோத்தம சௌபே என்பவரின் இல்லத்தில் மதன்மோகன் சௌபேயின் மகனுடன் விளையாடுவதைக் கண்டார். அந்த மதன் மோகன் விக்கிரகம் சனாதன கோஸ்வாமியிடம் தன்னை அவருடன் அழைத்து செல்லுமாறு வலியுறுத்தியது. ஆனால், சனாதன கோஸ்வாமி

தன்னால் மதன்மோகனுக்கு உணவளித்து திருப்தி படுத்த இயலாது என்பதை உணர்ந்தார். தானே உப்பில்லாத சிறிதளவு ரொட்டியை மட்டுமே உண்பதாகக் கூறி, மதன் மோகனை தன்னுடன் அழைத்து செல்ல மறுத்து விட்டார். ஆனால், பகவான் கிருஷ்ணரோ பக்தர்களின் தூய அன்பினால் மட்டுமே திருப்தி அடைபவர்!

அன்று இரவு சௌபேயின் மனைவியின் கனவில் தோன்றி தன்னை சனாதன கோஸ்வாமியுடன் அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். மறுநாள் சௌபேயின் மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்க சனாதன கோஸ்வாமி மதன்மோகனை விருந்தாவனத்திற்கு அழைத்து சென்று, ஒரு சிறு குடிசையில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். தான் உண்ணும் உப்பில்லாத ரொட்டியை அவருக்கு நிவேதனமாக கொடுத்து தானும் உண்டு வந்தார்.

## *உப்பு கேட்ட மதன் மோகன்*

ஒருநாள் மதன்மோகன், சனாதன கோஸ்வாமியிடம், "ஓ பாபாஜி !நீங்கள் எனக்கு கொடுக்கும் ரொட்டியில் சிறிதளவாவது உப்பு சேர்க்கக்கூடாதா?" என்று வினவினார். அதற்கு சனாதனர், "இன்று உப்பு கேட்பீர்கள். நாளை நெய் கேட்பீர்கள். சர்க்கரை கேட்பீர்கள், விருந்து கேட்பீர்கள். நீங்கள் (மகாபிரபுவின் உருவில்) பக்தி சாஸ்திரங்களை இயற்றுமாறு எனக்கு கட்டளை பிறப்பித்துள்ளீர்கள். எனது நேரத்தை நான் அதற்காக அர்ப்பணித்துள்ளேன். நீங்கள் கேட்டதை என்னால் வழங்க இயலாது. என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்கு உப்பு தேவையென்றால் நீங்களே ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்" என்றார்.

மறுநாள், வியாபாரம் செய்வதற்காக மதுராவிற்கு வந்திருந்த கிருஷ்ண தாஸ கபூர் என்பவரின் உப்பு நிரம்பிய பெரிய படகு யமுனை நதியின் மணல் திட்டில் புதைந்து கொண்டது. அவரால் அதனை விடுவிக்க இயலவில்லை. அவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு சிறுவனாக வந்து, மிக அருகில் சனாதன கோஸ்வாமி வசித்து வருவதையும், அவரது உதவியை நாடுமாறும் கூறினார்.

சனாதன கோஸ்வாமியை நமஸ்கரித்து கிருஷ்ண தாஸ கபூர், தனது படகு ஆற்று மணல் திட்டில் மாட்டிக் கொண்டு நகர முடியாமல் நிற்பதை எடுத்துரைத்தார். சனாதனரோ, தனக்கு எதுவும் தெரியாது என்றும், மதன் மோகனிடம் முறையிடுமாறும் அறிவுறுத்தினார். கிருஷ்ண தாஸ கபூர் மதன்மோகனிடம் பணிந்தார். "எம்பெருமானே! உங்களது கருணையால் எனது படகு விடுவிக்கப் படுமானால், படகிலுள்ள பொருட்களை விற்று கிடைக்கும் இலாபம் முழுவதையும் தங்களது சேவையில் அர்ப்பணிப்பேன்" என்று பிராத்தனை செய்தார். உடனே அவரது படகு மணல் திட்டிலிருந்து விடுபட்டு நீரில் மிதக்கத் தொடங்கியது. நல்ல இலாபத்தைப் பெற்ற கிருஷ்ண தாஸா, அந்த பணத்தைக் கொண்டு மதன்மோகனுக்கு ஒரு பெரிய கோயிலைக் கட்டிக் கொடுத்தார். இதுவே விருந்தாவனத்தின் முதல் கோயிலாகும்.

## ஶ்ரீ கிருஷ்ணர் தந்த கோவர்த்தன சிலை

கோவர்த்தனாவில் சக்லேஷ்வரர் என்னும் சிவாலயத்திற்கு அருகில் உள்ள மானஸ கங்கையின் கரையில் சனாதன கோஸ்வாமி சிறிது காலம் தங்கியிருந்தார். இருபத்தி நான்கு கிலோ மீட்டர் கொண்ட கோவர்த்தன மலையை பரிக்கிரமமாக வலம் வருதல் அவரது தினசரி வழக்கம். ஆயினும், வயது முதுமை காரணத்தால் அந்த சேவையை செய்வதில் அவருக்கு சிரமம் ஏற்பட்ட தருணத்தில், அதனை உணர்ந்த ஶ்ரீகிருஷ்ணர் தோன்றி, "பாபாஜி , உங்களுக்கு மிகவும் வயதாகிவிட்டது. கோவர்த்தன மலையை தினமும் வலம் வந்து இத்தனை சிரமங்களை ஏற்க வேண்டாம்" என்று கூறினார். ஆனால், சனாதனர், "இது என்னுடைய அன்றாட வழக்கம். இதனை மாற்ற இயலாது" என்று பதிலுரைத்தார். நித்திய அனுஷ்டானங்களை நிறைவேற்றுவதில் சனாதனர் கொண்டிருந்த உறுதி கிருஷ்ணரை பெரிதும் மகிழ்வித்தது. அதனைத் தொடர்ந்து, ஶ்ரீகிருஷ்ணர் பெரியதொரு கல்லின் மீது ஏறியபடி புல்லாங்குழலை வாசிக்க, அந்தக் கல் உடனே உருகி கிருஷ்ணரின் திருவடிகளை முத்திரையாக தன்னில் பதித்துக் கொண்டது.

ஶ்ரீ கிருஷ்ணர், சனாதனரிடம் அந்தக் கல்லைக் கொடுத்து, "நீங்கள் இந்த கல்லை தினமும் வலம் வந்தால் போதும். இது கோவர்த்தன மலையை வலம் வருவதற்கு ஒப்பானதாகும். உங்களது நித்திய அனுஷ்டானத்திற்கு குறையிருக்காது" என்று

கூறினார். ஸ்ரீகிருஷ்ணரின் தாமரைத் திருவடிகள் பதித்த அந்தக் கல்லை சனாதனர் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார். அந்த கோவர்த்தன சிலையை இன்றும் நாம் விருந்தாவனத்தில் ராதா தாமோதரர் கோயிலில் காணலாம்.

## *சக்லேஷ்வரரின் உதவி*

சனாதனர் தங்கியிருந்த சக்லேஷ்வரர் ஆலயத்திற்குப் பக்கத்தில் நிறைய கொசுக்கள் இருந்ததால் அவரது எழுத்துப்பணி தடைபட்டது. இதனால் அவர் வேறு இடத்திற்கு மாற நினைத்தார். ஆனால் அன்று இரவு சிவபெருமான் அவரது கனவில் தோன்றி, "சனாதனரே, தயவு செய்து இங்கேயே இருந்து தொண்டு புரியுங்கள். உங்களது பஜனையைக் கேட்காமல் என்னால் இருக்க முடியாது. இனிமேல் இங்கே உங்களுக்கு கொசுத் தொல்லை இருக்காது" என்று கூறினார். அதன்பிறகு அங்கு கொசுக்களே இருக்கவில்லை. இப்போதும் கூட இந்த சக்லேஷ்வரர் ஆலயத்தை ஒட்டி கொசுக்கள் எதுவும் இருப்பதில்லை.

## *ஸ்ரீகிருஷ்ணர் கொடுத்த பால்*

ஒருமுறை விருந்தாவனத்தின் உட்பகுதியில் இருந்த சனாதனர், எவ்வித உணவுமின்றி ஸ்ரீ ராதா-கோவிந்தரின் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அப்போது ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு கோபச் சிறுவனின் வடிவில் பால் பானையுடன் சனாதன கோஸ்வாமியின் முன்பு தோன்றி புன்சிரிப்புடன், "ஐயா, உங்களுக்காக சிறிது பால் கொண்டு வந்துள்ளேன்" என்று கூறினான். உடனே, சனாதனர், "சிறுவனே, எனக்காக நீ ஏன் சிரமப்படுகிறாய்?", என்று கேட்டார்.

பதிலாக சிறுவன், "நீங்கள் இங்கு வெகு நாட்களாக உணவின்றி இருப்பதை அறிந்து இந்த பாலைக் கொண்டு வந்துள்ளேன். நீங்கள் இதனை அருந்த வேண்டும். எனக்கு உட்கார நேரமில்லை. இப்போதே பொழுது சாய்ந்து விட்டது. நான் போய் இனிமேல் தான் பால் கறக்க வேண்டும்" என்று கூறி உடனடியாக அங்கிருந்து மறைந்து விட்டான். சனாதன கோஸ்வாமி நிமிர்ந்து பார்த்தபோது அங்கே யாரும் இல்லை. வந்தவர் ஸ்ரீகிருஷ்ணர் தான் என்பதை புரிந்து கொண்டு ஆனந்தக்

கண்ணீருடன் அந்தப் பாலைப் பருகினார்.

## *சனாதன கோஸ்வாமியின் வைபவங்கள்*

சைதன்ய மகாபிரபுவிற்கு மிகவும் பிரியமானவரான சனாதன கோஸ்வாமி, துன்பப்படும் ஆத்மாக்களின் மீது மிகுந்த கருணை கொண்டிருந்தார். ஸ்ரீமதன் மோகனின் தாமரைத் திருவடிகளில் அனைவருக்கும் அடைக்கலம் பெற்றுத் தருவதால், இவர் சம்பந்த ஆச்சாரியாராகக் கருதப்படுகிறார். ஸ்ரீசைதன்யரின் ஆணைக்கிணங்க இவர் எண்ணற்ற புத்தகங்களை எழுதியுள்ளார். அவற்றில் ஸ்ரீபிருஹத் பாகவதாமிர்தம், ஸ்ரீ ஹரிபக்தி விலாசம், திக் தர்ஷினி தீகா, ஸ்ரீகிருஷ்ண லீலாஸ்தவ, ஸ்ரீபாகவத திபானி, ப்ருஹத் வைஷ்ணவ தோஷணி ஆகியவை மிகவும் முக்கியமானவை.

# அத்தியாயம் 1

## *ஸ்ரீமத் பாகவதமும் பிருஹத் பாகவதாமிர்தமும்*

ஷமீக ரிஷியின் மகனான ஷ்ருங்கி, இறந்த பாம்பினை தன் தந்தையின் கழுத்தில் போட்ட பரீட்சித் மகாராஜாவுக்கு, ஏழு நாட்களில் தட்சகன் என்னும் பாம்பினால் தீண்டப்பட்டு இறந்து விடுவான் என சாபம் கொடுக்கிறான். சாபத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட பரீட்சித் மகாராஜா, தன் ராஜ்ஜியத்தின் பொறுப்பை தன் மகன் ஜனமே ஜயனிடம் ஒப்படைத்து விட்டு, பகவான் கிருஷ்ணரின் தாமரைப் பாதங்களில் மனதினைப் பதிக்க கங்கைக் கரையில் அமர்ந்தார். அங்கு ஸ்ரீசுகதேவ கோஸ்வாமி ஸ்ரீமத் பாகவதத்தைக் கூறினார். வேதங்கள், வேத சூத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் போன்ற அனைத்து சாஸ்திரங்களின் சாரமாக விளங்குவது ஸ்ரீமத் பாகவதம்.

பரீட்சித் மகாராஜா, சுகதேவ கோஸ்வாமியிடமிருந்து பாகவதம் கேட்டதுமே, அவரது பயம் (இறப்பு குறித்த) நீங்கியது. அது மட்டுமன்றி, நாம் அடைய வேண்டிய இலக்கான தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் அனைத்தையும் துறந்தார். பகவான் கிருஷ்ணரிடம் பிரேமை அவருக்கு வந்துவிட்டது.

பிருஹத் பாகவாமிர்தம் என்னும் சாஸ்திரம், பாற்கடலைக் கடைந்தது போல ஸ்ரீமத் பாகவதத்தை கடைந்தெடுத்த அமிர்தமாகும். இந்த அமிர்தம், முதலில் பரீட்சித் மகாராஜாவின் தாயார் உத்தராவிற்கு பரீட்சித் மகாராஜாவினால் பேசப்பட்டு, அதைக்கேட்ட ஜைமினி ரிஷியினால் பின்னர் பரீட்சித் மகாராஜாவின் மகனான ஜனமேஜயனுக்கு கூறினார்.

## *பிருஹத் பாகவதாமிர்தம் உருவான சூழல்*

ஏழுநாட்கள் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்டு முடித்து விட்டார் பரீட்சித் மகாராஜா. அவர் இன்னும் சிறிது நேரத்தில் தட்சகன் என்னும் பாம்பினால் தீண்டப்படுவார். இந்த சமயத்தில் உத்தரா தேவி தன் மகனைக் காண விரும்பி, தன்னை வந்து சந்திக்குமாறு செய்தி கூறி அனுப்புகிறாள். அதன் படி பரீட்சித் மகாராஜா தன் அன்னை இருக்கும் இடத்திற்கு செல்கிறார்.

அப்போது ஸ்ரீசுகதேவ கோஸ்வாமி, அவருடன் ஜைமினி ரிஷியையும் அனுப்புகிறார். பரீட்சித் மகாராஜாவிற்கும் உத்தரா தேவிக்கும் நடக்கும் உரையாடல் முக்கியமானது. அது உலகிற்கு மிகவும் தேவையானதும் கூட. அந்த உரையாடல் பின்னர் ஜனமேஜெயனுக்கும், உலக மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக உரையாடலை கவனமாக கேட்டு வருமாறு ஸ்ரீசுகதேவ கோஸ்வாமி ஜைமினி ரிஷிக்கு கட்டளையிடுகிறார்.

பரீட்சித் மகாராஜாவை தனியிடத்தில் சந்தித்த உத்தரா தேவி, தன் மகன் இன்னும் சிறிது நேரத்தில் இறக்கப் போகிறான் என்ற கவலையுடன் இருந்தாலும், பரீட்சித் மகாராஜாவிடம் கேட்கிறாள். "நீ ஏழு நாட்கள் சுகதேவ கோஸ்வாமியின் வாயிலிருந்து கேட்டாயே! அந்த பாகவதத்தின் சாரத்தை எனக்கு கூற வேண்டும். இப்போது ஏழு நாட்கள் இல்லை. சிறிது நேரமே உள்ளது. எனவே, மந்தார மலையை மத்தாகக் கொண்டு பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தது போல, ஸ்ரீமத் பாகவதத்தைக் கடைந்து அந்த அமிர்தத்தை எனக்குக் கூறு" என்று கேட்கிறாள். பரீட்சித் மகாராஜா உத்தராவிற்கு கூறுகிறார். அவற்றை ஜைமினி முனிவர் கவனமாக கேட்டுக் கொண்டிருக்கிறார். பின்னர் அவர் ஜனமேஜெயனுக்கு கூறினார்.

ஜைமினி முனிவர் வியாசதேவரின் சீடராவார். சாம வேதத்தைக் கற்பிப்பதில் சிறந்தவர் ஜைமினி முனிவர். பகவான் ஸ்ரீகிருஷ்ணர், "வேதங்களில் நான் சாம வேதம்" என்கிறார். வியாசதேவர் வேதங்களை நான்காகத் தொகுத்தபின், ஒவ்வொரு வேதத்தையும் தனது முக்கியமான சீடர்களுக்கு வழங்கி அவரவர் வழியில் வருபவர்களுக்கு அந்தந்த வேதத்தைப் போதிக்க வழி வகுத்தார். அந்த வகையில், ரிக் வேதத்தை பைலரும், யசூர் வேதத்தை வைசம்பாயனரும், சாம வேதத்தை ஜைமினி முனிவரும், அதர்வண வேதத்தை சமத்துவும் போதித்தனர். இங்கு ஜைமினி முனிவருக்கு பிருஹத் பாகவதாமிர்தத்தை கேட்கும் பாக்கியமும் கிடைத்தது.

## *பௌமா (பூமி கிரகம்)*

ஒரு சமயம், மாசிமகம் என்ற புனிதமான மாதத்தில் ஏராளமான சாதுக்கள் பிரயாகை என்னும் புண்ணிய ஷேத்திரத்தில் ஒன்று கூடினர். அங்கு பஞ்ச பிரயாகை என்ற இடம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த இடத்தில் யமுனை, கங்கை,

மந்தாகினி போன்ற புண்ணிய நதிகள் ஒன்று சேரும். இங்கு தேவ பிரயாக், ருத்ர பிரயாக், கர்ண பிரயாக், நந்த பிரயாக், விஷ்ணு பிரயாக் என்ற ஐந்து நதிகளும் கலக்கும் இடம் பஞ்ச பிரயாகை எனப்படும். அந்த புண்ணிய தலத்தில் சாதுக்கள் அனைவரும் அதிகாலையில் நீராடினர். பின் அங்குள்ள ஸ்ரீராதா மாதவரை மகிழ்ச்சியுடன் வழிபட்டனர்.

பின் ஒவ்வொரு சாதுக்களும் மற்ற சாதுக்களை புகழ்ந்து கொண்டனர். "நீங்கள் எத்தனை அழகாக பக்தி செய்கிறீர்கள்! பகவானின் கருணை உங்களிடம் கொட்டிக் கிடக்கிறது" என ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொண்டனர். அப்போது நாரதரும் அங்கு வந்து சேர்கிறார்.

## *பிராமணரின் வருகையும், அவரது வழிபாடும்.*

அப்போது அங்கு "தசாஸ்வமேத காட்" என்னும் படித்துறைக்கு ஒரு பிராமணர் வந்தார். அவர் அந்த பகுதிக்கு தலைமைப் பிராமணர். செல்வமும், செல்வாக்கும் மிக்கவராக இருந்தார். சக பிராமணர்கள் புடைசூழ வந்த அந்த பிராமணர், மிகவும் பக்தியில் மூழ்கியவராக இருந்தார். அங்கு பிரசாதம் சமைப்பதற்குத் தேவையான ஏராளமான பொருட்களோடு வந்த சக பிராமணர்கள், அங்கு சமைக்க ஆரம்பித்தனர்.

அந்த பிராமணர், தன் அன்றாட கிரியைகளை செய்தார். பின்னர் பூஜைக்கு தயாரானார். ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து தூய்மைப் படுத்தினார். பின் தன் கைகளால் சாணத்தால் மெழுகினார். பின் விக்கிரக வழிபாட்டிற்காக ஒரு மேடையை தயார் செய்து, அதை அலங்காரம் செய்தார். மேடைக்கு மேலே அழகிய பந்தல் ஒன்றை அமைத்தார். மேடையில் ஒரு அழகிய சாலக்கிராம சிலையை வைத்து, அதையும் அலங்கரித்தார். பின் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் நாமங்களை ஜெபித்து பாடி ஆட ஆரம்பித்தார்.

வழிபாட்டு விதிமுறைகளுக்கு ஏற்ப அர்க்கியம், புத்தாடை, பிரசாதம், போன்றவற்றை பகவானுக்கு அளித்து வழிபட்டார். வழிபாட்டு விதிமுறைகளுக்கு ஏற்ப அவர் வழிபட்டது மட்டுமன்றி, மிக்க மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் பகவானை பாடி ஆடினார். பக்தியில், பக்தனின் மன நிலை மிகவும் முக்கியமானது. வேண்டாத எண்ணங்களிலிருந்து விடுபட்டு, மகிழ்ச்சியோடு

பகவானை வழிபட வேண்டும். அந்த மனநிலை அந்த பிராமணரிடமிருந்தது. தன்னை மறந்து, தன்னை சுற்றியிருப்பவர்களை மறந்து மகிழ்ச்சியுடன் பகவானைப் பாடி ஆடினார்.

பகவானுக்கு விதம் விதமாக உணவினை நிவேதனம் செய்தார். பின் அந்த பிரசாதத்தை அனைவருக்கும் கொடுத்தார். முதலில் சந்நியாசிகளுக்கும், பின் கிரஹஸ்தர்களுக்கும், வேத, புராணங்களை கற்றறிந்த பண்டிதர்களுக்கும் கொடுத்தார். பின் அவர்களுக்கு பாத பூஜை செய்து, அந்த நீரை தலையில் தெளித்துக்கொண்டார். அவர்களது பாதங்களில் தன் தலை படுமாறு விழுந்து வணங்கினார். அனைவருக்கும் பிரசாதம் கொடுத்தார். நான்கு வர்ணங்களிலும் வராத சண்டாளர்களுக்கும் பிரசாதம் கொடுத்தார். பின் நாய், நரி போன்ற விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பிரசாதம் அளித்தார். பின்னர் மிஞ்சிய பிரசாதத்தினை தன் உறவினர்களுடன் மகிழ்ச்சியாக உண்டார். பின்னர் பகவானின் சாலக்கிராம சிலையை ஒரு அழகிய பேழையில் வைத்து மூடி தன் இல்லத்திற்கு செல்ல தயாரானார்.

அப்போது சாதுக்களின் கூட்டத்திலிருந்து பிராமணரின் செயல்களைப் பார்த்துக்கொண்டிருந்த நாரத முனிவர் ஓடோடி வந்து, உரத்த குரலில் "இந்த மஹாஷாயா மட்டுமே பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமானவர்" என்று கூறியதோடு, பகவத் பக்தியில் பேரார்வம் கொண்ட அவர், அந்த பிராமணரை புகழ ஆரம்பித்தார்.

## *நாரதரின் புகழுரை*

நாரதர் கூறினார், "ஓ, பிராமணர்களின் தலைவரே! நீங்கள் தான் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமானவர். இந்த புண்ணிய தீர்த்தமான பிரயாகையில், உங்களது செல்வம், செல்வாக்கு, ஐஸ்வரியங்கள், வைபவங்கள் அனைத்தையும் கண் கூடாகப் பார்த்தேன்! பகவானின் கருணைக்குப் பாத்திரமாவதற்கான தகுதி உங்களுக்கு இருக்கிறது. உங்கள் செல்வம், செல்வாக்கு, ஐஸ்வரியங்கள், வைபவங்கள், குடும்பம், தொண்டர்கள் சக்தி அனைத்தையும் பகவானின் சேவையில் ஈடுப்படுத்துகிறீர்கள்!சனாதன தர்மத்தினை நிலை நிறுத்தினீர்கள்! மிக அழகாக பகவானுக்கு பக்தி சேவை செய்கிறீர்கள்", என்று புகழ்ந்தார்.

## *பிராமணரின் வெட்கமும் - பதிலும்*

நாரத மகரிஷி கூறியதைக்கேட்ட பிராமணர், மிகவும் வெட்கம் அடைந்தார். நாரதர் கூறியதைப் போல தனக்கு, பகவானின் கருணையைப் பெறுவதற்கான தகுதி எதுவுமில்லையே என வருத்தப் பட்டார். பின் நாரத முனிவரிடம் பேசலானார்.

*வித்வத்- வரினே தினோக்தோ*
*நன்வ் இதம் ச மஹா- முனி:*
*ஸ்வாமின் கிம் மயி க்ரிஷ்ணஸ்ய*
*க்ருபா- லக்ஷணம் ஈக்ரிதம்*
*(பிருகத் பாகவதாமிர்தா - 1.43)*

"ஓ, பிரபுவே, நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? என்னிடம் பகவானின் கருணைக்கான என்ன அறிகுறியைக் கண்டீர்கள்? நீங்கள் என்னைப்பற்றி கூறினீர்களே, அதற்கு தகுதியான நபர் நான் இல்லை. தானம் பற்றி கூறினீர்களே, நான் அப்படி என்ன தானத்தை செய்து விட்டேன்? என்னிடம் இருப்பதெல்லாம் ஒரு செல்வமா? என்னிடம் என்ன ஐஸ்வரியங்கள் இருக்கின்றன? என்னிடம் பகவான் பக்தி எங்கே இருக்கிறது? இல்லையே!", என மிகவும் வருத்தப்பட்டார்.

வர்ணாஸ்ரம தர்மத்தின்படி, பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் வழிபாட்டு நெறிமுறைகளை செயல்படுத்துவதும், பகவானுக்கு எவ்வாறு சேவை செய்ய வேண்டும் என்பதை மக்களுக்கு அறிவுறுத்த வேண்டியதும் பிராமணர்களின் கடமையாகும். அந்த பிராமணரின் கடமையை மட்டுமே, தான் செய்ததாகவும், பகவானிடம் தான் பக்தி செய்யவில்லை எனவும் பிராமணர் நினைத்தார். பகவான் கிருஷ்ணரிடம் மிகுந்த பக்தி கொண்டவர், மற்றும் பகவானின் கருணைக்கு பாத்திரமானவர் ஒரு தென்னிந்திய அரசன் இருக்கிறார். அவரிடம் செல்லுங்கள் என்று கூறிய பிராமணர் தென்னிந்திய அரசனின் மகிமைகளையும், அவரது பக்தி சேவையையும் நாரதருக்கு எடுத்துரைத்தார்

## *பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமான தென்னிந்திய அரசன்*

தென்னிந்திய அரசர் ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவாக இருந்தார். இந்த அரசனுக்குக் கீழே, பல குறுநில மன்னர்கள் இருந்தனர். அதனால் அவருக்கு 'சர்வ பௌமா' என்ற பட்டமும்

இருந்தது. அவரது ராஜாங்கத்தில் ஏராளமான கோயில்களை கட்டி வைத்திருக்கிறார். கிருஷ்ண பக்தியில் அவர் மிகவும் சிறந்து விளங்கினார்.

*ஹிந்து தக்ஷிண-தேஷே*
*யோ மஹாராஜோ வ்ரஜதே.*
*ஸ ஹி க்ருஷ்ண-க்ருபா-பாத்ரம்*
*யஸ்ய தேஷே ஸுராலயா:*
*ஸர்வதோ பிக்ஸாவோ யாத்ரா'*
*தைர்திகா ப்யாகதாதய:*
*க்ரிஷ்ணார்பிதான்னம் புஜ்ஞனா*
*ப்ரம்மாந்தி:சுகின: ஸதா:*

*(பிருஹத் பாகவதாமிர்தம் : 1.45-1.46)*

அந்த தென்னிந்திய ராஜாவே பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்கு மிகவும் பாத்திரமானவர். அவரது ராஜ்ஜியத்திற்கு தினமும் ஏராளமான யாத்திரீகர்கள் வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு ஏராளமான சத்திரங்களும், அவர்களின் உணவிற்கு பிரசாதமும் ஏற்பாடு செய்கிறார். எல்லா கோயில்களிலும், எப்போதும் பிரசாதம் கிடைக்க வழி செய்கிறார். உலகில் எங்கிருந்து வந்தாலும், யாத்திரீகர்கள் எந்த செலவுமின்றி பிரசாதமும், தங்குமிடமும் கிடைத்ததால், ஏராளமான யாத்திரீகர்கள் தினமும் வந்த வண்ணம் இருக்கின்றனர்.

மன்னனின் அரண்மனைக்குப் பக்கத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஆலயம் பெரிதாகக் கட்டப்பட்டுள்ளது. அந்த ஆலயத்தில் உள்ள சச்சிதானந்த விக்கிரகம் பகவானே நேரடியாக வந்து நிற்பது போல உள்ளது. அந்த விக்கிரகத்தைக் காண பிற பகுதிகளிலிருந்து சாதுக்களும், சந்நியாசிகளும், வைஷ்ணவர்களும் வந்து குவிகின்றனர். தினமும் புதிது புதிதாக பெரிய அளவில் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. பகவான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான அழகுடன் விளங்குகிறார். ஒவ்வொரு வேளையும் வெவ்வேறு விதமான நிவேதனங்கள் பகவானுக்கு அளிக்கப்படுகின்றன. பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட பிரசாதம் எப்போதும் பக்தர்களுக்கு வழங்கப்படுகின்றன. எனவே, யாத்ரீகர்களும் அங்கு வந்து நிரந்தரமாக வசிக்க விரும்புகிறார்கள்.

பிற பகுதிகளிலிருந்தும், மற்ற நாடுகளில் இருந்தும்

பக்தர்களும், சாதுக்களும், சந்நியாசிகளும் இங்கு வந்து தங்குவதால், இங்குள்ள மக்களுக்கு நல்லதொரு சத்சங்கம் கிடைக்கிறது. மற்றும் இந்த மன்னன் தன்னுடைய நாட்டையே பகவானின் விக்கிரகங்கள் பேரிலும், பிராமணர்கள் பேரிலும் எழுதி வைத்துள்ளார். அங்கு மக்களுக்கு துக்கமோ. பயமோ எதுவுமே இல்லை. மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர்.

பருவ காலங்களில் எவ்வளவு மழை தேவையோ, அந்த அளவு பெய்கிறது. அதிக மழையினால் சேதம் கிடையாது. மழை குறைவால் வறட்சியும் கிடையாது. விளைச்சல் அமோகமாக இருக்கிறது. விதை விதைத்தால் மட்டுமே போதும், தானாகவே அமோகமான விளைச்சல் கிடைக்கிறது.

அந்த அரசன் அச்சுதப் பிரியராக இருக்கிறார். அவரே தன் கைகளால் பகவானின் ஆலயத்தை சுத்தம் செய்கிறார். அவரைப் பார்த்து நாட்டு மக்களும் எவ்வித அகங்காரமும் இன்றி பகவானுக்கும், மக்களுக்கும் சேவை செய்கின்றனர். தன் சகோதரர்கள், மனைவி, குழந்தைகள், சேவகர்கள், மந்திரிகள், உறவினர்கள் அனைவரும் பகவானின் பெருமைகளை இசைக்கருவிகளால் இசைத்து, பாடியும் ஆடியும் நாம சங்கீர்த்தனம் செய்து பகவானை மகிழ்விக்கின்றனர். அந்த நாட்டில் மன்னன் முதல் மக்கள் வரை அனைவரும் பகவானை திருப்திப் படுத்துவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். மன்னனுக்கு எந்த கர்வமுமில்லை; அதேபோல் மக்களுக்கும் எந்த விதமான கர்வமும் இல்லை. இந்த துன்பம் மிகுந்த ஜட வாழ்க்கையிலிருந்து அவர்கள் விடுபட மட்டும் விரும்புவதால், அவர்கள் பகவானை திருப்திப் படுத்துவதை மட்டுமே இலக்காகக் கொண்டுள்ளனர். இவ்வாறு பிரயாகை பிராமணர் கூறியதைக் கேட்டதும், மகிழ்ச்சியுடன் வீணையை மீட்டுக் கொண்டே நாரத முனிவர் தென்னிந்திய அரசரிடம் வந்தார்.

இப்போது பரீட்சித் மகாராஜா தன் தாய் உத்தராவிடம் கூறுகிறார்: வீணையை மீட்டியவாறு நாரதர் தென்னிந்திய ராஜாவைக் காண அவருடைய நாட்டிற்கு சென்றார். அவர் செல்லும்போது, அவருடைய பிரஜைகள் ஒவ்வொருவரும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பக்தி சேவையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டார்.

தன்னுடைய வீணையை மகிழ்ச்சியுடன் வாசித்த நாரதர், அந்த நாட்டின் தலைநகரினுள் நுழைந்தார். பிரயாகை பிராமணர் கூறியதை விட அதிக ஐஸ்வரியங்களையும், வைபவங்களையும்

கண்டார். அரசனுக்கு பக்கத்தில் சென்று பேச ஆரம்பித்தார். மன்னனைப் புகழ்ந்து, 'பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் நீங்களே! இதை நான் நேரடியாகப் பார்க்கிறேன். உங்கள் பிரஜைகள் எத்தனை அழகாக பக்தி சேவை செய்கிறார்கள்! உங்கள் இந்த ராஜ்ஜியம், செல்வத்தாலும், அறிவாலும், பக்தியாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது!" என்று கூறினார்.

## *தென்னிந்திய அரசன் வெட்கப்பட்டார்*

நாரதரின் புகழுரையைக் கேட்ட அரசன் வெட்கப்பட்டு, கூனி குறுகி, "நான் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் அல்ல. அதற்குத் தகுதியானவனும் அல்ல. என்னிடம் இருக்கும் ஐஸ்வரியங்கள் ஒரு அளவிற்கு உட்பட்டது. என் வாழ்நாள் மிகவும் குறைவு. நான் பயத்தில் இருக்கிறேன். அதி ஆத்மிகா, அதி பௌதீகா, அதி தெய்விகா என்னும் மூவகைத் துன்பங்களால் துன்பப்படுகிறேன். பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் என்று கூறுவது எனக்குப் பொருந்தாது. செல்வம் இருந்து என்ன பயன்? பிறப்பு, இறப்பு சக்கரத்தில் சிக்கி தவிக்கின்றேன். நான் இருக்கும் இந்த ஜட உலகம் மிகவும் மோசமானது. அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரியாது." என்று கூறினார்.

## *ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமானவர்கள் தேவர்களே!*

அவர் மேலும் கூறினார், "தேவர்களுக்கு மட்டுமே பகவானின் கருணை முழுவதும் கிடைத்திருக்கிறது. ஏனென்றால், அவர்கள் மனிதர்களால் வழிபடப்படுகிறார்கள். எப்போதும் சத்வ குணத்தில் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். அவர்கள் தெய்வீக ரதங்களில் ஆகாயத்தில் சுதந்திரமாக பயணம் செய்கிறார்கள். அவர்கள் தங்களை வழிபடுபவர்களுக்கு வரங்களை அள்ளி வழங்குகிறார்கள்.

*யேஷாம் ஹி போக்யம் அம்ர்தம்*
*ம்ருத்யு - ரோக ஜராதி - ஹ்ர்த்*
*ஸ்வேச்சயோபநாதம் க்ஷீத் - த்ருத்*
*பாதா பாவே அபி துஸ்தி - தாம்*
*(பிருஹத் பாகவதாமிர்தம் : 1.68)*

"அவர்கள் தினமும் தேவ அமிர்தம் உண்பதால் இறப்பு கிடையாது. மூப்பு, பிணி கிடையாது. பசி, தாகம் கிடையாது. பகவானுக்கு அளிக்கப்படும் யக்ஜத்திலும் அவர்களுக்கு பிரசாதம் கிடைக்கிறது. அவர்களின் நல்லதிர்ஷ்டத்தால் அவர்கள் சொர்க்கலோகத்தில் இருக்கிறார்கள். பரத வர்ஷம் எனப்படும் இந்த பூமியில் வசிப்பவர்களும் கூட, ஏராளமான புண்ணிய செயல்களை செய்தால் மட்டுமே அங்கு செல்ல இயலும்,

## *பகவானின் கருணையை முழுவதும் பெற்றவன் இந்திரனே!*

"சொர்க்கலோகத்தில் உள்ள தேவர்களிலும், 'புரந்தரா' என்று அழைக்கப்படும் இந்திரனே முதன்மையானவன். அவன் மூவுலகங்களுக்கும் அதிபதி, மற்றும் மூவுலகங்களையும் அவனே கட்டுப்படுத்துபவன். இந்த பூவுலகிற்கு மழையைக் கொடுப்பவன் அவன். என்னைப் போன்ற அரசர்கள் நூறு அஸ்வமேத யாகங்கள் செய்தாலும் இந்திரன் போல ஆக முடியாது. எழுபத்தியொரு சதுர் யுகங்கள் இந்திரன் தன் மகத்தான இந்திர பதவியில் இருக்கிறான்" என்று தென்னிந்திய அரசன் கூறினார். மேலும்,

*ஹைய யுச்ஷிஷ்ரவா யஸ்ய*
*கஜா ஐராவதோ மஹான்*
*காம- துக் கெளர் உபவனம்*
*நந்தனம் ச விராஜதே*
*(பிருஹத் பாகவதாமிர்தம் - 1.72)*

"பாற்கடல் கடையும் போது வந்த உச்சிஷ்ரவா என்னும் குதிரை, ஐராவதம் என்னும் யானை, காமதேனு பசு மற்றும் நந்தன கானகம் என்னும் தோட்டம் அனைத்தும் இந்திரனிடமே உள்ளது. அந்த நந்தன கானகத்தில் கேட்டதைக் கொடுக்கும் பாரிஜாத மரங்களும், காம-ரூப தாரக் கொடிகளும், கற்பக விருட்சங்களும் ஏராளம் உள்ளன. இத்தனை ஐஸ்வரியங்களுக்கும், வைபவங்களுக்கும் இந்திரனே எஜமானன். இதைவிட மேலும் கூற என்ன இருக்கிறது?

## *விஷ்ணுவே வாமன தேவராக அங்கு இருக்கிறார்!*

"அது மட்டுமா, விஷ்ணு, வாமன தேவராக, அவரது இளைய

சகோதரனாக அவருடன் இருக்கிறார் (அதிதியின் வயிற்றில் பிறந்ததால்). இந்திரன் கொடுக்கும் நிவேதனங்களை நேரடியாக வாமன தேவர் பெற்றுக் கொள்கிறார். அது மட்டுமா?

*ஆபத்ப்யோ யம் அஸெள ரக்ஷன்*
*ஹர்ஸயன் ஏன விஸ்த்ராம்*
*ஸாக்ஷாத் ஸ்வீ - க்ருதே பூஜாம்*
*தத் வேத்ஸி த்வாம் யுதாபரம்*
*(பிருஹத் பாகவதாமிர்தம் -1.76)*

"இந்திரனுக்கு ஆபத்து வரும்போது வாமன தேவர் அவரை பாதுகாக்கிறார். நாரதரே! இது அனைத்தும் உங்களுக்குத் தெரியுமே! பலிமகாராஜா இந்திரனின் ஆசனத்தைக் கைப்பற்றும்போது, வாமனராக வந்து இந்திரனைக் காப்பாற்றி, இந்திர பதவியை மீட்டுக்கொடுத்தாரே! இதை விட நான் சொல்ல என்ன இருக்கிறது நாரதரே!

"எனவே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் இந்திரனே!" என்று தென்னிந்திய அரசன் கூறியதைக் கேட்ட நாரதரிஷி இந்திர லோகம் செல்ல தயாரானார்.

# அத்தியாயம் 2

## *திவ்யா - சொர்க்கலோகம்*

பிரயாகையிலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்த நாரத ரிஷி, தென்னிந்திய அரசன் கூறியதைக் கேட்டதும் இந்திரனின் சொர்க்கலோகத்திற்குப் புறப்பட்டார். இந்த செய்தியை பரீட்சித் மகாராஜா, தன் தாயார் உத்தராவிற்குக் கூறிக் கொண்டே வருகிறார்.

## *சொர்க்கலோகத்தில் நாரதர்*

சொர்க்கலோகத்திற்கு வந்த நாரதர், அங்கு இந்திரனின் சபையில், தேவர்கள் புடை சூழ விஷ்ணு பகவான் (வாமனர்) அமர்ந்திருப்பதைக் கண்டார். தனக்கு வாமனதேவரை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்ததை நினைத்து பெருமகிழ்ச்சி அடைந்தார். வாமனரின் ரூபம் மிக்க அழகுடன் விளங்கியது.

*விசித்ர - கல்ப- த்ரும - புஷ்ப மாலா - விலிப -*
*பூஸா - வாஸந்தாம்ர்தாயை :*
*சமர்ஸிதம் திவ்ய தரோபசாரை:*
*ஸுகோ பவிஷ்டம் கருடாஸ்ய ப்ரஸ்தே*
*(பிருகத் பாகவதாமிர்தா: 1.2.2)*

பறவைகளுக்கு அரசனாகிய கருடனின் முதுகில் அமர்ந்தவாறு, தேவர்கள் அளிக்கும் நிவேதனங்களை பகவான் ஏற்றுக் கொள்வதையும், சந்தனம் பூசிய உடலினை உடையவராய், மஞ்சள் நிற ஆடையில் அவர் பிரகாசமாக மின்னுவதையும் நாரதர் கண்டார்.

கற்பக மரத்தின் மலர்களால் ஆன மாலை, அழகிய ஆடை, ஆபரணங்கள் மற்றும் அமிர்தம் போன்ற நிவேதனங்களை தேவர்கள் விஷ்ணுவிற்கு அளித்து சேவை செய்கின்றனர். பதினாறு விதமான அல்லது அறுபத்தி நான்கு விதமான நிவேதனங்கள் அளிக்கப்படுவதாக 'விஷ்ணு-பக்தி-சந்த்ரோதயா' என்னும் சாஸ்திரம் வாயிலாக நாம் அறிகிறோம்.

*ப்ரஹஸ்பதி - ப்ரபூர்த்திபி:*
*ஸ்தூயமானம் மஹாரிஷிபி:*
*லால்யமானம் அதித்யா தான்*
*ஹர்ஷயாந்தம் ப்ரியோக்திபி*
*(பிருஹத் பாகவதாமிர்தா: 1. 2. 3)*

தேவர்களின் ஆன்மீக குருவான பிரகஸ்பதி முதலான சாதுக்கள் விஷ்ணுவின் மகிமைகளைக் கூறி புகழ்கின்றனர். வாமன தேவரின் தாயாராகிய அதிதி மாதா, ஆசையுடன் வாமன தேவரின் தலையை வருடிக் கொடுக்கின்றார். அந்த வருடலில் வாமன தேவர் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்.

சித்தர்கள், வித்தியாதரர்கள், கந்தர்வர்கள், அப்ஸராக்கள் போன்றோர் பகவானை துதித்து பாடுகின்றனர். சொர்க்கலோகத்தில் இருக்கும் அவர்கள் பகவானை மகிழ்ச்சிப் படுத்த இவ்வாறு செய்கின்றனர். சித்தர்கள் "ஜெய ஜெய" என பிராத்தனைகளை செய்கின்றனர். வித்தியாதரர்கள் இசைக்கருவிகளை இசைத்துப் பாடுகின்றனர். கந்தர்வர்கள் இனிமையான குரலில் பாடுகின்றனர். அப்ஸரசுக்கள் இசைக்கேற்ப நடனம் ஆடுகின்றனர். வாமன தேவரின் அம்மா, அதிதி செல்லமாக வாமனதேவரின் தலையை வருடிக் கொடுக்கின்றார்.

விஷ்ணு பகவான் இந்திரனிடம் 'அசுரர்களுக்காக பயப்படாதே' என உரத்த குரலுடன் உறுதி அளிக்கிறார். விஷ்ணு பகவானின் மனைவியாகிய கீர்த்தி தேவி தாம்பூலம் கொடுக்கிறார். இவர் மந்தார மலையை மத்தாகக் கொண்டு பாற்கடலைக் கடையும்போது தோன்றிய லட்சுமி தேவி ஆவார்.

"பகவானின் கருணையை முழுவதும் பெற்றவன் இந்திரன்", என்று தென்னிந்திய அரசன் கூறியதைக் கேட்டு, இந்திரலோகத்திற்கு வந்த நாரதருக்கு வாமனதேவரின் தரிசனம் கிடைத்தது மட்டுமன்றி, தனது கருணையையும், பாதுகாப்பையும் இந்திரனுக்கு கொடுத்துக் கொண்டிருந்ததையும் நேரடியாகப் பார்த்தார். நாரதர் எல்லா லோகங்களுக்கும் சஞ்சாரம் செய்பவர். அவருக்கு அனைத்து லோகங்களைப் பற்றியும் தெரியும். இருந்தாலும், தென்னிந்திய அரசன் 'பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் இந்திரன்' என்று கூறியதை நேரில் பார்க்கவே இங்கு வந்தார். இந்திரன் எல்லா வழிபாடுகளையும், நிவேதனங்களையும் வாமனதேவருக்குக் கொடுத்துக்

கொண்டிருப்பதையும், அவர் அதைப் பெற்றுக் கொள்வதையும், நாரதர் கண் கூடாகப் பார்த்தார். அவர் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் இந்திரனே என்ற முடிவிற்கு வந்து விட்டார்.

தேவராஜன் இந்திரன், வாமனதேவருக்கு அருகில் தன் ஆசனத்தில் அமர்ந்து பகவானின் நாமங்களை ஜெபித்துக் கொண்டும், மகிமைகளை பாடிக் கொண்டும் இருந்தார். முன்னர் பலி சக்கரவர்த்தி, இந்திர பதவியிலிருந்து இந்திரனை விரட்டி விட்டு அசுரர்களை பதவியில் வைத்தார். இந்திரன், சந்திரன் போன்ற அனைத்து பதவிகளிலும் அசுரர்கள் நியமிக்கப்பட்டனர். வாமனதேவர் பலி சக்கரவர்த்தியிடமிருந்து இந்திர பதவியையும், பிற தேவர்களின் பதவிகளையும் மீட்டுக் கொடுத்தார். அதை இந்திரன் கருணையுடன் நினைத்துப் பார்த்தான். அவனது ஆயிரம் கண்களிலிருந்தும் கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது.

இப்போது வாமனதேவர் சொர்க்கலோகத்தில் இருக்கும் தனது அரண்மனைக்குப் புறப்பட்டார். இந்திரன் அவருடனேயே சிறிது தூரம் சென்று வழியனுப்பி வைத்த பின்னர், தனது ஆசனத்தில் அமர்ந்தான். இப்போது நாரதர் பேச ஆரம்பித்தார். ஏனெனில், பகவான் முன்பு வேறு யாரையும் புகழக்கூடாது. எனவே, நாரதர் இப்போது இந்திரனைப் புகழ ஆரம்பித்தார்.

## *பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் இந்திரனே!*

இந்திரனுக்கு விஷ்ணுவின் கருணை கிடைத்திருப்பதை நேரில் பார்த்த நாரதர், இந்திரனைப் புகழ ஆரம்பித்தார்.

*ஶ்ரீ நாரத உவாச -*
*க்ருதானு கம்பிதாஸ் த்வம் யத்*
*சூர்யா- சந்த்ரா - யமாதயா:*
*தவாஞ்சா - காரின: ஸர்வ*
*லோக பாலா:பரே கிம் யு*

*முனயோ அஸ்மாத்ர்ஸோ வாஸ்யா:*
*ஸ்ருதயாஸ் த்வாம் ஸ்த்வாந்தி ஹி*
*ஜகத் - ஈஸதயா யத் த்வாம்*
*தர்மா தர்ம - பலா ப்ருதா:*
*(பிருஹத் பாகவதாமிர்தா : 1.2.9-10)*

"பகவான் விஷ்ணுவின் கருணை உனக்குக் கண்டிப்பாக கிடைத்திருக்கிறது. அதை நான் என் கண்ணாலேயே பார்க்கிறேன்! சூரியன், சந்திரன், யமன் போன்ற தேவர்களெல்லாம் உனக்கு கைகட்டி அடிபணிந்து நிற்கிறார்கள்! உன்னை அத்தகைய உயர்ந்த இடத்தில விஷ்ணு வைத்திருக்கிறார். உனக்கு மட்டுமே பகவானின் கருணை பூரணமாகக் கிடைத்திருக்கிறது. என்னைப் போன்ற சாதுக்கள் அனைவரும் உனது பிரஜைகள்! பிரபஞ்சத்திற்கே தலைவன் நீ என்று வேதங்கள் உன்னை மிகவும் புகழ்கின்றன. தர்மம், அதர்மத்திற்கான பலனை நீதானே கொடுக்கிறாய்! தர்மம் செய்பவர்களுக்கு சொர்க்கத்தையும், அதர்மம் செய்பவர்களுக்கு நரகத்தையும் நீ தானே கொடுக்கிறாய்! அதனால் உன்னை பிரபஞ்சத்தின் அதிபதி என்று வேதங்கள் புகழ்கின்றன.

நாராயணர் (வாமன தேவர்) உனக்கு இளைய சகோதரராக, அதிதி மாதாவின் வயிற்றில் உனக்குப் பின்னர் தான் பிறந்தார். எனவே, மூத்த சகோதரரான உனக்கு அவர் மதிப்பும், மரியாதையும், பாதுகாப்பும் கொடுக்கிறார். இதைக் கேட்க எவ்வளவு அற்புதமாகவும், ஆனந்தமாகவும் இருக்கிறது".

இவ்வாறு நாரதர் வீணையை மீட்டிக் கொண்டே,இந்திரனின் பெருமையை பாடிக்கொண்டே இருந்தார்.

## *பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் நான் அல்ல!*

நாரதர் கூறியதைக் கேட்ட தேவேந்திரன் வெட்கப்பட்டவனாய், "ஏன் என்னை கேலி செய்கிறீர்கள் நாரதரே! அழகாக, இனிமையாக வீணையை மீட்டி பகவானின் பக்திப் பாடல்களை இசைக்கும் (கந்தர்ப-கலாபீஜ) நீங்கள் உங்கள் வாயால் என்னை கேலி செய்யலாமா?", என்று பேச ஆரம்பித்த இந்திரன் கீழ்கண்டவாறு பேசலானான்.

## *நாங்கள் பயத்திலேயே வாழ்கிறோம்!*

சொர்க்கத்தை ஆட்சி செய்வது எத்தனை சிரமமானது என்று உங்களுக்குத் தெரியாதா தேவரிஷி? அசுரர்களுக்கு பயந்து எத்தனை முறை சொர்க்கத்தைவிட்டு ஓடும் நிலைக்கு தள்ளப்

பட்டிருக்கிறோம்! நான் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவனாக இருந்தால், அசுரர்களுக்கு பயந்து ஓடும் நிலை ஏன் எனக்கு வர வேண்டும். எத்தனை முறை அவர்கள் எங்களை சொர்க்கத்திலிருந்து விரட்டியிருக்கிறார்கள்! அது உங்களுக்குத் கூட தெரியுமே. பெயருக்கு தேவர்கள் என போலி முக்காடு போட்டுக் கொண்டு பயத்திலேயே நாங்கள் வாழ்கிறோம்.

*அஸ்ய ந ஸ்வர்க- ராஜ்யஸ்ய வ்ர்தாம்*
*வெட்ஸி த்வாம் ஏவ கிம்*
*கதி வாரான் இதோ தைத்ய-*
*பீத்யாஸ்மாபிர் ந நிர்கதம்*
*(ஸ்ரீ பிருகத்பாகவதாமிர்தா - 1.2.14)*

"தேவலோகத்தில் பசி, தாகம் கிடையாது என்று கூறினீர்கள்!ஒரு முறை பலி சக்கரவர்த்தி இந்திரனைத் தோற்கடித்து எனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். சூரியன், சந்திரன் போன்ற தேவர்களுக்கும் இதே நிலை தான். அவர்களின் பதவியிலும் அசுரர்களை அமர்த்தி விட்டான். கீழுலகங்களில் யக்ஞங்களில் கொடுக்கப்படும் ஆகுதி தேவர்களான எங்களுக்கு உணவு! அந்த ஆகுதியை பலி சக்கரவர்த்தி பெற்றுக் கொண்டதால், நாங்கள் பசியுடன் கஷ்டப் பட்டோம்" என்று இந்திரன் நாரதரிடம் கூறினார்.

*ஆசரம் பலிர் இந்த்ரத்வம்*
*அசுரான் ஏவ ஸர்வத:*
*சூர்யேந்த்ராதி - அதிகாரேஸு*
*ந்யாயுங்த க்ரது - பாக - புக்*
*(ஸ்ரீ ப்ருகத் பாகவதாமிர்தா: 1.2.15)*

மேலும் இந்திரன் கூறுகிறான். "பகவான் என் மீது கொண்ட கருணையால் வாமன தேவராக வரவில்லை. என்னுடைய தாயும், தந்தையும் செய்த தவத்தாலும் எங்கள் குல குரு பிரகஸ்பதியின் வேண்டுதலாலும் ஒரு அம்சமாக மட்டுமே எனக்கு சகோதரனாக வந்தார். எனது சகோதரனாக வந்தாலும், எனது எதிரிகளை அவர் நேரடியாக போரிட்டு அழிக்கவில்லை. தானமாகக் கேட்டுத் தான் பெற்றுத் தந்தார். அப்போது தேவர்களாகிய நாங்கள் தர்ம சங்கடமான நிலைக்கு தள்ளப்பட்டோம்", என்று இந்திரன் கூறினான்.

## *நாங்கள் சத்வ குணத்தில் இல்லை!*

தேவர்களாகிய நாங்கள் சத்வ குணத்தில் இருப்பதாக நீங்கள் கூறினீர்களே. சொர்க்கலோகத்தில் தேவர்களுக்கு தங்கள் பதவியை காப்பதற்கான போராட்டங்களும், போட்டி, பொறாமைகளும், தொந்தரவுகளும் எப்போதும் உண்டு. அவ்வாறு இருக்கும்போது சொர்க்கலோக வாசிகளுக்கு என்ன மகிழ்ச்சி இருக்கிறது? நாங்கள் எங்கே சத்வ குணத்தில் இருக்கிறோம்.

விஸ்வரூபா, விருத்ராசுரன் போன்ற பிராமணர்களைக் கொன்ற பாவம் என்னை வந்தடைந்தது. மானிடர்கள் வழிபடும் நிலையில் நாங்கள் இல்லை. தேவர்களும் மானிடர்களைப் போல தான். எங்களுக்கும் இறப்பு என்பது உண்டு. எப்போது இறப்பு பக்கத்தில் இருக்கிறது எனத் தெரிகிறதோ, அப்போது நிம்மதியாக இருக்க முடியுமா? அந்த நிலையில் தான் நாங்கள் இருக்கிறோம்!

## *பகவான் என்னை ஒரு பொருட்டாகவே வைக்கவில்லை!*

என் சகோதரனாக வந்த உபேந்திரன் (வாமன தேவர்) என்னை ஒரு பொருட்டாகவே வைக்கவில்லை. தேவலோகத்தில் உள்ள மிகச்சிறப்பான சுதர்மா மண்டபத்தையும், பாரிஜாத மரத்தையும் பூலோகத்திற்கு (துவாரகா) எடுத்து சென்றுவிட்டார்.

கோபர்கள் எனக்குக் கொடுத்துக் கொண்டிருந்த இந்திர பூஜையை, கோவர்த்தன மலைக்குக் கொடுக்குமாறு செய்து விட்டார். அது மட்டுமா? எனக்கு மிகவும் பிரியமான காண்டவ வனத்தை, என் மகன் அர்ஜுனனைக் கொண்டு தீக்கிரையாக்கினார்.

*கோபாலய் : க்ரியமாணாம் மே*
*நயகன் பூஜாம் சிரத்ந் தனீம்*
*அகண்டாம் காண்டவாக்யாம்மே*
*பிரிய தாகித்தவான்*
*( ஸ்ரீபிருகத் பாகவதாமிர்தம் : 1.2.20)*

மூவுலகங்களையும் விழுங்கும் விருத்ராசுரனைக் கொல்லுமாறு பகவானிடம் கெஞ்சினேன். ஆனால், விருத்ராசுரனை அழிக்க அவர் வரவில்லை. என்னையே அனுப்பி

விட்டு பின்னால் இருந்து ஒத்துழைப்பு மட்டுமே கொடுத்தார். பகவானின் கருணை எனக்கு இல்லை.

என் தலை நகரம் அமராவதியை அழித்து விட்டு, பிரம்மலோகத்திற்கு மேலே தன்னுடைய வைகுண்டத்தை உருவாக்கிக் கொண்டார். இந்த வைகுண்டத்திற்கு "ராமப்பிரியா வைகுண்டம்" என்று பெயர். இந்த வைகுண்டம் ஜடலோகத்திலேயே இருப்பதாக கூறப்படுகிறது (ஐந்தாவது மன்வந்தரா. இதைப் பற்றி 7-வது மன்வந்தராவில் உள்ள இந்திரன் பேசுகிறார்.)

## *நிவேதனங்களை நேரடியாகப் பெறவில்லை!*

சில நேரங்களில் நாங்கள் அளிக்கும் நிவேதனங்களை நேரடியாக ஏற்றுக் கொள்வார். பல நேரங்களில் நிவேதனங்களை வைத்துக் கொண்டு காத்திருப்போம். அவர் ஏற்காமல் போய் விடுவார். திடீரென திரும்பி வருவார். நாங்கள் மகிழ்ச்சியடைவோம். "எங்கள் நிவேதனங்களை ஏற்க வந்துள்ளீர்கள்! நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்" என்று கூறினால், "நான் இங்கு இல்லாமலிருக்கும் சமயம் நீங்கள் அதை சிவபெருமானுக்கோ, அல்லது பிரம்மனுக்கோ கொடுக்கலாமே?" என புத்திசாலித்தனமாகக் கூறுவார். (ஏனெனில், ஒருமுறை பாரிஜாத மரத்தை எடுக்க தேவலோகம் வரும்போது தேவர்கள் சிவபெருமானை வழிபட்டதை பகவான் பார்த்ததாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.)

பகவான் எங்கிருக்கிறார் என்பதை எங்களால் கண்டுகொள்ள முடியவில்லை. சில நேரங்களில் வைகுண்டத்தில் இருக்கலாம். சில நேரங்களில் துருவ லோகத்தில் இருக்கலாம். சில நேரங்களில் ஸ்வேத தீபத்தில் பாற்கடலில் இருக்கலாம். அவர் துவாரகாவில் இருந்தாலும், அவர் அங்கே எப்போதும் இருப்பதில்லை. சில நேரங்களில் பாண்டவர் இல்லத்திலும் மதுராவிலும் இருப்பார். கோகுலத்தில் இருப்பார். கோகுலத்தில் இருக்கும் போது, ஒரு காட்டிலிருந்து இன்னொரு காட்டிற்கு அலைந்து கொண்டே இருப்பார். இந்நிலையில் அவரது தரிசனம் எங்களுக்குக் கிடைப்பது கடினமானது. இந்த நிலையில் அவரது கருணை எங்களுக்கு எங்கே இருக்கிறது?

## *பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமானவர் பிரம்மதேவரே!*

பிரம்மதேவரின் புத்திரனே, நாரத முனிவரே! உமது தந்தை பிரம்மதேவரே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர். ஏனென்றால், அவரே அனைத்து ஐஸ்வர்யங்களையும் அள்ளித்தரும் இலட்சுமி தேவியின் கணவனான பகவான் ஸ்ரீலட்சுமி காந்தரின் நேரடியான புதல்வன் ஆவார். இலட்சுமி தேவியின் கர்ப்பத்தில் நேரடியாக பிறக்காமல், பகவானின் நாபித் தாமரையில் தோன்றினாலும், அவர் நாராயணருக்கும், இலட்சுமி தேவிக்கும் எப்போதும் புதல்வனாகவே கருதப்படுகிறார்.

அவருடைய ஒருநாளில் என்னைப்போல, பதினான்கு இந்திரன்கள், பதினான்கு மனுக்கள் மற்றும் அவரது அனைத்து புத்திரர்களும் வருகிறார்கள். இந்த வகையில், அவரது ஒரு பகல் பொழுது ஆயிரம் சதுர் யுகங்களை உடையது. அதுபோல இரவுப் பொழுதும் மிக நீண்டது. அவ்வாறு முந்நூற்று அறுபது நாட்கள் ஒரு வருடமாகும். அவ்வாறு நூறு ஆண்டுகள் அவர் உயிர் வாழ்கிறார். அத்தனை நீண்டது அவரது ஆயுள் காலமாகும்.

*யஸ்யைகஸ்மின் தினே ஸக்ரா*
*மாத்ர்ஷா ஸியஸ் ஸதுர்தஸா*
*மனுவாதி- யுக்தா யஸ்யாஸ் ச*
*ஸதுர் - யுகா - சஹஸ்ரகம்*
*நிஷா ச தாவாத்தீதம் யாஹோ -*
*ராத்ராணாம் ஸதா - த்ரயீ*
*ஷஸ்தி - யுத்தாரா பவேத் வர்ஷம்*
*யஸ்யாயஸ் தக் சதம் ஸ்ருதம்*
*(ஸ்ரீபிருஹத்பாகவதாமிர்தா - 1.2.31-32)*

ஈரேழு பதினான்கு லோகங்களையும் படைப்பவர் அவரே. அதுமட்டுமன்றி, அந்த லோகங்களை பரிபாலிக்கவும், வளர்க்கவும், பாதுகாக்கவும் உரிய அதிகாரமும் அவருக்கே உள்ளது. என் போன்ற தேவர்களை பாதுகாப்பது, அவர்களுக்கான சேவைகளைக் கொடுப்பது போன்ற அனைத்தையும் பிரம்ம தேவரே செய்கிறார். அவரது இரவுப் பொழுதில் இந்த பிரபஞ்சத்தை அழிக்கிறார்.

பிரம்மதேவரின் பிரம்மலோகத்தில் ஆயிரம் தலைகளை

உடைய மகா புருஷர் எப்போதும் தங்கி இருக்கிறார். அங்கு கடலலைகள் போல எப்போதும் யக்ஜங்கள் நடந்து கொண்டே இருக்கும். மகா புருஷர் யக்ஜ பலன்களை அனுபவித்து, பிரம்மலோக வாசிகளுக்கு தெய்வீக பேரின்பம் கொடுக்கிறார். (பிரம்மலோகத்தில் ஆயிரம் தலைகளை உடைய மகாபுருஷர் நிரந்தரமாக இருக்கிறார் என்னும் செய்தி ஸ்ரீமத் பாகவதத்திலும் (1.3.1-5) குறிப்பிடப்படுகிறது.)

மகாபுருஷரின் ஒரு பாகம் பிரபஞ்ச நீரில் பள்ளி கொண்டிருக்க, அவரது உடலின் நாபிக்குளத்திலிருந்து ஒரு தாமரைத் தண்டு முளைக்கிறது. இத்தாமரைத் தண்டின் மீதுள்ள தாமரை மலரிலிருந்து, பிரபஞ்சத்தின் சிருஷ்டி கர்த்தாக்கள் அனைவருக்கும் தலைவரான பிரம்மா தோன்றுகிறார்.

*யஸ்யாம்பஸி சயானஸ்ய*
*யோக-நித்ராம் விதன்வத:*
*நாபி-ஹ்ரதாம்புஜாத் ஆஸீத்*
*ப்ரஹ்ம விஷ்வ - ஸ்ருஜாம் பதி:*
*( ஸ்ரீமத் பாகவதம்: 1.3.2)*

பிரம்மதேவர் தாமரை மலரில் தவம் இருக்கும்போது, அவரது சமாதி நிலையில் ஆயிரம் தலைகளை கொண்ட மகாவிஷ்ணுவின் தரிசனம் கிடைத்தது. அற்புதமான கால்கள், தொடைகள், கரங்கள் மற்றும் முகங்கள் ஆயிரக்கணக்கில் பெற்றிருப்பவரான, தெய்வீக வடிவிலுள்ள புருஷரை காண்கிறார். அவ்வுடலில் ஆயிரக்கணக்கான தலைகள், காதுகள், கண்கள், மூக்குகள் ஆகியவை உள்ளன. அவை ஆயிரக்கணக்கான கிரீடங்களாலும், பிரகாசிக்கும் குண்டலங்களாலும் மற்றும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

*பஸ்யந்தி அதோ ரூபம் அதப்ர – சக்ஷுஷா*
*சஹஸ்ர - பாதோரு -புஜானனாத்புதம்*
*ஸஹஸ்ர - மூர்த- ஸ்ரவணாக்ஷி - நாஸிகம்*
*ஸஹஸ்ர மௌலி - அம்பர - குண்ட- லோல்லஸத்*
*(ஸ்ரீமத் பாகவதம்: 1.3.4)*

பிரபஞ்சத்திலுள்ள பலவகையான அவதாரங்களுக்கு மூலமாகவும், அழிவற்ற வித்தாகவும் இருப்பது இந்த வடிவமேயாகும் (புருஷ அவதாரத்தின் இரண்டாவது வடிவம்). இந்த

வடிவத்தின் அணுக்களிலும், அம்சங்களிலுமிருந்தே தேவர்களும், மனிதர்களும், பல்வேறு ஜீவராசிகளும் படைக்கப்படுகின்றனர்.

*ஏதன் நாநாவதாரணாம்*
*நிதானம் பீஜம் அவ்யயம்*
*யஸ்யாம்சாம்சேன ஸ்ருஜ்யந்தே*
*தேவ- திர்யன் - நாராதய:*
*(ஸ்ரீமத் பாகவதம்- 1.3.5)*

இந்த மகாபுருஷரை பிரம்மதேவர் தனது சமாதி நிலையில் தனது இதயத்தில் தெய்வீக சச்சிதானந்த ரூபமாக தரிசித்தார். இந்த ரூபத்தில் பகவான் (மகாபுருஷர்), தனது பிரம்மலோகத்தில் நிரந்தரமாக இருக்கவேண்டும் என தியானித்தார். எனவே, ஆயிரம் தலைகளை உடைய மகாபுருஷர் பிரம்மலோகத்தில் நிரந்தரமாக இருந்து விட்டார்.

சில நேரங்களில் அவர் பிரம்மலோகத்திலிருந்து இறங்க வேண்டியிருக்கும். அனைத்து அவதாரங்களுக்கும் காரணமான சுயம் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் சில சமயம் ஒரு அவதாரீயாக கீழே இறங்கி வரும்போது, அனைத்து அவதாரங்களும் அவருடன் இணைய வேண்டும். அதற்காக ஆதி புருஷராகிய அந்த விஷ்ணுவும் இறங்கி வருகிறார். பிரம்ம லோக காலக் கணக்கைப் பார்க்கும்போது, பூலோகக் காலக் கணக்கு மிக மிகச் சிறியது. எனவே, மிகக் குறைந்த கால அளவில் வந்து விட்டு சென்று விடுவார்.

உமது தந்தை பிரம்மதேவர், பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் என்பதை நிரூபிக்க இன்னும் ஆயிரம் காரணங்களைக் கூறலாம். மேலும், ஸ்ருதிகளிலும், ஸ்மிருதிகளிலும் பிரம்மலோகம் மற்றும் பிரம்மலோக வாசிகளின் மகிமைகள் பற்றியும், பகவானிலிருந்து பிரம்ம தேவர் வேறுபட்டவரல்ல என்றும் கூறியிருப்பது உங்களுக்குக் கூட தெரியுமே! என்று இந்திரன் கூறினார்.

## *நாரதர் பிரம்மலோகத்திற்கு வந்தார்*

இந்திரன் கூறியவற்றை கேட்டுக்கொண்டிருந்த நாரதர் மகிழ்ச்சியில் ஆராவாரம் செய்ய ஆரம்பித்தார். தன் தந்தையான பிரம்ம தேவரைக் காண பிரம்ம லோகத்திற்கு பயணமானார். தூரத்தில் வந்து கொண்டிருக்கும் போதே, ஏராளமான பிரம்ம

ரிஷிகள் யக்ஞங்கள் செய்து கொண்டிருக்கும் ஒலி அவர் காதில் விழுந்தது.

நாரதர் அங்கு சென்றதும், பகவான் ஆயிரம் தலைகளை உடைய மகாபுருஷரின் ரூபத்தில் பிரம்ம லோக வாசிகள் கொடுக்கும் யக்ஞங்களில் பலனை அனுபவிப்பதைக் கண்டார். ஆயிரம் தலைகளையுடைய மகாபுருஷர், இலட்சுமி தேவியுடன் ஆசனத்தில் அமர்ந்து யக்ஞ பலனை ஏற்றுக் கொண்டதை தெரிவிக்கும் பொருட்டு தலையை ஆட்டி ஆமோதிக்கும் போது, அவரது சுருட்டை முடி அழகாக தோன்றியது. பிரம்ம தேவரை திருப்திப் படுத்த பிரம்மலோக வாசிகள் கொடுக்கும் யக்ஞங்களின் பலன்களை தன் ஆயிரக்கணக்கான கைகளால் எடுத்துக் கொண்டு, ஆயிரக்கணக்கான வாய்களால் உண்கிறார். பின் பிரம்மலோக வாசிகளுக்கு வரங்களைக் கொடுக்கிறார்.

பின் மகாபுருஷர், தன்னுடைய யோக நித்திரை என்னும் லீலைக்கு செல்கிறார். இலட்சுமி தேவியும் அவரது பாதங்களை வருடிக் கொடுக்க அவருடன் சென்றார். இப்போது பகவானின் கட்டளைப்படி, பிரம்மதேவர் தன்னுடைய மகன்களையும் சாதுக்களையும் யக்ஞங்கள் செய்யுமாறு கூறிவிட்டு, அவர் படைப்புத் தொழிலுக்கு செல்ல ஆயத்தமானார்.

பிரம்ம தேவர் தனது ஆசனத்தில் அமர்ந்து பகவானின் நாமங்களைப் பாடுவதிலும், கேட்பதிலும் மூழ்கி விட்டார். அவரது எட்டு கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. இந்திரன் கூறியதைக் கேட்டுக் கொண்டும், தூரத்தில் இருந்தே அனைத்தையும் பார்த்துக் கொண்டும் வந்த நாரதர், பிரம்ம தேவரின் திருவடியில் ஒரு தடியைப் போல விழுந்தார். தன் தந்தையும் குருவுமான பிரம்ம தேவருக்கு நமஸ்காரம் செய்தார்.

## *நாரதர் பிரம்ம தேவரிடம் பேசலானார்:*

தந்தையே! பகவான் ஶ்ரீஹரியின் கருணைக்குப் பாத்திரமானவர் நீரே! நீரே, பிரஜாபதிகளின் தந்தை, இந்த பிரபஞ்சத்தின் குருக்களுக்கெல்லாம் குரு. அனைத்து பிரம்மாண்டங்களின் தாத்தா நீங்களே! பிரபஞ்சத்தின் பதினான்கு லோகங்களையும் படைத்து, காத்து, அழிக்கிறீர்கள்! இந்த பிரபஞ்சம் முழுவதையும் கட்டுப்படுத்துகிறீர்கள்! மேலும், நீங்கள் சுயம்புவாக தானே தோன்றினீர்கள்.

*ஸ்ரீ நாரதா உவாஸ -*
*பகவான் ஏவ க்ருபா- பாத்ரம் த்ருவம் பகவதோ ஹரி:*
*ப்ரஜாபதி- பதிர் யோ வை ஸர்வலோக பிதாமஹா:*
*ஏகா ஸ்ர்ஜதி பாதி ஆதி புவனானி சதுர்தாஸ*
*பிரமாண்டஸ்யேஸ்வரோ நித்யம் ஸ்வயம்பூர் யஸ் ச கத்யதே*
*(ஸ்ரீ பிருஹத்பாகவதாமிர்தா: 1.2.46-47)*

"உங்கள் சபையில் வேதங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள் அனைத்தும் உள்ளன. வேதங்கள் உங்கள் வாயிலிருந்தே வந்தன. அவை , தர்மம்,அர்த்தம்,காமம், மோக்ஷம்ம் என்ற புருஷார்த்தத்தைப் பற்றிக் கூறுகின்றன. சாஸ்திரங்கள் புகழும் பகவானின் நாமங்களை எப்போதும் கேட்டுக்கொண்டே இருக்கிறீர்கள்.

யாரொருவர் கர்வமில்லாமல் காமம், குரோதம் இன்றி, நூறு ஜென்மங்கள் தர்மத்தைக் கடைபிடிக்கிறார்களோ, அவர்களால் மட்டுமே உங்கள் லோகத்தை அடைய முடியும். அது மட்டுமா! அனைத்து லோகங்களிலும் உங்கள் பிரம்மலோகமே மிகவும் உயர்ந்தது. பகவானின் வைகுண்டம் கூட உங்கள் லோகத்திலேயே இருக்கிறது.

பத்மநாபராகிய பகவான் மகாபுருஷராக உங்கள் லோகத்திலேயே இருந்து, யக்ஞங்களின் பலன்களை உண்கிறார். பின் அவற்றின் பலனாக வரங்களையும் கொடுக்கிறார். கல்பத்தின் தொடக்கத்தில், தாமரைத் தண்டினுள் பகவானின் தரிசனத்திற்காக தேடினீர்கள்! கடும் தவத்திற்குப் பின்னர் அவரது தரிசனத்தை உங்கள் இதயத்தில் பெற்றீர்கள். எனவே, நிச்சயமாக பகவான் ஸ்ரீஹரியின் கருணைக்குப் பாத்திரமானவர் நீங்களே!", என்று நாரதர் பிரம்மதேவரைப் புகழ்ந்தார்.

## *பிரம்மதேவரின் கோபம்*

நாரதர் புகழ்வதைகேட்ட பிரம்ம தேவருக்கு கோபம் வந்து விட்டது. அதுவும் "பகவானுக்கு சமமானவர்" என்று தனது மானஸ புத்திரனான நாரதர் கூறியதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே, தனது எட்டு காதுகளையும் பொத்திக் கொண்டு, "நான் பகவானின் சேவகன், நான் பகவானின் சேவகன்", என்ற வார்த்தைகளை திரும்பத் திரும்ப கூறலானார். நாரதர் கூறிய புகழுரைகள் அவரது காதுகளுக்குத் துன்பத்தைத்

தந்தது. அவரும் ஒரு ஜீவாத்மா தானே! கேட்கக் கூடாத ஒன்றைக் கேட்டது போல துடித்துப் போனார். நாரதரை கண்டிக்க ஆரம்பித்தார்.

## *ஜீவதத்துவம் வேறு! பகவான் தத்துவம் வேறு!*

"சிறு வயதிலிருந்தே, நான் உனக்கு ஜீவன்களாகிய நாம் வேறு, பகவான் வேறு என்று எத்தனை தடவை சொல்லிக் கொடுத்திருக்கிறேன். எந்த சாஸ்திரத்திலிருந்து இதைக் கற்றுக்கொண்டாய்?" என்று நாரதரை கடிந்து கொண்டார்.

*ஸ்ரீ- பிரம்மஉவாஸ -*
*அஹம் ந பகவான் கிருஷ்ணா*
*இதி த்வம் கிம் ப்ரம்மாதன:*
*யுகிதாஸ் ச மாயா பீக்ஷிணம்*
*போதிதோ அஸி ந பால்யத:*
*(ஸ்ரீ பிருஹத் பாகவதாமிர்தம் : 1.2.57)*

"பகவான் தனது புற சக்தியான மகாமாயாவின் முக்குணங்களால் படைத்து, காத்து, அழிக்கிறார். அந்த மகாமாயை பகவானின் கடைக்கண் பார்வையால் மேற்பார்வை செய்யப்படுகிறது. மகாமாயையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்போது நாம் எவ்வாறு பகவானின் கருணைக்குப் பாத்திரமாவோம்?" இவ்வாறு புலம்பிய பிரம்மதேவர் நாரதரைப் பார்த்து, "நீ மகாமாயையின் தாக்கத்தால் குழம்பிப் போயிருக்கிறாய்! அதனால்தான் இப்படிப் பேசுகிறாய்!" எனக் கூறிவிட்டு பகவானின் கருணை ஏன் தனக்கு இல்லை என்பதற்கான காரணங்களை விளக்கினார்.

## *பயத்தில் வாழ்கிறேன் !*

மகாமாயையின் கட்டுப்பாட்டில் நாரதர் மட்டும் குழம்பிப் போகவில்லை, தானும் குழம்பிப் போய் விட்டதாக பிரம்ம தேவர் கூறினார். "நான் தான் குரு. பகவானின் நாபியிலிருந்து வந்தவன் என்ற அகங்காரத்தில் நான் இருக்கிறேன். தேவர்களுக்கு பொறுப்புகளைக் கொடுப்பவன், வேதங்களை அறிந்தவன் என எனக்கும் பெருமை வந்து விட்டது. பிரளயம் எப்போது வருமோ,

பிரம்மலோகம் எப்போது அழிந்து விடுமோ என்ற பயத்தில் நான் இருக்கிறேன். நானும் சம்சார சக்கரத்தில் சுழன்று கொண்டிருப்பதால் முக்தியையே விரும்புகிறேன். பகவானுக்கு பக்தித் தொண்டு மட்டுமே பிடிக்கும். அவ்வாறு இருக்கும் போது பகவானின் கருணை எனக்கு எப்படி கிடைக்கும்?", என்று புலம்பிய பிரம்மதேவர் பக்தி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, அபராதம் செய்யாமலாவது இருந்திருக்கலாம். அபராதம் செய்து பகவானுக்கு அதிருப்தியையே கொடுத்திருப்பதாகக் கவலைப்பட்டார். பின்னர் தான் செய்த வைஷ்ணவ அபராதங்களைப் பட்டியலிடுகிறார்.

## *பகவானுக்கு எதிரான அபராதங்கள்*

பகவானுக்கு பக்தி செய்வதை விட, தான் அதிகமாக அபராதங்கள் செய்ததாகவும், அவ்வாறு இருக்கும்போது பகவானின் கருணை எப்படி கிடைக்கும் என்றும் கூறி வருத்தப்படுகிறார். சிவபெருமான், அசுரர்களுக்கு வரங்களைக் கொடுத்து மாட்டிக் கொள்ளும்போது, அவரை மன்னித்து காப்பாற்றி விடுகிறார். ஆனால், பிரம்மதேவர் வரங்களைக் கொடுத்து பிரச்சினைகள் வரும்போது பகவான் தன்னை திட்டி விட்டதாகக் கூறுகிறார்.

கொடிய அசுரனான ஹிரண்யகசிபுவிற்கு வரத்தைக் கொடுத்து, அவனால் தூய பக்தன் பிரகலாதன் கொடுமைப் படுத்தப்பட்டான். பகவான் நரசிம்ம அவதாரம் எடுத்து ஹிரண்யகசிபுவைக் கொன்று பிரகலாதனைக் காப்பாற்றிய பிறகு, தனது உக்கிரம் தணிந்த பிறகு, 'இப்படித்தான் அசுரர்களுக்கு வரத்தைக் கொடுப்பாயா?' என திட்டினார்.

*மத் - ஆப்த - வர- ஜாதோ அசவ் ஸர்வ- லோகோபதாப:*
*ஹிரண்யகசிபுர் தஸ்தோ வைஷ்ணவ- த்ரோஹோ- தத்பர:*
*ஶ்ரீமான் - நரசிம்ஹ- ரூபேன ப்ரபுன ஸம்ஹ்ருதோ யதா*
*ததாஹம் ச- பரிவாரோ விசித்ர ஸ்தவ- பாதவை:*
*(ஶ்ரீ பிருஹத் பாகவதாமிர்தம்: 1.2.67-68)*

அதற்குப் பிறகும் கூட இராவணனுக்கு வரத்தைக் கொடுத்து, அவன் பகவானின் சீதா தேவியையே தூக்கி சென்றுவிட்டான்!

*ததாப்தி ராவணாதிப்யோ*
தஸ்தேப்யோ அஹம் வரான் அதாம்
ராவணஸ்ய து யத் கர்ம
ஜிஹ்வா கஸ்ய கிரந்தி தத்
(பிருஹத் பாகவதாமிர்தம்: 1.2.71)

"நான் மட்டுமா பகவானுக்கு அபராதம் செய்தேன்? நான் பணியில் அமர்த்திய தேவர்களும் அபராதம் செய்தனர். இந்திரன் கோவர்த்தன பூஜையின் போது, அந்த பூஜையை தனக்கு அளிக்கவில்லை என்ற காரணத்துக்காக பெரிய மழையை ஏவி விரஜ பூமியையே அழிக்கப் பார்த்தார். பகவான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து மக்களைப் பாதுகாத்தார்.

நந்தமகாராஜா குளத்தில் குளிக்க இறங்கும்போது வருணன் கடத்தி சென்றான். ஶ்ரீகிருஷ்ண-பலராமரின் குருவான சாந்தீபனி முனிவரின் புதல்வன் மதுமங்களாவை யமராஜன் கவர்ந்து சென்றான். காளியன் யமுனை நதியில் கொடிய விஷத்தைக் கலந்து விரஜவாசிகளைத் துன்புறுத்தினான். குபேரனின் சேவகன் சங்கசூடன் பகவானுக்கு கஷ்டத்தைக் கொடுத்தான். நானும் பகவானுக்கு நேரடியாக அபராதம் செய்தேன்.

ஶ்ரீகிருஷ்ணர் கோபர்களுடன் உணவு உண்ணும்போது, அவரது கன்றுக் குட்டிகளையும், கோபச் சிறுவர்களையும் கடத்திச் சென்றேன். அப்போது அவர் சச்சிதானந்த ரூபமாக, தானே கோபச் சிறுவர்களாகவும், கன்றுக் குட்டிகளாகவும் உருவங்கள் எடுத்து ஒரு வருடத்தைக் கழித்தார். நான் அவ்வாறு செய்தது எத்தனை பெரிய அபராதம்! இத்தனை அபராதங்கள் செய்தும், எனக்கு விரஜ பூமியில் பகவானின் தாமரைப் பாதங்களை தரிசிக்கும் அதிஷ்டம் கிடைத்தது", என பிரம்மதேவர் தான் பகவான் பக்தர்களுக்கும், பகவானுக்கும் இழைத்த அபராதங்களைப் பட்டியலிட்டார்.

எனவே, பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் தான் அல்ல என்றும், சிவபெருமானே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் என மகாதேவரைக் காட்டியதோடு, மகாதேவரின் பெருமைகளைக் கூறலானார்.

## *சிவபெருமானே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர்!*

ஸ்ரீமகாதேவரே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர். ஏனென்றால், அவர் பகவானின் கருணையினால் புகழ் பெற்ற நண்பர். அவருக்கு இணையாக பகவானின் கருணையைப் பெற்றவர்கள் இந்த பிரபஞ்சத்தில் எவரும் இல்லை என்று பிரம்மதேவர் நாரதரிடம் கூறினார்.

*அதா பிரம்மாண்ட- மத்யே அஸ்மின்ஸ்*
*தாத்ரின் நிக்ஷே க்ருபாஸ்பதம்*
*விஷ்ணோ கிண்டு மஹாதேவ*
*ஏவ கியாத: சகெதி யா:*
*(ஸ்ரீ பிருஹத்பாக்வதாமிர்தம்: 1.2.80)*

## *சிவபெருமானின் மகிமைகள்*

சிவபெருமான் மகா வைஷ்ணவர். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் போன்றவற்றிலிருந்து முற்றிலும் விடுபட்டவர். மேலான கிருஷ்ண பிரேமையை மட்டுமே விரும்புபவர். பகவானின் தாமரைப் பாதங்களை எப்போதும் பிரேமையுடன் ரசித்துக் கொண்டிருப்பதால், ஒரு பைத்தியக்காரனைப் போல அங்குமிங்கும் அவர் சுற்றிக் கொண்டிருக்கிறார்.

தேவர்களைப் போன்ற ஜட உலக ஜீவன்கள் எப்போதும் அழகான மாலைகள், வாசனைத் திரவியங்கள் அணிந்து கொண்டு போகும்போது, சிவபெருமான் ஊமத்தை மலர் மாலைகள், எலும்பு மாலைகள், மண்டையோடு மாலைகள், நாகப்பாம்புகள் போன்றவற்றை ஆபரணங்களாக அணிந்துள்ளார். சுடுகாட்டு சாம்பலை உடலெங்கும் பூசியுள்ளார். கங்கை நதி பகவானின் திருப்பாதத்திலிருந்து வருவதால், அதையும் தன் தலையில் தாங்கியுள்ளார். அவர் பேரானந்தத்துடன் நடனம் ஆடும்போது இந்த பிரபஞ்சமே நடுங்குகிறது. அது மகா தாண்டவம், அல்லது பிரளய தாண்டவம் எனப்படுகிறது.

பகவானின் கருணையால் முக்தி கொடுக்கும் தகுதி உடையவராக இருந்தாலும், அவர் பகவானின் பிரேமையை மட்டுமே விரும்புகிறார். ஆனால், தேவர்கள் முக்தியை விரும்புகிறார்கள். அவரது லோகத்தில் உள்ள அனைவரும் முக்தி பெற்ற ஆத்மாக்கள். சிவனையும், பகவான் ஸ்ரீகிருஷ்ணரையும்

பிரித்துப் பார்ப்பது தவறு. பகவான் தன்னை யாராவது நிந்தித்தால் பொறுத்துக் கொள்வார், ஆனால் சிவபெருமானை எவர் நிந்தித்தாலும் பொறுத்துக் கொள்ள மாட்டார்.

சிவபெருமான், திரிபுராதீஸ்வரன், மாயாதானவன், விருத்ராசுரன், இராவணன் போன்ற அசுரர்களுக்கு வரங்களைக் கொடுத்து விட்டு, பின் அவர்களால் ஆபத்துக்குள்ளான போது பகவானே அவரை வந்து காப்பாற்றியது மட்டுமன்றி, 'இவ்வாறு ஏமாந்து விடாதே' என்று அறிவுரையும் கூறினார். ஏனென்றால் சிவபெருமான் கொடுத்த வரங்களால் பகவானின் பக்தர்கள் துன்புறுத்தப்படவில்லை.

பாற்கடல் கடையும்போது, ஆலகால விஷம் வெளிப்பட்டது. கௌரியின் பிராண வல்லபராக இருந்த போதிலும், பிரஜாபதிகள் சிவபெருமானிடம் அந்த ஆலகால விஷத்தை உண்ணுமாறு வேண்ட, அதனை சிவபெருமான் உண்டார். பார்வதிதேவி கழுத்தைப் பிடித்துக் கொண்டதால், விஷம் கழுத்தில் தங்கியது. அதனால் அவர் நீல கண்டர் எனப் பெயர் பெற்றார்.

"புராணங்கள், சிவபெருமானை பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் (ஹரா) என்று புகழ்கின்றன. இது உனக்குக் கூட தெரியுமே! நான் உனக்கு அதை ஞாபகப்படுத்துகிறேன், அவ்வளவு தான்!", என்று பிரம்மதேவர் நாரதரிடம் கூறினார்.

## *நாரதர் சிவலோகம் புறப்பட்டார்*

பிரம்மதேவரின் வாயினால் சிவபெருமானின் பெருமைகளைக் கேட்ட நாரதர், அங்கிருந்து (பிரம்மலோகத்திலிருந்து) கீழே கைலாய மலையைப் பார்த்தார். பிரம்மதேவர், "கைலாயத்தில் சிவபெருமான் குபேரனின் சொத்தைப் பாதுகாத்து வருகிறார்.

குபேரன் சிவபெருமானிடம் தவமிருந்து குபேரச் சொத்தைப் பெற்றான். பின் அதனைப் பாதுகாக்க அவரையே வேண்டினான். எனவே, அங்கு பார்வதி தேவியுடன் இருந்தாலும், அவரது ஐஸ்வர்யங்கள் அங்கு குறைவாகவே உள்ளன. முழு சக்தியுடன் அவர் அங்கு இல்லை." என்று கூறினார்.

## *சதாசிவலோகத்தின் பெருமை*

பின்னர் பிரம்ம தேவர், சிவபெருமான் முழு சக்தியுடன் வசிக்கும் சதாசிவலோகம் பற்றி நாரதருக்கு விளக்கலானார். வாயு புராணத்தில் சிவபெருமானின் நித்தியமான லோகம் குறிப்பிடப்படுகிறது. நமது பிரபஞ்சத்தை சுற்றி ஏழு உறைகள் இருக்கின்றன. அதற்கு வெளியே சிவபெருமானின் லோகம் உள்ளது. அது ஜடலோகம் அல்ல; ஆன்மீகலோகம். அது அழியாத, நித்தியமான லோகம். அங்கு எவ்வித துன்பங்களுமின்றி, சிவபெருமான் இருக்கிறார். அவரது லோகத்தில் மாயை உள்ளே நுழைய முடியாது. அங்கு சாதுக்கள் மட்டுமே வசிக்கின்றனர். அவரது லோகத்தில் பக்தியே சிறந்து விளங்குகிறது. அங்கு அவர் அரச ஐஸ்வர்யங்களுடன், குடை, சாமரம், மற்றும் அழகிய ஆபரணங்களுடன் விளங்குகிறார்.

*சமான - மஹிமா- ஸ்ரீமத்-*
*பரிவாரா-கணாவ் ருத:*
*மஹா- விபூதிமான் பாதி*
*சத்-பரிச்சசாத – மந்தித:*

*ஸ்ரீமத் - ஸங்கர்ஷணாம் ஸ்வஸ்மாத்*
*அபினாம் தாத்ரா ஸோ அர்ச்சயம்*
*நிஜேஷ்ட - தேவதாத்வேன கிம்*
*வா நாதானுதே அத்புதம்*
*(பிருஹத் பாகவதாமிர்தா: 1.2,98)*

சிவபெருமான் அங்கு நூறு (100) தலைகளை உடைய மகா சங்கர்ஷணரை வழிபடுகிறார். சதாசிவலோகம் செல்லுமாறு நாரதரைக் கூறிய பிரம்மதேவர், நாரதரிடம், "கீழே இருக்கும் கைலாய மலைக்கு செல்லாதே! நீ தூய பக்தனானதால், சதாசிவலோகத்திற்குப் போ!", என்றார். தூய பக்தனால் மட்டுமே ஆன்மீக லோகத்திற்குள் நுழைய முடியும். இப்போது நாரதர் சிவபெருமானின் சதாசிவ லோகத்திற்குப் பயணமானார்.

# அத்தியாயம் 3

## *பிரபஞ்சத்திற்கு அப்பால்*

நாம் வாழும் இந்த பிரபஞ்சத்தில், பிரம்மலோகம் வரை ஜட லோகம் எனப்படுகிறது. பிரம்ம லோகமே ஜட லோகத்தில் உயர்ந்த லோகமாகும். அதற்கு மேலே ஆன்மீக லோகங்கள் அமைந்துள்ளன. பிரம்மதேவர், நாரதரிடம் "பகவான் கிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமானவர் சிவபெருமானே" என்று கூறியதும், நாரதர் சிவலோகம் செல்ல தயாரானார். நாம் வாழும் பூலோகத்தில் அமைந்துள்ள கைலாய மலையை சிவபெருமானின் இருப்பிடம் என நினைத்த நாரதர், பிரம்ம லோகத்திலிருந்து பூலோகத்தைப் பார்க்கலானார். அப்போது பிரம்மதேவர், "சிவபெருமான் உறையும் தாமங்கள்(இருப்பிடம்) இரண்டு உள்ளன. ஒன்று பூலோகத்திலுள்ள கைலாயமலை. இங்கு சிவபெருமான் பார்வதி தேவியுடனும், பூத கணங்களுடனும், குபேரனின் செல்வங்களை பாதுகாக்க சிறிதளவு சக்தியுடனும், ஐஸ்வரியங்களுடனும் இருக்கிறார்.

ஆனால், அவரது உயர்ந்த தாமமாகிய சதாசிவலோகத்தில் அனைத்து ஐஸ்வரியங்களுடனும், சக்தியுடனும் அவர் இருக்கிறார். அங்கு அவர் சங்கர்ஷணரை வழிபடுகிறார். இந்த லோகம் பிரபஞ்சத்திற்கு வெளியே உள்ளது. தூய பக்தர்களால் மட்டுமே அங்கு செல்ல முடியும். நீ பகவானின் தூய பக்தனாதலால் உன்னால் அங்கு செல்ல முடியும்" என்று கூறினார். உடனே நாரதர் சதாசிவலோகத்திற்கு சென்றார்.

பரீட்சித் மகாராஜா தன் தாயார் உத்தராவிடம், நாரதர் சதாசிவலோகம் செல்லும் நிகழ்ச்சியை விவரிக்கின்றார். தேவரிஷி நாரதர் தனது வீணையை மீட்டிக் கொண்டு சதாசிவலோகம் சென்றார். அங்கு நடக்கும் நிகழ்ச்சியை தூரத்திலிருந்தே பார்த்தார். சங்கர்ஷணர் மீது கொண்ட பிரேமையால் சிவபெருமான் ஆனந்த தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தார். சிறிது நேரம் ஆடுவார், பின் பாடுவார். பின் உரத்த குரலில் "ஜெய, ஜெய" என கோஷமிடுவார். நந்தீஸ்வரன் போன்ற சாதுக்கள் சிவபெருமானின் நடனத்திற்கேற்ப இசைக்கருவிகளை இசைக்கின்றனர். பார்வதி தேவி இசைக்கேற்ப கையைத் தட்டி

தாளமிடுகிறாள். சிவபெருமான் அவர்களை உற்சாகப் படுத்துகிறார். நாரதர், சிவனையும், பார்வதியையும் சந்திக்க வருகிறார். வரும்போதே, "பகவான் ஹரியின் கருணைக்குப் பாத்திரமானவர் நீரே" என்று கூறிக்கொண்டே வருகிறார். தன்னுடைய வீணையில் இனிய நாதத்தை மீட்டி அவருக்கு தன் நமஸ்காரங்களை செலுத்தினார்.

## *பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் சிவபெருமானே!*

பக்தி பரவசத்துடன் ஆனந்த தாண்டவம் ஆடும் சிவபெருமானைக் கண்ட நாரதர், தன் தந்தை தன்னிடம் கூறிய சிவபெருமானின் மகிமைகளை இனிமையாகப் பாட ஆரம்பித்தார். பின் பகவானின் பக்தரான சிவபெருமானின் பாத தூளியை எடுத்து தன் தலைமேல் போட்டுக் கொள்ள விருப்பமுடன், சிவபெருமானின் தாமரைப் பாதங்களை நெருங்கினார். ஆனால், சிவபெருமானோ, "ஓ, பிரம்மாவின் புதல்வனே! என்ன செய்கிறாய்?" என்று திரும்பத் திரும்ப கூறி அவரை அணைத்துக் கொண்டார். சிவபெருமான், கிருஷ்ண பிரேமையில் மூழ்கியிருந்ததால் நாரதர் கூறியது சரியாகக் கேட்கவில்லை. எனவே, தனது நடனத்தை நிறுத்தி விட்டு நாரதரிடம் பேசுவதற்காக தனது சாதுக்களுடன் கீழே வீராசனத்தில் அமர்ந்தார்.

நாரதர், சிவபெருமானுக்கு நமஸ்காரங்களைத் தெரிவித்து, பின் வேதங்களில் கூறப்பட்டுள்ள "ருத்ர-சத்-அங்கக" மந்திரத்தால் பிரார்த்தனை செய்தார். பின் "ஜெகதீஸ்வரா! அனைத்தையும் கட்டுப்படுத்துபவரே, நீங்களே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர்" என்று புகழ ஆரம்பித்தார். இவ்வாறு நாரதர் புகழ்வதைக் கேட்ட வைஷ்ணவர்களுக்கெல்லாம் மணி மகுடமாக விளங்கும் சிவபெருமான், தன் இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டு, கேட்கக் கூடாததைக் கேட்டதுபோல கோபமுடன் பேசலானார்.

## !*பகவான் கருணை எனக்கு இல்லை*

சிவபெருமான் மகா வைஷ்ணவர். கிருஷ்ண பக்தியை மற்றவர்களுக்கு கொடுத்து, கிருஷ்ண பக்தியை பிரச்சாரம் செய்பவர். ஆயினும், பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர்

என நாரதர் கூறியதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே நாரதரிடம் கோபத்தோடு "நான் எந்த பிரபஞ்சத்திற்கும் பகவானும் (ஜெகதீஸ்வரா) கிடையாது, பகவானின் கருணைக்குப் பாத்திரமானவனும் கிடையாது. நான் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் சேவகனின், சேவகனின், சேவகனின் சேவகன். அது மட்டுமல்ல. நான் பகவானின் சேவகனின் கருணைக்கு ஏங்கிக் கொண்டிருக்கிறேன். நீ என்னை பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் என்று புகழ்கிறாய்" என்று கோபத்துடன் கூறினார்.

உடனே நாரதர் பொறுமையோடு சிவபெருமானுடன் பேச ஆரம்பித்தார். "உங்களுக்கு பகவானின் மகிமைகள் அனைத்தும் தெரியும். அவரது இரகசியமான மகிமைகள் கூட உங்களுக்குத் தெரியும். அதனை இதற்கு முன்பு நீங்கள் கூட வெளிப் படுத்தியிருக்கிறீர்கள்! ராச லீலை நடக்கும் இடத்திற்கு பாதுகாவலராக, கோபீஸ்வர மகாதேவராக இருக்கிறீர்கள். அது மட்டுமா? பகவான் உங்களிடம் பல தடவை வெவ்வேறு அவதாரங்களில் (ராம, பரசுராம அவதாரங்களில்) வரங்கள் கூட (வாமன புராணம் - தான, தர்ம பகுதி) வாங்கியிருக்கிறாரே!" என்றார்.

சிவபெருமான் செயலைப் பரீட்சித் மகாராஜா தன் தாயார் உத்தராவிற்கு விளக்குகிறார். அவ்வாறு விளக்கும் போது அவர் பின்வருமாறு கூறினார்.

*ஸ்ரீ பரீட்சித் - உவாஸ -*
*இதி ஸ்ருத்வா து சஹஸா தைர்யம் கர்தும் அசக்நுவன்*
*லஜ்ஜிதோ த்ருதம் உத்தாய நாரதாஸ்ய முஹம் ஹர:*
*கராப்யாம் பிததே தார்ஸ்த்யம் மம தன் ந வதேர் இதி*

இனிமையாக நாரதர் தன்னைப் புகழ்வதைப் பார்த்ததும் சிவபெருமானுக்கு அவமானமாகப் போய் விட்டது. எனவே, வேகமாக ஓடி வந்து தனது இரண்டு கைகளால் நாரதரின் வாயை அதற்கு மேல் பேச விடாமல் பொத்தி விட்டார். மேலும், "என்னுடைய புத்தி கேட்ட செயல்களைப் பற்றி இதற்கு மேல் பேசாதே! அதைக் கேட்க எனக்கு அவமானமாக இருக்கிறது. அவர் எத்தனை உன்னதமானவர் தெரியுமா! அவரது தாமரைப் பாதங்களுக்கு நான் எத்தனை அபராதங்கள் செய்தாலும், அவர் அதைக் குற்றமாக எடுத்துக்கொள்ளவில்லை." என்று கூறினார்.

நாரதர் சிவபெருமானின் தாமரைப் பாதங்களை பற்றிக்கொண்டு, ஒரு ஆசனத்தில் அமர வைத்தார். மேலும், சிவபெருமான் பகவானுக்கு எதிராக விளைவித்த குற்றங்கள் மற்றவர் கண்களுக்கு அபராதமாகத் தெரியலாம். ஆனால், அவை பகவானால் அபராதமாகப் பார்க்கப்படவில்லை. ஏனெனில், சிவபெருமான் பகவானுக்கு மிகவும் பிரியமானவர்.

நாரதரிடம், சிவபெருமான் பகவானின் மகிமைகளைப் பேசிக் கொண்டே வந்தார். "பகவானின் மகிமைகள் எப்போதும் ஆச்சரியப்பட வைப்பவை. ஆனால், நான் என்னுடைய கர்வத்தால், அவரைவிட நான் சக்தி வாய்ந்தவன் என எண்ணிக் கொண்டு வரம் கொடுத்தேன். அதை அவர் குற்றமாக எடுத்துக் கொள்ளவில்லை. மேலும், நான் எத்தனை தவறுகள் செய்தாலும் அவர் அதை குற்றமாக எடுத்துக் கொள்ளவில்லை" என சிவபெருமான் கூறியதும், அவரது பாதங்களை நாரதர் கட்டிப் பிடித்துக் கொண்டார். பின் சிவபெருமானை ஆறுதல் படுத்தினார். "நீங்கள் பகவானுக்கு மிகவும் பிரியமானவர். எனவே, அவருக்கு அபராதம் செய்ய மாட்டீர்கள். சாதாரண ஜனங்களின் பார்வையில் உங்கள் செயல் குற்றமாகத் தெரிந்தாலும், பகவானின் பார்வையில் குற்றமற்றது.

"ஒருமுறை பாணாசுரன், ஆயிரக்கணக்கான கரங்களுடன் சாதுக்களையும், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பேரன் அனிருத்தனையும் சிறை பிடித்து கொடுமைப்படுத்தினான். அப்போது பகவான் பாணாசுரனுடன் போரிட்டார். பாணாசுரன் உங்களது தீவிர பக்தன் மட்டுமன்றி மகன் போன்றவன். அப்போது நீங்கள் அவனது உயிரைக் காப்பாற்ற பகவானைத் துதித்துக் கெஞ்சினீர்கள். அப்போது அவர் அவனை மன்னித்து அவனுக்கு சாரூப்ய முக்தி கொடுத்தார்.

"பிரம்மா, இந்திரன் போன்ற தேவர்கள் ஏராளமான ஐஸ்வரியங்களை அனுபவிக்கும்போது, நீங்கள் மட்டும் ஒரு அவதூதர் போல இருக்கிறீர்களே இது எதனால்? பகவான் மீது கொண்ட பக்தி பிரேமையால் அல்லவா?

"அது மட்டுமா? இப்போது கூட நான் பார்த்தேனே, நீங்கள் பார்வதி தேவியுடனும், உங்கள் சகாக்களுடனும் எத்தனை அழகாக பகவான் நாமத்தைப் பாடி ஆடுகிறீர்கள்? பகவான் மீது எத்தனை அன்பு வைத்திருக்கிறீர்கள்?நீங்கள் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவரே!

"பரிவாரங்கள் புடைசூழ பார்வதி தேவியை மடியில் வைத்து செல்லும் போது, சித்ரகேது முட்டாள்தனமாக கிண்டல் செய்தான். ஆயினும் நீங்கள் கோபப்படவில்லை. ஏனென்றால், பகவானின் அம்சமான சங்கர்ஷணரை நீங்கள் வழிபடுவது போல அவனும் வழிபடுகின்றான்", என்று நாரதர் சிவபெருமானைப் புகழ்ந்து கொண்டே வந்தார்.

சிவபெருமான், வைஷ்ணவர் அல்லாதவர்களுக்கு வரங்கள் கொடுக்கும்போது, வரங்களை சரியாகக் கொடுக்க மாட்டார். ஒரு குறை வைத்தே கொடுப்பார். ஏனென்றால், அந்த வரங்களை தவறாக அவர்கள் பயன்படுத்தக் கூடாது என்ற காரணத்தால் தான். ஆனால், வைஷ்ணவர்களுக்கு வரங்களைக் கொடுத்தால், சரியாகக் கொடுப்பார்.

ஒரு அவதூதர் போல இருந்து பகவான் மீது பக்தி கொண்டு, ஆடிப்பாடி ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டிருப்பதால், எப்போதும் சிவலோகம் பண்டிகைக் கோலமாக விளங்குகிறது. சிவபெருமான் எப்போதும் பகவத் பிரேமையில் இருக்கிறார். பகவத் பிரேமையை விட்டு கொஞ்சம் வெளியே வரும்போது, பார்வதி தேவியை அமர வைத்து பாகவதம் கூறிக் கொண்டிருக்கிறார். இதுவும் அவரது பகவத் பிரச்சாரமே.

பார்வதி தேவி வேறு யாருமல்ல. பகவானின் சகோதரியாகும். சுபத்ரா எவ்வாறு பகவானின் சகோதரியோ, அதுபோல பார்வதி தேவியும் அவரது சகோதரியே. ஆனால், இந்த துர்கா தேவி பகவானின் மாயாசக்தி. யசோதாவின் வயிற்றில் பிறந்தது இரட்டைக் குழந்தைகள். ஒன்று நந்தன நந்தன் ஸ்ரீகிருஷ்ணர்; இன்னொன்று துர்காதேவி. வசுதேவர் கிருஷ்ணரைக் கொண்டு யசோதா பக்கத்தில் கிடத்தி விட்டு துர்காதேவியைத் தூக்கிச் சென்றார். வாசுதேவ கிருஷ்ணர், நந்த நந்தன் கிருஷ்ணரிடம் ஒன்றிணைந்து விட்டார்.

துர்கா தேவி என்னும் மாயாதேவிதான் ப்ரக்ருதி. அவளே இந்த ஜட இயற்கையைப் படைக்கிறாள். பஞ்ச பூதங்கள், முக்குணங்கள் அனைத்தும் மாயாதேவியின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது.

## *பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் நான் அல்ல*

நாரதர் தன்னைப் புகழ்வதைக் கேட்டுக் கொண்டிருந்த சிவபெருமானின் நிலையை பரீட்சித் மகாராஜா உத்தரா தாயாருக்கு விளக்குகிறார்

*பரீட்சித் உவாஸ -*
*ததோ மஹேஸ்வரோ மாதஸ் த்ரபா அவநமிதாநன:*
*நாரதாம் பகவத்-பக்தாம் அவதத் வைஷ்ணவாக்ரநீ:*
*(ஸ்ரீ பிருகத் பாகவதாமிர்தம்: 1.3.35)*

"ஓ, அன்னையே! வைஷ்ணவர்களில் தலை சிறந்தவரான ஸ்ரீமகேஸ்வரர், தன்னை நாரதர் புகழ்வதைக் கேட்டதும் வெட்கத்தில் தலை குனிந்தவராய், பகவானின் உயர்ந்த பக்தனான நாரதரிடம் பேச ஆரம்பித்தார். "பொய் அகங்காரத்திற்கு ஒரு விக்கிரக வடிவம் கொடுத்தால், அது நான் தான். அந்த அளவிற்கு அகங்காரம் எனக்கு இருக்கிறது. 'எனக்கு எல்லா அறிவும் இருக்கிறது' என நினைத்துக் கொண்டு, அனைவருக்கும் முக்தி கொடுப்பவன் என்றும், கிருஷ்ண பக்தியைக் கொடுக்கும் தூய பக்தன் நான் என்றும் அகங்காரத்தில் இருக்கிறேன்!

"பிரளய காலத்தில் தமோ குணத்தால் ஆட்கொள்ளப்பட்டு, படைத்து, காத்து வைத்திருந்த எண்ணற்ற பிரபஞ்சங்களையெல்லாம் ஒரு நிமிடத்தில் ஊழித்தாண்டவம் ஆடி அழித்து விடுகிறேனே! அந்த வேலையை செய்யும் போது நான் வெட்கத்தால் கூனிக் குறுகிப் போகிறேன்! பகவானின் கருணை எனக்கு இருந்தால் அத்தகைய தொழிலை எனக்குத் தருவாரா?

"ஓ, நாரதா! பகவானுக்கு என்மீது சிறு துளியளவு கருணை இருந்தால் கூட, பாரிஜாத மலரைக் கொண்டு செல்லும் போதும், அநிருத்தன் உஷாவைக் கடத்திச் செல்லும் போதும் என்னுடன் சண்டை போடுவாரா?

"பகவானிடம் பக்தி செலுத்தாதவர்களை, அவரிடமிருந்து பிரித்துக் கொண்டு போகுமாறு கூறி, சங்கராச்சாரியாராக அவதாரம் செய்ய வைத்து, தவறான சாஸ்திர வழியாகிய மாயாவாதத்தை போதிக்க வைத்தார். தகுதி இல்லாதவர்களுக்கு கிருஷ்ண பக்தி கொடுக்கக் கூடாது என்பதற்காகவே பகவான்

என்னை மாயாவாத சாஸ்திரங்களைப் படைக்க வைத்து பக்தரல்லாதவர்களை திசை திருப்பினார்! ஆனால், உனக்கு எத்தனை அழகாக பக்தி யோகத்தைக் கொடுத்திருக்கிறார்! பகவானின் கருணை எனக்கு எங்கே இருக்கிறது?

"ஓ, நாரதா, முக்தி கொடுக்கும் சக்தியை பகவான் கொடுத்திருப்பதாக என்னையும், பார்வதி தேவியையும் நீ புகழ்கிறாய்! ஆனால், முக்தி கொடுக்கும் சக்தி எங்களுக்குக் கொடுத்ததை நினைத்து நாங்கள் வேதனைப் படுகிறோம். முக்தி என்ற சொல்லைக் கேட்டாலே பக்தர்கள் ஓடி விடுகிறார்கள்! ஏனென்றால், அது பக்திக்கு எதிரானது."

*ஆவயோர் முக்தி - தார்த்வம் யத்*
*பகவான் ஸ்தௌதி ஹ்ர்ஷ்த - வத்*
*தக் - சதி தாருணம் தஸ்ய*
*பக்தானாம் ஸ்ருதி - துக்க - தாம்*
*(ஸ்ரீ பிருகத் பாகவதாமிர்தம்: 1. 3. 41)*

இவ்வாறு நாரதரிடம் பகவானின் கருணை தனக்கு சிறிது கூட இல்லை என்று கூறிய சிவபெருமான், வைகுண்டவாசிகளுக்கு பகவானின் கருணை முழுவதும் கிடைத்துள்ளது, என்று கூறி வைகுண்டலோகத்திற்கு செல்லுமாறு கூறினார். வைகுண்டலோக வாசிகளின் பெருமைகளை நாரதருக்கு சிவபெருமான் விளக்கலானார்.

## வைகுண்டலோக வாசிகளின் சிறப்புகள்

"வைகுண்ட லோக வாசிகள் பகவானின் உண்மையான பக்தர்கள். வைகுண்ட லோகம் ஜட இயற்கைக்கு அப்பாற்பட்டது. அங்கு பயம் என்பது கிடையாது. அவர்கள் பகவானுக்கு நேரடியாக சேவை செய்கின்றனர். அவர்கள் தன்னை உணர்ந்த முக்தி பெற்ற ஆத்மாக்கள். அவர்கள் முக்குணங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். வைகுண்ட லோகம் நித்தியமானது; வைகுண்டவாசிகளும் நித்யமானவர்கள். அங்கு அனைத்தும் சச்சிதானந்த ரூபம். நான், எனது என்னும் பொய் அடையாளம் அங்கு இல்லவே இல்லை.

"பகவானுக்குரிய ஆறுவிதமான குணங்களும் வைகுண்டத்திற்கும் உண்டு. பக்தரல்லாதவர்கள் அங்கு செல்ல முடியாது. பெரிய அரண்மனைகள், அழகான தோட்டங்கள், பெரிய ஏரிகள், கிணறுகள் அங்கு உண்டு என நாரத பஞ்சராத்ரா

குறிப்பிடுகிறது. வைகுண்டவாசிகள் பகவானுக்கு பக்தி சேவை செய்வதிலேயே திருப்தி அடைகின்றனர். மேலும், பகவானின் பக்தர்களை பாதுகாக்கவும், பகவத் பக்தியை பரப்பவும் எப்போதும், எங்கும் சுதந்திரமாக பயணம் செய்கின்றனர். வைகுண்ட லோகத்தில் மிருகங்கள், பறவைகள் கூட எவ்வித குறுக்கீடும் இன்றி பகவானுக்கு சேவை செய்கின்றன.

"வைகுண்டவாசிகள் மந்தார மலர், பாரிஜாத மலர், சம்பகா மலர், மற்றும் புன்னாகம், நாக கேசரம் போன்ற மலர்களை துளசி மலருடன் கலந்து கட்டி, பகவானுக்கு அணிவிக்கின்றனர், கருவண்டுகள் பகவானின் புகழ் பாடுவது போல ஒலி எழுப்புகின்றன. புறாக்கள், குயில்கள், நாரைகள், சக்கரவாகப் பறவைகள், மயில்கள் போன்றவை பெரிய குரலெடுத்து இனிமையாக பாடுகின்றன.

"வைகுண்டவாசிகளுக்கு பயமே இல்லை. ஏனெனில், அவர்கள் பகவானின் நித்தியமான சேவையில் எப்போதும் ஈடுபடுகிறார்கள். மனிதனாகப் பிறந்தவர்களுக்கு மூன்று கடன்கள் உள்ளதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன, அவை: தேவர்களுக்கு செய்ய வேண்டிய கடன்கள், முனிவர்களுக்கு செய்ய வேண்டிய கடன்கள் மற்றும் பித்ருக்களுக்கு செய்ய வேண்டிய கடன்கள் ஆகும். ஆனால், பக்தர்களுக்கு அந்த கடன்கள் கிடையாது. அதுபோல வைகுண்டவாசிகளுக்கும் அந்த கடன்கள் கிடையாது.

*ருணைஸ் த்ரிபிர் த்விஜோ ஜாதோ*
*தேவர்ஷி- பித்ரூணாம் ப்ரபோ*
*யக்ஞாத்யாயன - புத்ரைஸ் தானி*
*அனிஸ்தீர்ய த்யஜன் பதேத்*
*(ஸ்ரீமத் பாகவதம்:10.84.39)*

"நாம் எப்போது பகவானை சரணடையவில்லையோ, அப்போது நாம் வேதங்களில் கூறப்பட்டிருக்கும் வர்ணாஸ்ரம கடமைகளைப் பின்பற்றவேண்டும். நாம் பகவானை சரணடையும்போது, வேத தர்மங்களைக் கடைபிடிக்கத் தேவையில்லை. இதை பகவான் ஸ்ரீகிருஷ்ணரும் பகவத்கீதையில் குறிப்பிடுகிறார்.

*ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ*
*அஹம் த்வாம் ஸர்வ பாபேப்யோ மோட்ச யிஷ்யாமி மா சுச:*
*(பகவத்கீதை:18.66)*

"ஒருவர் வெறும் வர்ணாஸ்ரம தர்மங்களை மட்டும் கடைபிடித்து விட்டு பகவானை சரணடையாமல் விட்டு விட்டால் அவருக்கு எந்த பயனும் கிடையாது. ஆனால், வர்ணாஸ்ரம தர்மங்களைக் கடைபிடிக்காமல் பகவானை மட்டும் சரணடைந்து, பக்தியோகப் பாதையில் சென்றால், அவருக்கு பாவ விளைவுகளிலிருந்து விடுதலையும் பிரேம பக்தியும் கூட கிடைக்கும்."

மேலும், சிவபெருமான் நாரதரிடம் கூறுகிறார், "ஓ, நாரதா, பகவான் என்னிடம் மிகவும் அன்பு செலுத்துகிறார். அதுபோல, பகவானின் பக்தர்களும் என்னிடம் அன்பு செலுத்துகிறார்கள். நான் பகவான் பக்தர்களின் சகவாசத்தை எடுத்துக் கொள்வதையே எனது லட்சியமாகக் கொண்டுள்ளேன்.

மேலும், எனது பார்வையில் பக்தி ரசத்தில் பக்தர்கள் எந்த லோகத்தில் இருந்தாலும் அது எனக்கு வைகுண்டமே! ஏனெனில், எப்போதும் பக்தர்கள் பகவான் பற்றியே பேசுவார்கள், பாடுவார்கள், ஆடுவார்கள். வைகுண்ட வாசிகள் எவ்வாறு சிறப்போ, அதுபோல, சுத்த பக்தர்கள் எங்கு இருந்தாலும் சிறப்பு,

*நாரதாம் இதம் மன்யே தாத்ர்ஷானாம் யாத:ஸ்திதி:*
*பவேத் ச ஏவ வைகுந்தோ லோகோ நாத்ர விசாரணா*
*(ஸ்ரீ பிருஹத் பாகவதாமிர்தா: 1.3.60)*

மேலும் பத்மபுராணத்தில் இந்த கருத்து பகவானால் வலியுறுத்தப்படுகிறது.

*ந அஹம் வஸாமி வைகுண்டே*
*ந யோகி ஹ்ருதயே ரவாவ்*
*மத் - பக்தா யாத்ர காயந்தி*
*தத்ர திஸாமி நாரதா (பத்ம புராணம்)*

"ஓ நாரதா! நான் வைகுண்டத்திலோ, யோகிகளின் இதயத்திலோ இல்லை. என் நாமங்களை ஜெபிக்கும் பக்தர்கள் எங்கு இருக்கிறார்களோ, அவர்களது இதயத்தில் தான் நான் இருக்கிறேன்" என்று பகவான் கூறுகிறார்.

எனவே, வைகுண்டவாசிகள் மட்டுமே தன்னைக் காட்டிலும் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர்கள் என்றும், அவர்கள் மட்டுமே பகவானுக்கு மிகவும் பிரியமானவர் என்றும் சிவபெருமான் கூறி முடித்தார். அதைத் தொடர்ந்து பார்வதி தேவியும் பேச ஆரம்பித்தாள்.

"வைகுண்டத்திற்கும், வைகுண்ட வாசிகளுக்கும் ராணி மகாலக்ஷ்மி தாயார். அவள் பகவானுக்கு மிகவும் பிரியமானவள். எப்போதும் பகவானின் சேவையில் இருப்பவள். வைகுண்டத்தில் மகாலக்ஷ்மியின் பெயரே "ஹரிப் பிரியா" (ஹரிக்கு பிரியமானவள்). அவளது கடைக்கண் பார்வையால் மட்டுமே அங்குள்ளவர்கள் பக்தியைப் பெறுகிறார்கள். பகவானின் திருமார்பில் நிரந்தரமாக உறையும் பாக்கியம் பெற்றவள் மகாலக்ஷ்மி. பகவானின் ஒவ்வொரு அவதாரத்திலும் அவளே பகவானுக்குத் துணைவியாக வருகிறாள்."

பரீட்சித் மகாராஜா தன் தாயார் உத்தராவிற்கு, சிவபெருமான் மேற்கூறியதைப் பற்றி விளக்கினார்.

தேவரிஷி நாரதர் மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் கத்த ஆரம்பித்தார். "ஓ, கமல காந்தா! ஓ, வைகுந்தபதி! ஓ, ஹரி! உங்களுக்கு ஜெயம் உண்டாகட்டும்! ஓ, வைகுண்ட வாசிகளே, ஓ கிருஷ்ணப்ரியா, உங்கள் அனைவருக்கும் ஜெயம் உண்டாகட்டும்!" என்று கூறிக்கொண்டு வைகுண்டலோகத்திற்கு செல்ல ஆயத்தமானார். அவரது மன நிலையை புரிந்து கொண்ட சிவபெருமான், நாரதரின் இரண்டு கைகளையும் இறுக்கமாக பிடித்துக் கொண்டு பேசலானார்.

"ஓ, நாரத முனிவரே! பகவானின் கருணைக்குப் பாத்திரமான பக்தரைக் கண்டுபிடிக்கும் ஆர்வத்தினால் பகவான் கிருஷ்ணர் துவாரகையில் இருப்பதை மறந்துவிட்டாயே! நீ ஏன் வைகுண்டத்திற்கு கிளம்பி விட்டாய்? வைகுண்டத்தின் மகாராணியாகிய மகாலக்ஷ்மி தான் துவாரகாவில் ருக்மணி தேவி. அந்த ஸ்ரீகிருஷ்ணர் தான் சுயம் பகவான். அவரது அவதாரங்களே வாமனர் போன்ற அவதாரங்கள் ஆகும். ஸ்ரீலட்சுமி தேவியின் அவதாரமே ருக்மணி தேவி. அவள் எப்போதும் பகவானின் தாமரைப் பாதங்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கிறாள்." என்று கூறிய சிவபெருமான், "ஓ, பிராமணா! தயவு செய்து சிறிது நேரம் அமருங்கள்! நான் உங்களுக்கு ஒரு ரகசியம் கூறுகிறேன். கவனமாகக் கேளுங்கள்!" என்றார்.

*த்வத்- ததவத் மத் கருடாதிதஸ் ச,*
*ஸ்ரீயோ அபி காருண்ய- விஷேச பாத்ரம்*
*ப்ரஹலாதா ஏவ ப்ரதிதோ ஜகத்யா கிருஷ்ணஸ்ய*
*பக்தோ நித்ராம் பிரியஸ் ச*
*(ஸ்ரீ பிருஹத் பாகவதாமிர்தா: 1.3.75)*

"உன் தந்தை பிரம்மதேவரை விடவும், என்னை விடவும், கருடனை விடவும், வைகுண்ட வாசிகளை விடவும் பிரகலாதனே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர்" என்று கூறினார்.

## *பகவானின் கருணை பிரகலாதருக்கே!*

சிவபெருமான் நாரதரிடம், "பாகவதத்தில் பகவான் தன் பக்தர்களின் சிறப்பு பற்றி தன் திருவாயினால் வெளிப்படுத்திய வார்த்தைகளை நினைத்துப்பார்!" என்றார். ஸ்ரீமத் பாகவதம் நான்காவது அத்தியாயத்தில் பகவான் துர்வாச முனிவருடன் பேசிய செய்தி இங்கு குறிப்பிடப்படுகிறது.

*ஸ்ரீ பகவான் உவாச*
*அஹம் பக்த- பராதீனோ ஹி*
*அஸ்வதந்த்ர இவ த்விஜ*
*ஸாது பிர் க்ரஸ்த - ஹ்ருதயோ*
*பக்தைர் பக்த - ஜன-ப்ரய:*
*(ஸ்ரீமத்பாகவதம்: 9.4.63)*

"பரமபுருஷர் பிராமணரிடம் பேசினார்: 'நான் முற்றிலும் என் பக்தர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறேன். உண்மையில் நான் பக்தர்களுக்கு அடிமைப் பட்டவன். எனது பக்தர்கள் பௌதீக ஆசைகளை முற்றிலும் துறந்தவர்கள் என்பதால், அவர்களுடைய இதயத்தின் மட்டுமே ஆழத்தில் அமர்ந்தவனாக இருக்கிறேன். என் பக்தனின் பக்தர்களும் எனக்கு மிகப் பிரியமானவர்களாதலால் என் பக்தனைப் பற்றி சொல்லத் தேவையேயில்லை."

பிரம்மதேவர் மற்றும் சிவபெருமான் உட்பட, பிரபஞ்சத்திலுள்ள மகா புருஷர்கள் அனைவரும் பரம புருஷரின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளனர். ஆனால் பரமபுருஷரோ, அவரது பக்தர்களின் பூரணக் கட்டுப்பாட்டில் இருக்கிறார்!

"நான் என் பக்தர்களோடு அல்லாமல், அனைத்து ஐஸ்வர்யங்களுடனும், மகாலஷ்மியுடன் இருப்பதால் கூட மகிழ்ச்சி அடைவதில்லை." என்று பகவான் குறிப்பிடுகிறார். எனவே, பகவானின் தூய பக்தர்கள் மட்டுமே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் என சிவபெருமான் நாரதருக்கு கூறினார். அதிலும் பிரகலாதனே பகவானின் கருணைக்கு மிகவும் பாத்திரமானவர் என்று கூறினார்.

*தத்ராப்பி அஸேஷ - பக்தானாம் உபமானதயோதித:*
*சாக்சாத் பகவதேவாசௌ ப்ரஹலாதோ அதர்க்ய பாக்யவான்*
*(ஸ்ரீபிருஹத்பாகவதாமிர்தம் :1.3.79)*

"எண்ணிலடங்காத ஏராளமான பக்தர்களில் பிரகலாதன் மட்டுமே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர். ஏனென்றால், பகவான் இரணியகசிபுவிடமிருந்து பிரகலாதனைக் காப்பாற்ற நரசிம்மராக வந்து, இரணியகசிபுவை தன் நகங்களால் கிழித்துப் போட்டார். நரசிம்மரின் உக்கிரத்தைத் தாங்க முடியாமல் தேவர்களும், லெட்சுமி தேவியும் கூட தூரமாக நின்று விட்டனர். பிரகலாதர் மட்டுமே பகவானின் பக்கத்தில் சென்றார். ஒரு சிங்கம் தன் குட்டியை நக்குவது போல, பிரகலாதரை அணைத்து வாஞ்சையுடன் நக்கிக் கொடுத்தார்.

"பிரகலாதனிடம் நரசிம்மதேவர் தன்னிடம் வரம் வாங்கிக் கொள்ளுமாறு திரும்பத் திரும்பக் கேட்டார். ஆனால், பிரகலாதனோ தனக்கு வரம் வேண்டாம் என்றும் தனக்கு பிறவி தோறும் பக்தியே வேண்டும் என்றார். முக்தியை துச்சமாக நினைத்தார். தான் கஷ்டத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என நினைக்கவில்லை."

*புன:புனர் வரான் தித்சுர் விஷ்ணுர் முக்திம் ந யாசித:*
*பக்திர் ஏவ வ்ரத யேன ப்ரஹ்லாதம் தம் நமாமி அஹம்*
*(ஸ்ரீ பிருஹத்பாகவதாமிர்தம்: 1.3.81)*

"பாணாசுரன், பலி சக்கரவர்த்தி போன்றோர்களுக்காக பகவான் சுதள லோகத்தில் வாயில் காப்பாளனாக இருக்கிறார். எதற்காக? பிரகலாதன் பகவானிடம் எந்த வரமும் கேட்கவில்லை. எனவே, அவரது வம்சத்தினருக்கு வரங்களைக் கொடுக்க வேண்டி, பிரகலாதனுக்காக சுதள லோகத்தில் வாயில் காப்பாளராக இருக்கிறார்.

"மகாலட்சுமியை விடவும் பிரகலாதன் தான் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் என்று கூறினால், கௌரி (பார்வதி தேவி) பொறுத்துக் கொள்ள மாட்டாள். ஏனென்றால், கௌரி மகாலட்சுமியின் தோழி. அவள் இங்கே இருப்பதால் இதற்கு மேல் பிரகலாதரின் பெருமைகளைக் என்னால் கூற முடியாது எனக் கூறிய சிவபெருமான் நாரதரை சுதள லோகத்திற்கு போகுமாறு கூறினார்.

"ஓ நாரதா, நீ விரைந்து சுதள லோகத்திற்குப் போ! உமது எண்ணிலடங்காத ஆசீர்வாதங்களை அவனுக்குக் கொடுங்கள்! அவனைக் கட்டி அணைத்துக் கொள்ளுங்கள், நான் கட்டி அணைப்பதையும் அவனுக்குக் கொண்டு கொடுங்கள்!

"அங்கு பகவான் தனது கையில் கதையுடன் பாதுகாவலராக இருக்கிறார். உமக்கு சந்தோஷம் கிடைக்கும் என நினைத்து அங்கு சென்று பிரகலாதனை புகழ்ந்து விடாதீர்கள். அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது." என்று சிவபெருமான் கூறியதைக் கேட்டதும் நாரதர் சுதள லோகத்திற்கு பயணமானார்.

# அத்தியாயம் 4

## பக்தன்

### *பரீட்சித் மகாராஜா தன் தாயாரிடம் கூறுகிறார்*

சிவபெருமான் கூறிய வார்த்தைகளைக் கேட்ட நாரதர், தன் மனமென்னும் ஊர்தியில் ஏறி அசுரர்கள் வசிக்கும் சுதள லோகத்திற்கு சென்றார். பாதாள லோகத்தில் மூன்றாவது லோகமே சுதள லோகம்.

அங்கு வைஷ்ணவர்களில் சிறந்தவரான பிரகலாதர், தனியாக ஒரு இடத்தில அமர்ந்து பகவானின் மகிமைகளை நினைத்தும், அவரது தாமரைப் பாதங்களை தியானித்தும் உருகிக் கொண்டிருந்தார். பிரகலாதர் தியானத்தில் இருக்கும்போதே நாரதர் வருவதை கண்டு கொண்டார். பிரகலாதர் நாரதருக்கு நமஸ்காரம் செய்ய ஓடி வந்தார். தாமரை மலரில் தேனுண்டு கொண்டிருக்கும் வண்டு அதில் லயித்திருப்பதால், வெளியே வர சிறிது நேரமாகும். அதுபோல, பகவானின் தாமரைப் பாதங்களில் லயித்திருந்த பிரகலாதரால் எழுந்து வர சில வினாடிகள் ஆயிற்று.

### *பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் பிரகலாதரே!*

நாரதரை இழுத்து பிரகலாதர் உட்கார வைத்தார். ஆனால், நாரதரோ, பிரகலாதருக்கு மரியாதை கொடுப்பதற்காக உட்கார மறுத்தார். பிரகலாதர் நாரதரை அமர வைத்து அவரது பாதங்களுக்கு பூஜை செய்ய தயாரானார். அப்போது நாரதர் பிரகலாதரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கண்ணீரோடு பேச ஆரம்பித்தார். "ஓ, மகனே! நீ மட்டுமே பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன். நீண்ட காலத்திற்குப் பிறகு உனது தரிசனம் எனக்குக் கிடைத்துள்ளது. பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் தூய பக்தனைத் தேடும் ஆர்வத்தில் நான் அலைந்து கொண்டே இருக்கிறேன். கடைசியில் நான் உன்னைக் கண்டு பிடித்து விட்டேன். நீ தான் பகவானின் அளவற்ற கருணைக்குப் பாத்திரமானவன். சிறுவயதில் இருந்தே நீ பகவானுக்கு பிரேம

பக்தியை செய்து விட்டாய்! இது வரை யாரும் இப்படி ஒரு பக்தியை செய்யவில்லை!

*ஸ்ரீ நாரத உவாச*
*த்ருஷ்டாஸ் சிராத் க்ருஷ்ண - க்ருபா - பரஸ்யா*
*பாத்ரம் பவான் மே ச - பலா:ஷ்ரமோ அபூத்*
*ஆபால்யதோ யஸ்ய ஹி கிருஷ்ண பக்திர்*
*ஜாதா விசுத்தா ந குடோ பி யாஸித்*
*( பிருகத் பாகவதாமிர்தம்: 1.4.4)*

"நான் பகவானின் தூய பக்தனைக் காணும் ஆர்வத்தில் பிரயாகையிலிருந்து இந்த பயணத்தை ஆரம்பித்தேன். இப்போது நான் அந்த பக்தனை கண்டு பிடித்து விட்டேன். நீ தான் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர். இப்படியொரு பக்தியை இதுவரை யாரும் செய்ததில்லை. இனி செய்யப் போவதும் இல்லை."

"ஓ, பிரகலாதா, உன் தந்தை உனது பக்திக்கு ஏகப்பட்ட தடைகளைக் கொடுத்தார். எத்தனை கொடுமைகளை நீ சந்தித்தாய்! அப்படியிருந்தும், சிறுவயதாக இருந்த போதிலும் பக்திக்கான அத்தனை தடைகளையும் தாண்டி வந்து விட்டாய்! உன்னுடைய தூய பக்தியை அரக்கர் குல சிறுவர்களுக்கும் கூட சொல்லிக் கொடுத்து அவர்களையும் பக்தனாக்கினாய்!" என்று நாரதர் பிரஹலாதரை புகழ்ந்தார்.

இந்த செய்தி பாகவதத்திலும் ஏழாம் காண்டத்தில் குறிப்பிடப்படுகிறது.

*திக்- கஜைர் தந்தசூகேந்தரைர் அபிசாராவபாதனை:*
*மாயாபி:சன்னிரோதைஸ் ச கர- தானைர் அபோஜனகை:*
*ஹிம- வாயு- அக்னி ஸலீலை:பர்வதாக்ரமணைர் அபி*
*ந சசாக யதா ஹந்தும் அபாயம் அஸுர:ஸுதம்*
*சிந்தாம் தீர்க்கதாம் ப்ராப்தஸ் தத் - கர்தும் நாப்யபத்யத*
*(ஸ்ரீமத்பாகவதம்:7.43-44)*

"பெரிய யானைகளின் பாதங்களுக்கு அடியில் தள்ளியும், பெரிய பாம்புகளுக்கிடையில் தள்ளியும், மாயாஜால வித்தைகளை பிரயோகித்தும், மலையுச்சியிலிருந்து உருட்டித் தள்ளியும், துஷ்ட மந்திரங்களை பிரயோகித்தும், விஷம் கொடுத்தும், பட்டினி

போட்டும், கடும் குளிர், காற்று, நெருப்பு, நீர் ஆகியவற்றில் அவரைப் போட்டும், அவர் மீது பெரிய பாறைகளை வீசியும் தன் மகனை இரண்யகசிபுவினால் கொல்ல முடியவில்லை"

அத்தனை துன்பங்கள் கொடுத்தும் பிரகலாதர் பொறுத்துக் கொண்டார். பக்தியில் இருந்து இறங்கி விடவில்லை.

## *பகவானுக்கு உன்மீது எத்தனை கருணை!*

மேலும் நாரதர் பகவானுக்கு பிரகலாதர் மீது உள்ள கருணை எத்தனை உயர்ந்தது என்பதைக் கூறினார். "உன்னுடைய தந்தை உன்னை சமுத்திரத்தில் தூக்கி வீசும்போது, கர்போதகஷாயி விஷ்ணுவாக வந்து பகவான் உன்னை தாய் போல காப்பாற்றினாரே! உனது துன்பத்தைத் தீர்க்க நரசிம்மர் ஆக்ரோஷமாக வந்தார். தேவர்கள் அவரது பக்கத்தில் கூட செல்ல அஞ்சினர். லெட்சுமி தேவி கூட பக்கத்தில் செல்ல அஞ்சினாள். அவர்கள் உன்னைத்தான் அனுப்பி வைத்தார்கள். நீ பயமின்றி பக்கத்தில் சென்றாய். அவர் உன்னைக் கட்டி அணைத்து, நாவால் நக்கி சாந்தமானார். பகவான் கண்டிப்பாக ஒரு வரம் வாங்கிக் கொள் என்று கூறியபோதும், பக்தி மட்டுமே போதும் என்றாய்! அத்தகைய தூய பக்தி உன்னிடம் உள்ளது"

பகவான் சுயமாக ஆத்ம-ராமர் தான் (எப்போதும் முழுவதுமாக திருப்தி அடைந்தவர்). ஆயினும் அன்புடன் ஒரு பக்தன் பயமின்றி பக்தி செய்யும்போது, அவர் அதை விரும்புகிறார். எனவே, பிரகலாதர் பயமின்றி பக்கத்தில் செல்லும்போது, "என்னுடைய பக்தன் என்னிடம் பயப்படுவதை நான் விரும்புவதில்லை. எனக்கு மரியாதை கொடுப்பதை விட்டுவிட்டு சுதந்திரமாக இரு. உன் அன்பு மட்டும் போதும்." என்றார். எனவே, பகவானிடம் பயமின்றி பக்தி செய்ய வேண்டும். பயமும், மரியாதையும் கொள்ளும் போது பகவானை தூரத்தில் வைப்பது போல இருப்பதாக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் குறிப்பிடுகிறார்.

"யாரும் என்னைக் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், எனது பக்தர்கள் பிரேமை என்னும் கயிற்றால் என்னைக் கட்டிப்போட்டு விடுகிறார்கள். அப்போது நான் அவர்களுக்குக் கட்டுப்படுகிறேன்" என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணர் குறிப்பிடுகிறார்.

நாரதர் மேலும் கூறுகிறார்: "ஓ, பிரகலாதா! பகவான்

உன்மீது கொண்ட கருணையால் தான் உமது பேரன் பலி மகாராஜா ஆட்சி செய்யும் சுதள லோகத்தில் வாயில் காப்போனாக அவர் இருக்கிறார்".

ஸ்கந்த புராணத்திலும் இந்த செய்தி சொல்லப்படுகிறது. ஒருமுறை 'குஷன்' என்னும் அசுரன் துவாரகையைத் தாக்கும்போது, பகவானை அழைக்க துர்வாச முனிவர் சுதள லோகம் வந்த செய்தி குறிப்பிடப் படுகிறது. அங்கு பலி மகாராஜா பகவானை துர்வாச முனிவருடன் அனுப்பாததால், துர்வாச முனிவர் சுதள லோகத்தின் வாயிலில் உண்ணாவிரதம் இருந்ததாகவும் கூறப்படுகிறது. (ஸ்கந்த புராணம்: 4.19.2-3)

## *பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் நான் அல்ல!*

நாரதர் கூறியவற்றைக் கேட்ட பிரகலாதர், பகவானின் கருணை தனக்கு சிறிது கூட இல்லை என்று புலம்பலானார். அதற்கான காரணங்களையும் கூறினார்.

"நான் சிறு வயதில் பகவானை தியானித்தேன். ஆனால், பக்தியில் எந்த முதிர்ச்சியும் அடையவில்லை. அதை தூய பக்தி என எடுத்துக் கொள்ள முடியாது.

"என்னுடன் கூட பயின்ற அசுரக் குழந்தைகளுக்கும் நான் பக்தி கொடுத்ததாகக் கூறினீர்கள். ஆனால் நான் உண்மையில் சின்னச் சின்ன அறிவுரைகளை மட்டுமே கொடுத்தேன்! அதை பக்தி என எடுத்துக் கொள்ள முடியாது.

"பகவான், நான் பக்தி செய்யும் போது ஏற்பட்ட தடைகளை நீக்க ஒரு முறை மட்டுமே (நரசிம்ம பகவானாக) வந்தார். தடைகள் ஏற்படும் போதெல்லாம் வரவில்லை. இன்னொரு முறை என்னை சமுத்திரத்தில் தூக்கி போடும்போது அவரை பார்த்தேன். ஆனால் அனைத்தும் ஒரு கனவு போலவே தான் இருந்தது. இதையெல்லாம் பகவானின் கருணை என எடுத்துக் கொள்ளக் கூடாது.

"'பகவானின் கருணை என்பது என்ன?' என்று சாதுக்கள் கூறுவது ஒன்றே ஒன்றைத்தான். அது 'பகவானுக்கு நேரடியாக சேவை செய்வது மட்டுமே'! நான் பகவானுக்கு எந்த சேவையும் செய்யவில்லை. அந்த வாய்ப்பையும் பகவான் எனக்குக் கொடுக்க

வில்லை. ஆனால், அந்த வாய்ப்பு அனுமானுக்குக் கொடுக்கப் பட்டது. பகவான் அனுமானிடம் 'சீதையைத் தேடிப்போ!' என கணையாழியைக் கூட கொடுத்தனுப்பினாரே!

"பகவான் நரசிம்மராக வந்தது எதற்காக? தேவர்களைக் காப்பாற்றவும், ஜெயாவுக்கும் விஜயனுக்கும் சாபத்திலிருந்து முக்தி கொடுக்கவும், பிரம்மா மற்றும் பிரம்ம தேவரின் நான்கு குமாரர்களின் வார்த்தைக்காகவும், மற்றும் அவரது நரசிம்ம லீலைக்காகவும் தான் வந்தார். என் மீது கொண்ட கருணையால் அவர் வரவில்லை. பிரபுவே! அவர் என் தந்தையைக் கொல்ல நரசிம்மராக வந்தார். வந்த காரியம் முடிந்ததும் கிளம்பி விட்டார். நான் அவரைப் பார்ப்பேன் என நினைக்கவில்லை. எல்லாம் கனவு போல இருந்தது. ருத்ர மூர்த்தியாக இருந்ததால் சரியாக பார்க்கக் கூட முடியவில்லை. திக்பிரமை பிடித்து நின்று விட்டேன். மிகக் குறைந்த நேரம் மட்டுமே வந்தார். இதை எப்படி பகவானின் கருணை எனக் கூற முடியும்?

"எனக்கு செல்வமும், ஆட்சியும் கொடுத்தாரே! அவை பக்திக்கு இடைஞ்சலானவை. பக்திக்குப் பாதகமாக இருக்கும் செல்வத்தையும், ஆட்சியையும் கொடுக்கும் போது பகவானின் கருணை எனக்கு எங்கே இருக்கிறது!

*பரமாகிஞ்சனா- ஷ்ரேஸ்தா யதைவ பகவான் ததோ*
*ராஜ்யம் மஹியம் ததா ஞாதம் தத் - க்ருபானுஸ் ச நோ மயி*
*(ஸ்ரீ பிருஹத் பாகவதாமிர்தம் : 1.4.26)*

"பகவான் சுதள லோகத்தில் வாயில் காப்போனாக இருப்பது, பலி மகாராஜை பாதுகாப்பதற்கு அல்ல. பலி மகாராஜாவை வாசலை விட்டு வேறு எங்கும் செல்லாமல் தடுக்கவே! அசுரர்களுக்கு அசுர குணம் எப்போது தலை தூக்கும் எனத் தெரியாது. பலி மகாராஜாவை வெளியே விட்டால் பழையபடி இந்திரனுக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே, சுதள லோகத்திலிருந்து பலி மகாராஜாவை வெளியே வர விடாமல் செய்யவே அவர் பாதுகாவலராக இருக்கிறார்!"

மேலும் பிரகலாதர், "நாரதரே! உங்கள் மனம் வெண்ணெய் போல மென்மையாக இருக்கிறது. பக்தர்களைக் கண்டதும் உருகி விடுகிறீர்கள்! அதனால் என்னிடம் இவ்வாறு பேசுகிறீர்கள். நீங்கள் எனக்கு கருணை கொடுக்க வேண்டும் என நினைத்து, அசுரனாகிய எனக்கு பக்தி அளித்தீர்கள்! பகவான் அனுமான்

போன்ற பக்தர்களுக்கு மட்டுமே கருணையை அள்ளி அள்ளி கொடுக்கிறார். எனக்கு அப்படி இல்லையே!" என பிரகலாதர் புலம்பினார். பகவானின் கருணைக்குப் பாத்திரமான அனுமான் கிம்புருஷ வர்ஷத்தில் இருக்கிறார். அங்கு சென்று அவரது தரிசனத்தைப் பெறுமாறு கூறிய பிரகலாதர், அனுமானின் பெருமைகளைப் பற்றி கூறலானார்.

## *தூயபக்தர் அனுமானின் சிறப்புகள்*

"அனுமார் சிறுவயதிலிருந்தே மிகவும் வலிமை உடையவராக இருக்கிறார். தேவர்களிடமிருந்து பெற்ற வரங்களால், முதுமையும் இறப்பும் இல்லாத வாழ்க்கை அவருக்குக் கிடைத்துள்ளது.

*யோ பலிஸ்த - தமோ பால்யே தேவ- வ்ருந்த - ப்ரசாதத:*
*ஸம்ப்ராப்த - சத்-வர-வ்ரதோ ஜரா-மரண-வர்ஜித:*
*(ஸ்ரீ பிருகத்பாகவதாமிர்தா: 1.4.41)*

"அனுமார் சிறு குழந்தையாக இருக்கும்போது, ஒருமுறை சூரியனைப் பார்த்து பழம் என நினைத்து அதனை உண்ணுவதற்காக சூரியனை நோக்கி பறந்தார். தேவர்களின் தலைவனான இந்திரன், சூரிய தேவனைக் காப்பாற்ற தனது வஜ்ராயுதத்தால் அனுமாரைத் தாக்கினார். அதனால் அனுமார் கீழே விழுந்து மயக்கமானார். அனுமார் வாயுதேவனின் புத்திரனாதலால், வாயுதேவன் பிரபஞ்சமெங்கும் சஞ்சரிக்கும் காற்றை நிறுத்தி விட்டார். எனவே, அனைத்து தேவர்களும் இறங்கி வந்து வரங்களைக் கொடுத்தனர். எனவே தான் அவருக்கு பிறப்பு, இறப்பு, முதுமை இல்லாத வாழ்வு அமைந்தது.

"ஹனுமார் எதற்கும் அஞ்சாதவர். நைஸ்திக பிரம்மச்சாரி. சாஸ்திர ஞானமும், கவி பாடும் திறமையும் மிக்கவர். பகவான் இராமச்சந்திரரின் மிகச்சிறந்த சேவகன். 800 மைல் தொலைவில் உள்ள இலங்கைக்கு தாவிச்சென்று, இராவணனின் நகரத்திற்குள் நுழைந்து இராவணனை நடுங்க வைத்தார். பகவான் இராமச்சந்திரர் கூறிய செய்திகளை சீதா தேவிக்கு கூறி சாந்தப் படுத்தினார்.

"பகவான் இராமச்சந்திரருக்கு வாகனமாக செயல்பட்டார். அவரது வாலின் பின்பகுதியை வெண்கொற்றக் குடை போல

வைத்து, முதுகை அகலமாக்கி மென்மையான பஞ்சு மெத்தை போல வைத்து, அதில் ஸ்ரீஇராம, இலெட்சுமணரை அமர வைத்து, கருடன் எவ்வாறு பகவானை சுமந்து செல்கிறதோ, அதுபோல சுமந்து சென்றார். வானரப் படைகள் இலங்கை செல்வதற்கு சேது பாலத்தைக் கடல் மீது கட்ட பெரும் உதவியாகவும், பொறுப்பாளராகவும் செயல்பட்டார்.

"விபீஷணன், ஸ்ரீராம பிரானின் தாமரைப் பாதங்களில் சரணடைய ஆசைப்பட்டார். விபீஷணனை இராமபிரானுடன் சந்திக்க ஏற்பாடு செய்து அந்த ஆசையை நிறைவேற்ற வைத்தவர் அனுமார்.

"இரவு போரிடும் போது, இந்திரஜித்தின் மந்திர சக்தியால் இலெட்சுமணனும், குரங்குகளும் மயக்கமடைந்தன. அப்போது மருத்துவர் சுசேனா 'விஷல்ய கரணீ' என்னும் மூலிகையைக் கொண்டு வர பணித்தார். அனுமார் கந்தர்வர்களிடம் போரிட்டு கந்த மாதனா என்னும் மலையையே தூக்கி வந்து விட்டார்!

"அனுமான் சீதா தேவிக்கும் மிகவும் பிரியமானவர். இராமபிரான் இராவணனைக் கொன்ற செய்தியை முதலில் சீதா தேவியிடம் சென்று கூறியவர் அனுமார் தான். முதலில் கடல் கடந்து சென்று இராமபிரானின் செய்தியைக் கூறி, இராமரைப் பிரிந்த சீதா தேவிக்கு ஆறுதல் கூறியவர் அவர். இராமபிரானிடம் சீதாதேவியை சேர்த்து வைக்க அன்புடன் சேவை செய்தவர் அவர். பகவான் இராமபிரானின் பட்டாபிஷேகத்தின் போது, சீதாதேவி தனது கழுத்தில் அணிந்துள்ள தங்க மாலையை அனுமாருக்கு அணிவித்து ஆசீர்வதித்தாள்.

"இராமபிரான் அனுமாரை இந்த பூமியில் இருக்க வேண்டும் என்று கூறியதால், இந்த பூமியில் இன்னும் அனுமார் வசிக்கிறார். பகவான் இராமச்சந்திரரின் புகழையும், பக்தியையும் பூமியில் பரப்புவதற்காக இங்கே தங்கிவிட்டார். அனுமார் எப்போதும் இராமபிரானின் புகழைப் பாடிக்கொண்டும், அவர் பெருமைகளைக் கேட்டுக் கொண்டும் இருப்பதால் அதே தேஜஸுடனும், உயிருடனும் இன்று வரை இருக்கிறார். கிம்புருஷ வர்ஷத்தில் சீதா - இராம, இலெட்சுமண விக்கிரகங்களை வழிபட்டும், இராம லீலைகளைக் கேட்டும் பாடிக் கொண்டும் இருக்கிறார்.

மேலும் கடைசியாக பிரகலாதர் நாரதரிடம், "அனுமாரின் உயர்ந்த மகிமைகள் நான் கூறியவற்றை நீங்கள் நேரில் தெரிந்து

கொள்ள வேண்டும். இதற்கு மேல் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? உடனே நீங்கள் கிம்புருஷ வர்ஷம் செல்லுங்கள். அனுமாரின் தரிசனத்தைப் பெற்று அவரது மகிமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று கூறினார்.

உடனே, நாரதர் தன் ஆசனத்திலிருந்து எழுந்து ஆகாயம் வழியாக மனோ வேகத்தில், மேல் நோக்கி கிம்புருஷ வர்சத்திற்கு பயணமானார். இதனை பரீட்சித் மகாராஜா தன் அன்னை உத்தராவிற்கு விளக்கிக் கூறினார்.

## *கிம்புருஷவர்ஷத்தில் நாரதர்*

நாரதர் கிம்புருஷ வர்ஷத்தில் நுழைந்ததும் அவர் கண்ட காட்சி அவரை மிகவும் சந்தோஷத்தில் ஆழ்த்தியது.

ஸ்ரீ அனுமார் தனியாக அமர்ந்து, பகவான் இராமச்சந்திர பிரபுவின் விக்கிரகத்தின் தாமரைப் பாதங்களுக்கு காட்டிலிருந்து கொண்டு வந்த பூக்கள், பழங்கள் போன்றவற்றைக் கொண்டு அர்ச்சனை செய்து கொண்டிருந்தார். அவர் வழிபட்டது விக்கிரகமாக இருந்தாலும், பகவான் இராமச்சந்திர பிரபுவிற்கு நேரடியாக சேவை செய்வது போல வழிபட்டுக் கொண்டிருந்தார்.

சில நேரம் அவரே பாட்டினை இயற்றிப் பாடினார். சில நேரம் உரை நடை வடிவில் துதித்தார். சில நேரம் வேதங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ள பகவானின் மகிமைகளைப் பாடினார்.

அனுமாரின் தரிசனம் கிடைத்ததும் நாரதர், "ஓ ஸ்ரீரகுநாதா, ஜானகியின் அன்புக்குரியவரே, இலெட்சுமணனின் மூத்த சகோதரனே!" என இராமச்சந்திர பிரபுவின் மகிமைகளை உரக்கக் கூறினார்.

நாரதரின் ராம நாம கீர்த்தனையைக் கேட்ட அனுமார் சந்தோசத்துடன் நாரதரின் கழுத்தைக் கட்டிக் கொண்டு குதிக்க ஆரம்பித்தார். கண்ணீருடன் ஆகாயத்தில் குதித்து பிரேமையில் மூழ்கிய அனுமாரின் கண்ணீரை நாரதர் தன் கைகளால் துடைத்தார். பின்னர் அனுமாரைப் பார்த்து "ஸ்ரீமான், நீங்கள் பிரேம பக்தி என்னும் பெரும் செல்வத்தைப் பெற்றுள்ளீர்! உமது தரிசனத்தால் எனக்கும் பகவானின் பிரியமான அன்பு கிடைத்துள்ளது" என்றார்.

அனுமான் தனது ஆலயத்திற்குள் நாரதரை அழைத்து சென்று ஒரு ஆசனத்தில் அமர்த்தினார். அனுமாரின் பக்தி பிரேமையைக் கண்ட நாரதரும் பிரேமையில் மூழ்கினார். தன்னுடைய வீணையை எடுத்து மீட்டி இசைக்கலாம் என நினைத்தார். ஆனால், அவரால் முடியவில்லை. எனவே வீணையை கையில் பிடித்துக் கொண்டு அமர்ந்தார்.

நாரதர் ஹனுமாரிடம் பேச ஆரம்பித்தார். "ஹனுமானே, நீர் தான் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர். நீ எவ்வளவு அழகாக பகவானை வழிபடுகிறாய்! பக்திப் பிரேமையில் மூழ்கி விட்டாய்! உனக்கு இணையாக யாரும் பக்தி செய்யமுடியாது" எனப் புகழ்ந்தார்.

"நீ பகவானின் சேவகன், நண்பன், வாகனம், இருக்கை, கொடி, குடை, பந்தல், காற்றாடி போன்ற அனைத்துமாக இருந்து சேவை செய்கிறாய்! பகவானின் முதன்மை ஆலோசகராக இருக்கிறாய்! ஒரு சிறந்த கவிஞராக இருந்து பாட்டுக்களைப் பாடுகிறாய்! சிறந்த மருத்துவராகவும் இருக்கிறாய்!"

*தாஸா ஸகா வாகனம் ஆசனா த்விஜா க்ஷத்ரம்*
*விதானம் வ்யாஜனாம் ச வாண்டி*
*மந்த்ரீ பிஸாக் யோத - பதி: ஸகாய ஷ்ரேஷ்தோ*
*மஹா- கீர்த்தி -விவர்த்தனாஷ் ச*
*(பிருகத் பாகவதாமிர்தம்:1.4.65)*

இவ்வாறு நாரதர் மென்மேலும் அனுமாரைப் பற்றி நேரடியாக புகழ்ந்து கொண்டே இருந்தார். "பிரேம பக்தியில் நீ கருடனையும் மிஞ்சி விட்டாய். பகவானுக்கு சேவை செய்வதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டாய். நீதான் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன்!", என்று புகழ்ந்தார்.

உடனே அனுமார் பகவான் ஸ்ரீ ராமச்சந்திரரைப் பிரிந்த துயரத்தில் அழ ஆரம்பித்தார்: "ஓ, பிரபு! நான் பிறப்பு, இறப்பு என்னும் கட்டில் இருந்து விடுபடும் முக்தியை விரும்பவில்லை, நான் உங்கள் சேவகன் என்னும் உறவை தொலைத்து விட்டேன்" என்று அங்கலாய்த்தார்.

ஏற்கெனவே பகவான் இராமச்சந்திரரைப் பிரிந்த துயரத்தில் இருந்த அனுமார், நாரதர் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் விக்கி விக்கி அழ ஆரம்பித்தார். காய்ந்த புல்லில்

நெருப்பை மூட்டுவது போல நாரதரின் வார்த்தைகள் அவரைத் துன்பப் படுத்தியது. எனவே, நாரதரிடம் "உயர்ந்த சாதுவாகிய நாரத ரிஷியே! பகவானின் தாமரைப் பாதங்களுக்கு சேவை செய்யும் எனது பாக்கியம் தொலைந்து விட்டது. எனவே, எனக்கு அழுகை வருகிறது" என்றார்.

*ஸ்ரீ - ஹனுமான் உவாஸ -*
*முனி- வர்யா !கதம் ஸ்ரீமத் - ராமச்சந்திர பதாம்புஜை :*
*ஹினாம் ரோடயஸே தீனம் நைஸ்துர்ய - ஸ்மரனென மாம்*
*(பிருகத் பாகவதாமிர்தம் - 4-6)*

## *பகவானின் கருணை எனக்கு இல்லை!*

அனுமார் நாரதரிடம், பகவானின் கருணை தனக்கு சிறிதளவு கூட இல்லை எனக்கூறி அதற்கான காரணங்களையும் குறிப்பிடுகிறார்.

"நாரதரே, என் மீது கொண்ட அன்பினால் நீங்கள் இவ்வாறு கூறுகிறீர்கள்! நான் அவரது சேவகனாக இருந்திருந்தால், அவர் தனது லீலைகளை முடித்துவிட்டு அவரது நிரந்தரமான தாமத்திற்கு திரும்பிச் செல்லும் போது என்னையும் கூடவே அழைத்து சென்றிருப்பாரே! அயோத்திய வாசிகள், சுக்ரீவன் உள்ளிட்ட அவரது சகாக்கள் அனைவரையும் அவர் தன்னுடன் அழைத்து சென்றார். ஆனால், என்னை மட்டும் இங்கு தனியாக விட்டு விட்டு சென்று விட்டாரே!

"பகவான் இப்போது மதுராவில் தனது அனைத்து சக்திகளுடனும், ஐஸ்வரியங்களுடனும் அவதரித்துள்ளார். அங்கு பாண்டவர்களுக்கு பகவானின் முழு கருணையும் கிடைத்துள்ளது. அவர்களுக்கு கிடைத்துள்ள பகவானின் கருணை சுமேரு மலை அளவு என்றால், எனக்குக் கிடைத்துள்ள கருணை சுமேரு மலையின் ஒரு தூசு அளவு தான். பாண்டவர்களுக்குக் கிடைத்துள்ள அளவு கருணை எனக்குக் கிடைக்கவில்லை" என்று புலம்பலானார்.

*க்ருதஸ்யானுகிரஹஸ்யாம்ஸம்*
*பாண்டவேஸு மஹாத்மஷு*
*துலயார்ஹதி நோ கந்தும்*
*ஸுமேரும் ம்ருத்- அனுர் யதா*
*(ஸ்ரீ பிருகத்பாகவதாமிர்தம்: 1.4.74)*

## *பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர்கள் பாண்டவர்களே!*

அனுமார் மேலும் தொடர்ந்தார்: "சிறுவயதிலிருந்தே பகவான் ஸ்ரீகிருஷ்ணர், பாண்டவர்கள் மீது தனிக் கருணை கொண்டுள்ளார். பாண்டவர்களுக்கு நேர்ந்த ஒவ்வொரு அபாயத்தின் போதும், பகவானே அவர்களைக் காப்பாற்றினார். பாண்டவர்களுக்கு அந்த துன்பங்கள் ஏன் வந்தன? அந்த துன்பங்களை பாண்டவர்களுக்குக் கொடுத்து, அதிலிருந்து அவர்களை விடுவித்து, பகவான் பாண்டவர்களின் பெருமையை உலகறிய செய்தார்" என்று அனுமார் கூறினார்.

"சிறுவயதில் கௌரவர்கள் பீமனுக்கு லட்டுவில் விஷம் கலந்து கொடுத்து, அவனைக் கட்டி நீரினுள் போட்டனர். ஆனால், நாகலோக வாசிகள் பீமனைக் காப்பாற்றியது மட்டுமன்றி, ஏராளமான சக்திகளும் கொடுத்து அனுப்பினார்கள். கௌரவர்கள் பாண்டவர்களை அரக்கு மாளிகையில் வைத்து நெருப்பு வைத்தனர். ஆனால் பகவானின் கருணையால் அதிலிருந்து மீண்டனர்.

"பகவான் பாண்டவர்களுக்காக தேரோட்டியாக, நண்பனாக, ஆலோசகராக, சேவகனாக, மற்றும் தூதுவனாக செயல்பட்டு பாண்டவர்களின் மகிமைகளை உலகறிய செய்தார். பாண்டவர்களும், பகவானும், ஒருவருக்கொருவர் நட்பை, அன்பை, சேவையை பகிர்ந்து கொண்டனர். யுதிஷ்டிரர் இராஜசூய யாகம் செய்யும் போது விருந்தினர்களின் கால்களைக் கழுவி விடும் சேவையை பகவான் ஏற்று செய்தார். சேவை மனப்பான்மை இருந்தால் தான் நட்பு நிலை உறுதியாகப் பெற்றிருக்கும். இங்கு பகவானும், பாண்டவர்களும் நட்பையும், சேவையையும் பகிர்ந்து கொண்டனர்.

"எப்போதும் பகவான் அஸ்தினாபுரத்தில் தங்கி விட்டதால், தவங்கள் செய்யும் ரிஷிகள், தபஸ்விகள், துவாரகையையோ, மதுராவையோ நோக்கி செல்லாமல் அஸ்தினாபுரத்தை நோக்கி சென்றனர். காடுகளில் தவம் செய்வதை விட, அஸ்தினாபுரத்தில் வந்து தங்குவதைப் புனிதமாக நினைத்தனர்."

இவ்வாறு அனுமான் கூறியதைக் கேட்ட நாரதரின் மனம் சந்தோஷத்தில் குதித்தது. 'ஓ, கிருஷ்ணா, துவாரக நாதனே! இப்போதே உம்மிடம் வந்து கொண்டிருக்கிறேன்' என உரத்த

குரலில் கத்த ஆரம்பித்தார். துவாரகாவிற்கு சென்று பகவானின் தாமரைப் பாதங்களுக்கு சேவை செய்ய எண்ணம் கொண்டவராக, துவாரகாவில் நிரந்தரமாக சென்று தங்க முடிவெடுத்தார். (இக்கருத்து ஸ்ரீமத் பாகவதத்திலும் குறிப்பிடப்படுகிறது).

குரு வம்சத்தினரின் மகிமைகளைக் கேட்ட நாரதர், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் தரிசனத்துக்கு ஆர்வம் கொண்டவராய், துவாரகைக்கு சென்று தங்கி, அங்கே கோவிந்தரின் கரங்களில் அடைக்கலம் எடுக்க விரும்பினார்.

பாண்டவர்கள் எவ்வாறு பகவானுடன் அன்பைப் பரிமாறிக் கொண்டார்கள் என்பதை அனுமார் மகிழ்ச்சியுடன் கூறிக் கொண்டு வந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த நாரதர், சந்தோஷத்தில் நடனமாட ஆரம்பித்தார். ஆனால் பாண்டவர்களின் பிரேம ரசத்தை புரிந்து கொண்டிருந்த நாரதரால் முழுவதுமாக நடனமாட முடியவில்லை.

மேலும் அனுமார் கூறினார்: "துயரமான சம்பவங்களை (வஸ்திர ஹாரம்) விளைவிக்க கௌரவர்கள் பாண்டவர்களுக்கு ஏராளமான துரோகங்களை செய்யும் போது, பாண்டவர்கள் பகவான் ஸ்ரீகிருஷ்ணரை மட்டுமே சரணடைந்தனர். பாண்டவர்கள் தூய பக்தர்களாக இருந்ததால், எல்லா கஷ்டங்களிலிருந்தும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரே அவர்களைக் காப்பாற்றினார்."

இப்போது அனுமார் பிரேம முதிர்ச்சியின் காரணமாக, பஞ்சபாண்டவர்கள் முன்னே நிற்பதாக நினைத்துக் கொண்டு, "ஓ பாண்டவர்களே! என் பகவானை தேரோட்டியாகவும், தூதுவராகவும், சேவகனாகவும் வேலை வாங்குகிறீர்களே! வசீகரனான பகவானை, வசீகரிக்கும் தெய்வீக மந்திரத்தாலோ, வசீகரிக்கும் மூலிகை மருந்தைக் கொண்டோ வசீகரம் பண்ணி விட்டீர்களே!" என்று புலம்பினார்.

*நூனம் ரே பாண்டவா மந்த்ரம் ஔஷதம் வாத கிஞ்சன*
*லோகாதராம் விஜானீத்வே மஹா-மோஹன- மோஹனன்*
*(ஸ்ரீ பிருகத்பாகவதாமிர்தம்: 1.4.83)*

பாண்டவர்களுக்கு பகவான் மீது பிரேமை இருப்பது சரி! ஆனால், அவர்களுக்கும் பகவானுக்கும் இடையே உள்ள பாகுபாடு தெரிய வேண்டாமா? பகவான் ஸ்ரீகிருஷ்ணர் முழு முதற்கடவுள். ஆனால், பாண்டவர்கள் ஜீவாத்மாக்கள். ஜீவாத்மாக்கள்

பகவானுக்கு சேவை செய்ய வேண்டும். இங்கு பகவானல்லவா பாண்டவர்களுக்கு சேவை செய்கிறார்!

பக்தர்களின் அன்பிற்குக் கட்டுப்பட்டு, பகவான் கீழே இறங்கி வருகிறார். பக்தர்களுக்கு அவர் அவர்களது பக்திகேற்ப அனுக்கிரகம் செய்கிறார். அனுமானிடம் தாஸ்ய பாவத்தில் அவரது சேவைகளை ஏற்றுக் கொண்டார். எனவே, அவரை வாகனமாக ஏற்றுக் கொண்டார். இங்கு பாண்டவர்களுக்கு சக்ய பாவத்தில் தேரோட்டியாகவும், தூதுவராகவும் சேவை செய்தார்.

அனுமாரும் பீமனும் வாயு புத்திரர்கள். பாண்டவர்களில் குந்தி தேவியின் மகனான பீமன் தனக்கு இளைய சகோதரனாக இருந்தாலும், தன்னைவிட பக்தியில் மூத்தவனாக இருப்பதாக அனுமார் தன் சகோதரரைப் பெருமைப் படுத்தினார். மேலும், குருஷேத்திர போரின் போது அர்ஜுனனின் தேர்க் கொடியில் பகவான் தன்னை அமர்த்தியதைத் தனது அதிஷ்டம் என்று கூறிய அனுமார் நாரதரிடம் "நாம் பாண்டவர்களின் தரிசனம் பெற்று அவர்களின் அடைக்கலம் பெறுவோம்" என்றார்.

நாரதர் அனுமானிடம் "ஓ நண்பனே, எழுந்திரு. நாம் பாண்டவர்களின் இருப்பிடத்திற்கு செல்வோம். அவர்களுடைய நகரம் எவ்வளவு உயர்ந்தது தெரியுமா? வைகுண்டத்தில் கூட அத்தனை ஐஸ்வரியங்களும், இன்பங்களும் கிடையாது. நாம் அங்கு செல்வோம்" என்றார்.

## *அனுமானின் குழப்பம்*

நாரதர் கூறியதைக் கேட்ட அனுமார்ன் சிறிது நேரம் யோசிக்கலானார். பின்னர் பெருமூச்சு விட்டுக் கொண்டு நாரதருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு பேசலானார்: "பாண்டவர்களின் நகரத்துக்கு செல்லவேண்டும் என பேசுவது சரியாகத்தான் இருக்கிறது. ஆனால், என்னால் வர இயலாது. நான் இராமச்சந்திரமூர்த்திக்கு அல்லவா சேவை செய்து கொண்டிருக்கிறேன்!" என்றார்.

அப்போது பகவான் ஸ்ரீகிருஷ்ணர் நம்ப முடியாத லீலைகளை செய்து கொண்டிருந்தார். விளையாட்டுத் தனமாக மட்டுமின்றி ஏமாற்றுத் தனமாகவும் லீலைகளை செய்தார். வைசிய குலத்தில் கோபச் சிறுவனாக வந்து அனைவரையும் குழப்பி விடுகிறார். மிகவும் கற்றறிந்த சாதுக்கள் கூட அவரது லீலைகள் புரியாமல் குழம்பி விடுகின்றனர்.

அனுமார் பகவானை மரியாத புருஷோத்தமராகவே பார்த்திருக்கிறார். ஆனால், அவர் இப்போது லீல புருஷோத்தமராக வந்து ஆயிரக்கணக்கான இராணிகளுடன் லீலைகள் செய்கிறார். அவர் சக்ய பாவத்திலும், வாத்சல்ய பாவத்திலும், மாதுர்ய பாவத்திலும் செய்யும் லீலைகளை அனைவராலும் புரிந்து கொள்ள முடியாது. பகவான் '*அகில ரசாம்ருத மூர்த்தி*'. அவரது லீலைகள் மிகவும் ரகசியமானவை. எனவே அவை அனைவரையும் குழப்பிவிடும்.

அனுமார் நாரதரிடம் மேலும் பேசினார்: "சாதுக்களின் தந்தையான நீங்களும், அனைத்து பிரபஞ்சங்களின் தாத்தாவாக மட்டுமின்றி வேதங்கள் அனைத்தையும் அறிந்தவருமான உமது தந்தையுமான பிரம்மதேவரும் கூட அவரது லீலையில் (பிரம்ம விமோகன லீலை) குழம்பி விட்டீர்கள். ஒரு மாடு மேய்க்கும் கோபச்சிறுவனாக வந்து லீலை செய்த பகவானைப் பார்த்து பிரம்ம தேவர் குழப்பத்தில் அபராதம் செய்து விட்டார். அப்படியிருக்கும் போது, புத்தியில்லாத என்னைப் போன்ற குரங்குகள் எப்படி குழம்பிப் போய் விடுவோம்? எனவே, பகவானுக்கு அபராதம் செய்து விடுவேனோ என்ற பயத்தில் உள்ளேன்" என்றார்.

*அஹோ பவாத்ரஸாம் தாதோ யதோ லோக- பிதாமஹா*
*வேத- ப்ரவர்த்தகாச்சாரியோ மோஹம் ப்ரஹ்மாபி அவிந்தத*
*வானராம் அபுதீனாம் மாத்ரஸாம் தத்ர கா கதா*
*வெட்ஸி த்வம் அபி தத் - வ்ருத்தம் தத் விஷங்கே பராதத:*
*(ஸ்ரீ பிருகத் பகவதாமிர்தம் :1.4.97,98)*

இவ்வாறு, அனுமார் நாரதரிடம் தான் பகவான் ஸ்ரீஇராமச்சந்திர பிரபுவிற்கு சேவை செய்வதை மட்டுமே விரும்புவதாகக் கூறினார்.

அவர் மேலும், "தேவகியின் மைந்தனான ஸ்ரீகிருஷ்ணரும், கோசலையின் மைந்தனான பகவான் ஸ்ரீஇராமச்சந்திரரும் வேறுபட்டவர்கள் அல்ல என்றாலும் என் மனம் இராமச்சந்திரரிடம் மட்டும் தான் செல்கிறது. ஸ்ரீகிருஷ்ணரின் லீலைகளைக் கேட்டுக் கேட்டு பகவான் இராமச்சந்திரரிடம் எனக்கு பாசம் அதிகமாகவே வருகிறது. பகவான் ஸ்ரீஇராமச்சந்திரர் வில்லேந்திய அரசனாக இருந்தார். அவர் மென்மையான இதயத்தையும், காரணமற்ற கருணையும் உடையவர். நேரான பார்வையை கொண்டவர்.

சுக்ரீவனிடமும், என் போன்ற வானரங்களுடனும் அன்புடனும் நட்புடனும் நடந்து கொண்டார். சீதா தேவியுடனும், இலட்சுமணனுடனும், பரதனுடனும் அன்பை பரிமாறிக் கொண்டார். அது மரியாதையுடன் இருந்தது. பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் லீலைகளைக் கேட்ட பின்பும் என் மனம் ஸ்ரீஇராமச்சந்திரரிடம் தான் செல்கிறது. அவர் ஏக பத்தினி விரதனாக இருந்தார். ஸ்ரீஇராமச்சந்திரரின் லீலைகளைக் கணிக்க முடியும். ஆனால், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் லீலைகளைக் கணிக்க முடியாது. என்னைப்போன்ற வானரங்களுக்கு ஸ்ரீஇராமசந்திர மூர்த்தியே ராஜா. அவர் விபீஷணருக்கு அடைக்கலம் கொடுத்தார். நான் இங்கே ஸ்ரீஇராமச்சந்திரரின் விக்கிரகத்தை வழிபட்டு, அவரது லீலைகளில் மூழ்கி இங்கே இருந்து விடுகிறேன்" என்றார்.

*தஸ்மாத் அஸ்ய வஸாமி அத்ர தாத்ர்க் ரூபம் இதம் ஸதா*
*பாஸ்யம் சாக்சாத் ச ஏவதி பிபம்ஸ் தக் சரிதாம்ர்தம்*
*(ஸ்ரீ பிருகத் பகவதாமிர்தம்: 1.4.105)*

எப்போதாவது பகவான் தனக்கு ஏதாவது சேவை கொடுத்தால் அதை செய்வதாக அனுமான் கூறினார். குருஷேத்திரப் போர்க்களத்தில் அர்ஜுனனின் தேர்க்கொடியில் அமர்ந்து பகவானுக்கு சேவை செய்தார். அதுபோல பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தனக்கு தரிசனம் தருவதாக இருந்தாலும், பகவான் ஸ்ரீஇராமச்சந்திரராகத்தான் தரிசனம் தர வேண்டும் என்றார்.

மேலும், பாண்டவர்களுடன் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இரண்டு கைகளை உடைய மனித உருவில் இருக்கிறார் என்றும், எனவே நாரதரை பாண்டவர்களுடைய இல்லத்திற்கு சென்று தரிசனம் எடுத்துக் கொள்ளுமாறு அனுமார் கூறினார். முனிவர்களால் கூட பகவானை தன் இதயத்தில் அடக்க முடியாது. பரமாத்மாவாக வழிபடும் யோகிகளின் தியானத்திலும் அடங்காதவர் பகவான். பாண்டவர்களுக்கு ரத்தினம் போல பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கிடைத்துள்ளார். பாண்டவர்கள் சாதன பக்தி செய்யவில்லை. மாறாக அவர்கள் எப்போதும் பகவத் பிரேமையிலேயே இருக்கின்றனர். எனவே, அவர்கள் நித்திய சித்தர்களாக இருந்திருக்க வேண்டும்.

அனுமார் மேலும் கூறினார்: "ஓ, நாரத ரிஷி, நாம் பிரம்மச்சாரிகள். ஆனால், பாண்டவர்கள் கிரகஸ்தர்கள். பகவான் பிரம்மச்சாரியரா, கிரஹஸ்தரா என எந்த வித்தியாசத்தையும் பார்ப்பதில்லை.

"பாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டிர மகாராஜாவிற்கு தேவர்களே ஆச்சரியப்படும் அளவிற்கு செல்வம் இருந்தது. மிகப்பெரிய பரத சாம்ராஜ்யம் அவரது கட்டுப்பாட்டில் இருந்தது. உலக மக்களுக்கு யுதிஷ்டிர மகாராஜா பக்தியைக் கொடுத்தார். அவர் ராஜசூய யாகம், அஸ்வமேத யாகம் போன்ற யாகங்களை செய்தார். எவ்வளவு செல்வம் கொடுத்தாலும் யுதிஷ்டிரர் பகவான் பக்தியிலேயே இருப்பார். எனவே, பகவான் அவர்களுக்கு ஏராளமான செல்வத்தைக் கொடுத்தார். யுதிஷ்டிரர் தர்மத்தை பாதுகாத்தார்; மக்களை பாதுகாத்தார்; பக்தியை பாதுகாத்தார்.

"ஜம்புத்வீபத்தை ஆளும் அளவிற்கு அவருக்கு செல்வமும், செல்வாக்கும் இருந்தது. தேவர்கள் அனைவரும் பொறாமைப்படும் அளவிற்கு அவருக்கு பிரேமை இருந்தது. பாண்டவர்களின் ஆன்மீகச் சொத்து அளப்பரியது. பகவான் ஸ்ரீகிருஷ்ணரால் அவர்களுக்குக் கிடைத்த செல்வங்களையும், ஐஸ்வர்யங்களையும் பகவானுக்கே அர்ப்பணித்து அவர்கள் மிகவும் திருப்தி அடைந்தனர்.

"பசியில் இருக்கும் ஒருவனுக்கு அழகிய ஆடைகள், மாலைகள், பூசும் சந்தனம் ஆகியவை எவ்வாறு மகிழ்ச்சியைக் கொடுக்காதோ, அதுபோல, யுதிஷ்டிர மகாராஜாவிற்கு இத்தனை செல்வங்கள் இருந்தும், மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. அவர் கிருஷ்ண பிரேமைக்காக ஏங்கிக் கொண்டிருந்தார்.

"ஓ, நாரத மகரிஷி! நான் ஒரு குரங்கு. என்னால் பாண்டவர்களின் மகிமைகளை எந்த அளவிற்கு புரிந்து கொள்ள முடியும்? அவர்களைப் பற்றிப் பேச எனக்கு என்ன தகுதி இருக்கிறது? உங்களால் அவர்களது மகிமைகளைப் புரிந்து கொள்ள முடியும்" என்று அனுமான் கூறினார்.

*வானரேன மயா தேஷாம் நிர்வக்தும் சாக்யதே கியாத்*
*மஹாத்மியாம் பகவான் வேத்தி பவான் ஏவதிகாதிகம்*
*(ஸ்ரீபிருகத் பகவதாமிர்தம்: 1.4.119)*

அனுமான் கூறியதைக் கேட்ட நாரதர் பாண்டவர்களைக் காண்பதற்கு அஸ்தினாபுரம் செல்ல தயாரானார்.

# அத்தியாயம் 5

## *பிரியமான பக்தர்கள்*

அனுமார் கூறியதைக் கேட்ட நாரதர், பேரானந்தத்துடன் கிம்புருஷ வர்ஷத்திலிருந்து நடனமாடிக் கொண்டே குரு தேசத்திற்குப் பயணமானார். வெகு சீக்கிரத்திலேயே யுதிஷ்டிர மகாராஜாவின் தலை நகரை அடைந்தார். அந்த சமயத்தில் யுதிஷ்டிர மகாராஜா, தன் குடும்பத்தினருடன் பகவான் ஸ்ரீகிருஷ்ணரை, தான் நடத்தும் யாகத்திற்கு எவ்வாறு வர வைப்பது என்பது குறித்து ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது வாயில் காவலன் நாரதர் வந்திருக்கும் செய்தியை அறிவித்தான். உடனே யுதிஷ்டிர மகாராஜா தன் தாய், மனைவி, மற்றும் சகோதரர்களுடன் அவரை வரவேற்க ஓடி வந்தார். யுதிஷ்டிர மகாராஜா மிக ஆர்வமுடன் நாரதரைப் பூஜிக்க, பூஜைப் பொருட்களுடன் வந்தார். ஆனால், நாரதர் அந்த பூஜைப் பொருட்களைக் கொண்டு யுதிஷ்டிர மகாராஜாவை வழிபட ஆரம்பித்தார். பின்னர் அனுமார் கூறிய பாண்டவர்களின் மகிமைகளை, தனது வீணையை மீட்டிக் கொண்டு இனிய குரலில் பாட ஆரம்பித்தார்.

"இந்தப் பூவுலகில் நீங்கள் அதிஷ்டசாலிகள். ஏனென்றால், உங்களுக்கு பகவானின் கருணை முழுவதுமாக கிடைத்துள்ளது. பகவானை நீங்கள் வழிபடும் தெய்வமாகக் கொண்டுள்ளீர்கள்! ஜட உலக உறவு முறையிலும் பகவான் உங்களுக்கு தாய்வழி மைத்துனராக உள்ளார். உங்களுக்கு தூதுவராக, தேரோட்டியாக, நண்பனாக, சேவகனாக இருக்கிறார்."

*ஸ்ரீ- நாரதா உவாச -*
*யூயம் நிர் -லோகே பத பூரி - பாகா யேஷாம்*
*ப்ரியோ அஸௌ ஜகத் - ஈஸ்வர:*
*தேவோ குருர் பந்துஸு மாதுலேயோ தூத:*
*சுக்ருத் சாரதிர் யுக்தி தந்த்ர:*
*(ஸ்ரீபிருஹத் பகவதாமிர்தம்: 1.5.7)*

"பகவான் ஸ்ரீகிருஷ்ணர், பாண்டவர்கள் வழிபடும்

தெய்வமாக இருக்கிறார். குந்தி தேவியின் சகோதரனான வசுதேவரின் புதல்வனாகப் பிறந்ததால் பாண்டவர்களுக்கு அவர் தாய்வழி மைத்துனனாக இருக்கிறார். விராட நாட்டிலிருந்து அஸ்தினாபுரத்திற்கு தூதுவனாக சென்றார். குருஷேத்திர போர்க்களத்தில் அர்ஜுனனுக்கு தேரோட்டியாக இருந்தார். பாண்டவர்களின் குருவாக செயல்பட்டார்.

"பிரம்மா, சிவபெருமான் போன்ற தேவர்களுக்கும் கூட, தங்களது சமாதி நிலையிலும் கூட பகவானின் தரிசனத்தைப் பெறுதல் அரியதாக இருக்கிறது. வேதங்களின் இறுதி இலக்கான பகவான், நரசிம்மர், வாமனர், இராமச்சந்திரர் போன்ற அவதாரங்களை எடுத்து வரும்போது, சிறு அம்சமாகத்தான் வருகிறார். அதாவது பகவான் புருஷ, லீல, குண, யுக, மன்வந்தர, சத்தியவேஷ அவதாரங்களை எடுத்து இறங்கி வரும்போது, அவை பகவானின் சிறு அம்சங்களே.

"மாயாதேவி, இந்த ஜட உலகைப் பராமரிப்பவள். அவள் பகவானுக்கு கைகட்டி சேவை செய்பவள். அவளுக்கும் கூட பகவானின் தரிசனம் நேரடியாகக் கிடைப்பதில்லை. அதேபோல, பூமித் தாயின் பாரத்தைத் தீர்க்க, பிரம்மதேவர் உட்பட அனைத்து தேவர்களும் பாற்கடலின் ஓரத்தில் நின்று கொண்டு, புருஷ ஸுக்தத்தைப் பாடி பகவானைத் தியானித்தனர்.

"அப்போது பூமித் தாயாருக்கும் பகவானின் தரிசனம் கிடைக்கவில்லை. பிரம்ம தேவருக்கும் கூட தரிசனம் நேரடியாகக் கிடைக்கவில்லை. பிரம்ம தேவரின் இதயத்தில் மட்டுமே தரிசனம் கிடைத்தது. பகவான் அவதாரியாக இறங்கி வருவதாகவும், தேவர்கள் யதுக்களாகவும், பகவானின் மகன்களாகவும், மற்றும் பேரக் குழந்தைகளாகவும் வருமாறு பிரம்மாவின் இதயத்தில் சமாதி நிலையில் கூறினார். ஆனால், இதே பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பாண்டவர்களுக்கு நேரடியாக சேவை செய்கிறார்."

நாரதர் மேலும் கூறினார்: "நாங்களும் சாதன பக்தி செய்கிறோம்! அமைதியாக தியானித்து பக்தி செய்கிறோம். நீங்கள் எப்படிப்பட்ட பக்தி செய்கிறீர்கள்? அவர் உங்களுக்குத் கட்டுப்பட்டு மனித உருவில் வந்து அவரே உங்களுக்கு சேவை செய்கிறாரே!"

*யஸ்ய ப்ரஸாதா: சன் மௌன -*
*சாந்தி- பக்தி - ஆதி - ஸாதனை:*
*ப்ரார்த்தியோ ந : ச ஸ்வயம் வோ*

*அபூத் ப்ரசன்னோ வச- வர்த்தி அபி*
*(ஸ்ரீ பிருஹத்பகவதாமிர்தம்: 1.5.14)*

## *அவதாரங்களும் அவதாரியும்*

"பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஏராளமான அவதாரங்கள் எடுத்தார். ஆனால், அந்த அவதாரங்களில் பகவானால் கொல்லப்பட்ட யாருக்கும் முக்தி கிடைக்கவில்லை. நரசிம்ம அவதாரத்தில் மட்டுமே பிரகலாதனுக்கு முக்தி கிடைத்தது. ஆனால், பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதாரியாக இறங்கி வந்தபோது அவரால் கொல்லப்பட்ட அனைத்து அசுரர்களுக்கும் முக்தி கிடைத்தது. தன்னைக் கொல்ல செவிலித் தாய் வடிவில் வந்த பூதனாவைக் கூட கோலோகத்திற்கே ஸ்ரீகிருஷ்ணர் அழைத்து விட்டார். அத்தகைய பகவான் பாண்டவர்களின் இல்லத்தில் சேவை செய்கிறார்!

"இராம அவதாரத்தில் சிலருக்கு பகவான் சுத்த பக்தியைக் கொடுத்தார். அனுமான், ஜாம்பவான், சுக்ரீவன், விபீஷணன், குகன், தசரதன் போன்ற சிலருக்கு சுத்த பக்தி கிடைத்தது."

மேலும் நாரதர் கூறினார்: "பகவான் ஸ்ரீகிருஷ்ணர், அதாவது உன் அத்தை மகன், அனேகம் பேருக்கு முக்தியைக் கொடுத்துள்ளார். சிலருக்கு சுத்த பக்தியைக் கொடுத்துள்ளார். அவரது கருணை எவ்வளவு உயர்ந்தது தெரியுமா? பகவானாலும், அர்ஜுனனாலும் கொல்லப்பட்ட அனைத்து அசுரர்களும் நரகத்தில் துன்பப்படக் கூடியவர்கள். அவர்களுக்கும் அவர் முக்தியைக் கொடுத்துள்ளார். தேனுகாசுரன், பகாசுரன், அரிஷ்டாசுரன், பௌண்ட்ரகன், சால்வன், தண்டவக்ரன், ருக்மி, நரகாசுரன் போன்ற அனைத்து அசுரர்களும் முக்தியை பெற்றுள்ளனர். ஆனால் அப்படிப்பட்ட பகவான் உங்கள் வீட்டில் இருந்து உங்களுக்கு சேவை செய்கிறார்!"

*ஆத்மனா மரித்தா யே ச காதிதா வார்ஜுனாதிபி :*
*நரகார்ஹாஷ் ச தைத்தேயாஸ் தன் - மஹிம்னாம்ர்தம் கதா:*
*(ஸ்ரீ பிருஹத்பகவதாமிர்தம்: 1.5.21)*

"விசுவாமித்திரர், கௌதமர், வசிஷ்டர், போன்ற மிக உன்னதமான சாதுக்கள் குருக்ஷேத்திரத்திற்கு வந்து பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் சுத்த பக்தியை வேண்டி நின்றனர். பகவான்

அவர்களுக்கும் சுத்த பக்தியைக் கொடுத்தார். விசுவாமித்திரர் தவத்தையும், கௌதமர் தியானத்தையும், வசிஷ்டர் ஞானத்தையும் கொண்டு பகவானைத் தியானித்தாலும், தர்ம, அர்த்த, காம, மோட்சத்தை வேண்டி பயிற்சி செய்தாலும், சூரிய கிரகணத்தின் போது குருஷேத்திரத்தில் சுத்த பக்தியை வேண்டி நின்றனர். பகவானின் கருணையால் அவர்கள் சுத்த பக்தியைப் பெற்றனர்."

இவ்வாறு நாரதர் பகவான் மாதவரின் மகிமைகளைக் கூறிக் கொண்டு வந்தார். பகவான் அவதாரியாக - முழு முதற்கடவுளாக இறங்கி வரும்போது, தன்னால் வதம் செய்யப்பட்ட அனைத்து அசுரர்களுககும் முக்தி கொடுத்த செய்தியைக் கூறிக்கொண்டு வரும்போது, தன் நாக்கினைப் பல்லினால் கடித்துக் கொண்டார். ஏனென்றால், பகவான் மகிமைகளைக் கூறிக் கொண்டு வந்த நாரதரால் அதை நிறுத்த முடியவில்லை. பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் மகிமைகளைப் புகழும் நாவினை எவ்வாறு கட்டுப்படுத்தமுடியும்?

ஸ்ரீகிருஷ்ணரின் மகிமைகளைப் பற்றி பிரம்மதேவர் தனது நான்கு தலைகளிலுள்ள நான்கு நாக்குகளால் பேசியும் கூட அவரால் இன்னமும் முடிக்க முடியவில்லை. ஆதிசேஷன் தனது ஆயிரம் நாக்குகளால் பேசியும் இன்னமும் அவரால் முடிக்க முடியவில்லை. அப்படியிருக்கும்போது தனது நாவினால் எப்படி பேசி முடிக்க முடியும்?

எனவே, தன் நாக்கிடம் நாரதர் பேசுகிறார்: "ஓ, நாக்கே! நீ மிகவும் கொடுத்து வைத்தவன். பகவானின் மகிமைகளைப் பாடுகிறாய்! இனி பகவானின் புகழ்களைப் பாடுவதை நிறுத்திவிட்டு, குறைந்த பட்சம் பகவானின் பக்தர்களின் பெருமையை உனக்கு முடிந்தவரை பாடு! பகவானின் புகழ் பாடுவது கடினம். ஏனென்றால் பகவான் லீலைகளைப் புரிந்து கொள்வது கடினம். ஆனால், பகவானின் பக்தர்களை உன்னால் புரிந்து கொள்ள முடியும். எனவே, பக்தர்களின் புகழ்களை நீ பாடு. அவர்களால் பகவானுக்கு அன்பு செய்ய மட்டும் தான் தெரியும். நீ புகழ் பாடுவதில் ஏதாவது தவறு செய்தாலும் அவர்கள் மன்னித்து விடுவார்கள். அவர்களுக்கு வீழ்ந்த ஆத்மாக்களிடம் எப்போதும் அனுதாபம் உண்டு."

*ரஸனே தே மஹத்-பாக்யம் ஏதத் ஏவ யத் இஹிதாம்*
*கிஞ்சித் உச்சாரையைஸஷாம் தத் ப்ரியாணாம் ஸ்வ- ஷக்தித :*
*(ஸ்ரீ பிருஹத்பகவதாமிர்தம்:1.5.31)*

'பாண்டவர்கள் ஒவ்வொருவரும் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் மீது எத்தனை பிரியம் வைத்துள்ளார்கள்! அதை விவரிக்க தன் நாவிற்கு தகுதி இருக்கிறதா?' எனவும் நாரதர் சந்தேகப்பட்டார். பின் ஒவ்வொருவரும் எவ்வாறு பகவானிடம் பிரியம் வைத்துள்ளார்கள் என்பதைப் பற்றிக் கூறினார்.

"ஒருமுறை ஸ்ரீகிருஷ்ணர் தன் அத்தை குந்திதேவியின் நலம் பற்றி விசாரிக்க, அக்ரூரரை அஸ்தினாபுரத்திற்கு அனுப்பினார். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறியனுப்பிய ஆறுதல் வார்த்தைகளைக் கேட்ட குந்தி தேவி, மின்சாரம் தாக்கியது போல பிரேம பக்தியில் விழுந்தார்.

"யது வம்சத்தினரின் உயிர் போன்ற பகவான் ஸ்ரீகிருஷ்ணர் துவாரகையிலிருந்து குருக்ஷேத்திரப் போரின் போது, அஸ்தினாபுரத்திற்கு வந்தவர், நீண்ட நாட்களாக அஸ்தினாபுரத்திலேயே தங்கி விட்டார். ஒவ்வொரு முறையும் துவாரகைக்கு செல்ல தயாராகும் போது, குந்திதேவி, தன் பிரார்த்தனைகளை வைக்கும்போது அவளது அன்பினால் கட்டுப்பட்டு, அஸ்தினா புரத்திலேயே தங்கி விடுவார். குந்திதேவி பகவானிடம் அத்தகைய அன்பு வைத்திருந்தாள்!

"யுதிஷ்டிரருக்கு ராஜ சூய யாகம் செய்ய உதவி செய்தார். யுதிஷ்டிரரின் புகழை உலகெங்கும் பரப்பவே அவர் அவ்வாறு உதவி செய்தார். ஜராசந்தனைக் கொல்ல பீமனுக்கு உதவினார். அதுவும் கூட பீமனின் புகழை உலகெங்கும் பரப்புவதற்க்கே! அர்ஜுனன் பகவானின் நெருங்கிய நண்பன். அவனுக்கு அனைத்து ஐஸ்வரியங்களையும் கொடுத்து அவனது புகழை உலகறிய செய்தார். நகுல, சகாதேவன் ராஜசூய யாகத்தின் போது யாருக்கு முதல் மரியாதை கொடுத்து வழிபட வேண்டும் என வரும்போது, அவர்கள் பகவான் ஸ்ரீகிருஷ்ணரையே தேர்ந்தெடுத்தனர். அந்த அளவிற்கு பகவான் மீது அவர்களுக்கு அன்பு இருந்தது.

"பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ராஜசூய யாகத்தின் போதும், பிற விஷேசங்களிலும் திரௌபதியின் மீது தனிக் கவனம் செலுத்தினார். ராஜசூய யாகத்தின்போது, புனித நீரை அவரே நேரடியாக திரௌபதியின் தலையில் தெளித்தார். துர்வாசர் மீதும், துச்சாதனன் மீதும் திரௌபதிக்கு இருந்த அச்சத்தை போக்கி அவளை பாதுகாத்தார்.

"விதுரர் அளித்த எளிய உணவை உண்டார். பீஷ்மரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டார். பாண்டவர்களுக்கு அவர் ஆதரவாக இருந்ததால், அவர்களுக்கு வைகுண்ட பிராப்தியும் கொடுத்தார். மதுரா மண்டலத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பாதம் பட்ட இடமெல்லாம் புனிதப் படுகிறது.

"காயாதுவின் மகனான பிரஹலாதருக்கும், அவரது பேரன் பலிச் சக்கரவர்த்திக்கும் கிடைத்த கருணையை விடவும், அனுமாருக்குக் கிடைத்த கருணையை விடவும், உங்களுக்குக் கிடைத்த கருணையே கருணை! பகவான் உங்களுக்கு நண்பனாக, உறவினராக, சேவகனாக தனிக் கருணை தருகிறார்" என நாரதர் பாண்டவர்களைப் புகழ்ந்தார்.

*சஹைக - பௌத்ரேன கயாது - நந்தனோ*
*அனுகாமிபித் அனீனகபீந்த்ர ஏகல:*
*ச - சர்வ - பந்து: ஸ்வ - ஞான பவாத்ரஸா*
*மஹா- ஹரே:பிரேம - க்ருபா - பராஸ்பதம்*
*(பிருஹத்பகவதாமிர்தம் 1.5.42)*

"பகவான் கிருஷ்ணர் அஸ்தினாபுரத்திற்கு தூதுவராக வரும்போது கௌரவர்களின் அரசவையில், 'பாண்டவர்கள் எனது உயிர் மூச்சு. பாண்டவர்களுக்கு யார் நண்பர்களோ, அவர்கள் எனக்கும் நண்பர்கள். பாண்டவர்களுக்கு யார் எதிரிகளோ, அவர்கள் எனக்கும் எதிரிகள்' என்று குறிப்பிடுகிறார். அந்த அளவிற்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பாண்டவர்கள் மீது அன்பு வைத்திருக்கிறார்."

நாரத முனிவர் தன் நாக்கிடம் மேலும் கூறுகிறார்: "நாக்கே, உன்னால் பகவான் ஸ்ரீகிருஷ்ணரை புகழ முடியுமோ, முடியாதோ, ஆனால் பகவானின் பக்தர்களான பாண்டவர்களின் புகழைப் பாடு! ஏனென்றால், பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பாண்டவர்களுக்காகவே கீழே இறங்கி வந்திருக்கிறார்" என்று பிரேமையுடன் கூறுகிறார்.

நாரதர் கூறியவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த யுதிஷ்டிர மஹாராஜா அப்படியே உறைந்து நின்று விட்டார். பின்னர் பெருமூச்சு விட்டவாறு பேச ஆரம்பித்தார்.

## *பகவானின் கருணை எங்களுக்கு இல்லை!*

நாரத முனிவரிடம் யுதிஷ்டிர மஹாராஜா, "பேச்சாற்றலில் வல்லவரான நாரத ரிஷி! பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணை எங்களுக்கு இருக்கிறது எனக் கூறி விட்டீர்கள்! நாங்கள் எப்படி யோசித்துப் பார்த்தாலும், பகவான் ஸ்ரீகிருஷ்ணர் எங்களுக்கு என்ன கருணை கொடுத்தார் எனத் தெரியவில்லையே! நாங்கள் பட்ட துன்பங்களைப் பார்க்கும் போது, பௌதீக வாதிகளுக்கு கிருஷ்ண பக்தி மீது நம்பிக்கை வராது. பயமே ஏற்படும்! ஸ்ரீகிருஷ்ணர் எங்களுக்கு மூச்சுக் காற்று. மிருகங்கள் எவ்வாறு உணவின்றி உயிர் வாழ முடியாதோ, நீரின்றி மீன் எவ்வாறு உயிர்வாழ முடியாதோ, அதுபோல, ஸ்ரீகிருஷ்ணர் இன்றி நாங்கள் இல்லை.

"ராஜசூய யாகம் செய்ய பகவான் உதவி செய்ததைக் கூறினீர்கள்? ராஜசூய யாகம் எதற்காக செய்யப்பட்டது? ஜட உலக இன்பத்திற்காக செய்யவில்லை. பக்தர்களுக்கும், பக்தரல்லாதவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவு படுத்தவே அது செய்யப்பட்டது. பக்தர்கள் எவ்வாறு பகவானை மகிமைப் படுத்துவார்கள் என்பதையும், பகவான் எவ்வாறு பக்தரை மகிமைப் படுத்துவார் என்பதையும் பற்றி உலகறியவே செய்யப்பட்டது. அது மட்டுமா, பகவானை நம்முடன் வைத்துக் கொண்டால், எத்தகைய ஐஸ்வரியங்கள் கிடைக்கும் என்பதை உலகிற்குக் காட்டவே ராஜ சூய யாகம் செய்யப்பட்டது."

"பகவானின் பக்தரல்லாத எதிரிகளை வேரோடு அழித்து, பகவான் இந்த ராஜ்யத்தை எங்களிடம் கொடுத்தார். இப்போது நாங்கள் இன்னும் அதிகமான கவலையுடன் உள்ளோம்! துரோணாச்சாரியார், பீஷ்மர் போன்ற எங்கள் குருக்களும், அபிமன்யு போன்ற எங்கள் அனைத்து புதல்வர்களும், பகவானின் பக்தர்களான பல அரசர்களும் எங்களால் குருஷேத்திர போர்க்களத்தில் கொல்லப்பட்டார்கள். அவர்களது பிரிவிற்கு நாங்கள் காரணமாகிவிட்டோம். எனவே, இந்த ராஜ்ஜியம் எங்களுக்கு எந்த மகிழ்ச்சியையும் கொடுக்கவில்லை!"

*த்ரோண - பீஷ்மாதி - குரவோ அபிமன்யு -ப்ரமுகா:*
*பரே அபி பகவா: சந்தோ அஸ்மத் - தேதோர் நிதனம் கத:*
*(ஸ்ரீபிருஹத் பகவதாமிர்தம்: 1.5.53)*

"பகவான் கிருஷ்ணர் எப்போதும் எங்களுடன் இருக்கிறார், என்று கூறுகிறீர்களே? அவர் எப்போதாவது நாங்கள் யாகம்

நடத்தும்போது மட்டுமே வருவார். அநேகமான அவர் எப்போதும் துவாரகையில் மட்டுமே இருக்கிறார். துவாரக வாசிகளுக்கு மட்டுமே அவர் கருணை காட்டுகிறார்."

"நாரதரே! நீங்கள் தவறாக புரிந்து கொண்டு பகவான் ஸ்ரீகிருஷ்ணர் எங்களுக்குத் தேரோட்டியாக, தூதுவனாக, நண்பனாக, சேவகனாக இருந்தார் என்று கூறுகிறீர்கள்! பூமித்தாய், தனக்கு அசுரர்களால் பூமியின் பாரத்தைத் தாங்க முடியவில்லை என வேண்ட, பூமித்தாயின் பாரத்தைத் தீர்க்கவே பகவான் இறங்கி வந்தார். மகாபாரதப் போரை உண்டாக்கி அனைத்து அசுரர்களையும் அவர் அழித்தார். நாங்கள் ஒரு கருவி மட்டுமே! தான் வந்த காரியத்தை முடிக்க ஒரு கருவியாக மட்டுமே அவர் எங்களை பயன் படுத்திக் கொண்டார்!"

இவ்வாறு யுதிஷ்டிரர், தங்களுக்கு பகவானின் கருணை உண்மையில் இல்லையென்றும், யாதவர்களுக்கு மட்டுமே பகவானின் கருணை கிடைத்துள்ளது என்றும் கூறினார். இதை பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையிலும் குறிப்பிடுகிறார்.

*யதா யதா ஹி தர்மஸ்ய, க்லானிர் பவதி பாரத*
*அப்யுத்தானாம் அதர்மஸ்ய, ததாத்மானம் ஸ்ருஜாம்யகம்*
*(பகவத்கீதை: 4.7)*

"எப்போதெல்லாம், எங்கெல்லாம் தர்மம் சீர் குலைந்து அதர்மம் ஆதிக்கம் செலுத்துகிறதோ, பரத குலத்தோன்றலே, அப்போதெல்லாம் தோன்றுகிறேன்."

*பரித்ராணாய ஸாதூ - னாம், வினாஷா -ய ச துஷ்க்ருதாம்*
*தர்ம-ஸம்ஸ்தா பனார்தாய, ஸம்பவாமி யுகே யுகே*
*(பகவத்கீதை: 4.8)*

"பக்தர்களைக் காத்து, துஷ்டர்களை அழித்து, தர்மத்தின் கொள்கைகளை மீண்டும் நிலை நிறுத்துவதற்காக, நானே யுகம் தோறும் தோன்றுகிறேன்."

"எனவே, பகவான் கிருஷ்ணர் அதர்மத்தை அழிக்க, கொடிய அரசர்களையும், அசுரர்களையும் அழிக்க போரை நடத்தி, அனைவரையும் அழித்தார். இதில் எங்களை ஒரு கருவியாக மட்டுமே அவர் பயன்படுத்திக் கொண்டார். இதில் பகவானின் கருணை எங்களுக்கு எங்கே இருக்கிறது?", என யுதிஷ்டிரர் கூறினார்.

## *அர்ஜுனனின் புலம்பல்*

அடுத்து அர்ஜுனன் பேச ஆரம்பித்தான். அவன் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பிராண-சகா (உயிர் தோழன்) ஆவான். அர்ஜுனன் பகவானுக்கு மிகவும் பிரியமானவன். அவன் பெருமூச்சுடனும், கனத்த இதயத்துடனும் பேச ஆரம்பித்தான்.

"என் தாத்தா பீஷ்மர், என் கேடயத்தைத் துளைத்து, என் இதயத்தையும் துளைக்கக் கூடிய அம்புகளை ஏவி என்னைத் தாக்கினார். ஆனால் அந்த அம்புகளையெல்லாம் ஸ்ரீகிருஷ்ணர் தன் மென்மையான கரங்களால் தாங்கி என்னைக் காப்பாற்றினார். தனது பக்தர்களைக் காக்க, குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் இரத்தத்தையும், வியர்வையையும் சிந்தினார். இதனால் வாத்சல்ய பாவத்தில் பகவான் பக்தர்களை எவ்வாறு பாதுகாப்பார் என்பதை உலகம் அறிந்து கொள்ளும்!

"குருக்ஷேத்திரப் போரில் ஆயுதம் ஏந்தமாட்டேன் என வாக்குறுதி அளித்திருந்த பகவான் ஸ்ரீகிருஷ்ணர், என்னை பீஷ்மர் அம்புகளால் தாக்கியபோது என்னைக் காப்பாற்ற தேரின் சக்கரத்தை ஏந்தி சக்கர பாணியாக காட்சி அளித்தாரே!"

*ஸ்வ- தர்மைக - பரை: அசுஸ்க -ஜ்ஞானவத்பி: க்ருதா ரணே*
*பீஷ்மாதிபி: ப்ரபாரா யே வர்ம - மர்ம பிதோ த்ருதா:*
*தே தஸ்யாம் மத்- க்ருதே ஸ்வஸ்ய ஸ்ரீ - மூர்தௌ சக்ர - பாணினா*
*வர்யமாணேன ச மாயா ஸோதா: ஸ்வீ - க்ருத்யா வாரஷ:*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.5.62, 63)*

"பீஷ்மர், பகவானை சக்கர பாணியாக பார்க்க வேண்டும் என ஆசைப்பட்டு, 'ஆயுதம் ஏந்த வைப்பேன்!' என்று சபதம் எடுத்திருந்தார். எனவே, பக்தனின் சபதத்தை நிறைவேற்ற வேண்டி பக்த வத்சலனாக, சக்கர பாணியாக ஸ்ரீகிருஷ்ணர் காட்சி தந்தார். பகவான் தனது சுதர்சன சக்கரத்தினால் ஒரு நொடிப் பொழுதில் அனைத்து எதிரிகளையும் போரில் அழித்திருக்க முடியும். ஆனால், அர்ஜுனன் புகழை உலகெங்கும் பரப்பவே, போரில் அர்ஜுனனைப் போரிட வைத்து தேரோட்டியாக செயல்பட்டார்."

நாரதரிடம் மேலும் அர்ஜுனன் கூறுகிறான்: "உயர்ந்த பிராமணரே, அந்த வலிதரக் கூடிய நினைவுகள் என் இதயத்தை விட்டு இன்னும் நீங்க வில்லை. அவ்வாறு இருக்கும்போது என்னால் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்? இது எங்கள் மீது

கொண்ட கருணையால் அல்ல! அவரது செயல்கள் இன்னும் எங்களை துயரத்தில் ஆழ்த்துகிறது. அது மட்டுமா? குருஷேத்திர போர்க் களத்தில், நான் துரோணர், பீஷ்மர் போன்றோரை எதிர்த்து போரிட மாட்டேன் எனக்கூறியபோது எனக்கு அறிவுரை கூறினார். ஆத்மா அழியாதது, அவர்களைக் கொன்றால் உனக்கு எந்த பாவமும் கிடையாது, என ஆத்ம ஞானம் போதித்தார். நீ இந்த உடல்களைத்தானே அழிக்கிறாய்! அவர்களுக்கு புதிய உடல் கிடைக்கும், எனக் கூறி என்னைப் போரிட வைத்தார். அது தான் பகவத்கீதை.

"நான் பகவானின் பக்தன். எனக்கு அவர் பக்தியோகம் சொல்லிக் கொடுக்க வேண்டியது தானே! ஏன் எனக்கு கர்மயோகம், ஞானயோகம், அஷ்டாங்க யோகம் பற்றியெல்லாம் சொல்லிக் கொடுத்தார். என்னை ஏமாற்றத்தானே!" என அர்ஜுனன் மிகுந்த வேதனையுடன் பேசினார்.

## *நகுல- சகாதேவர்களின் கவலை!*

இப்போது நகுலனும், சகாதேவனும் தங்கள் கவலைகளை நாரதருடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.

"நாரத முனிவரே! பகவான் ஸ்ரீகிருஷ்ணர் எங்களுக்கு ஏற்பட்ட அனைத்து அபாயங்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் எங்களைக் காப்பாற்றினார். எதிரிகளை அழிக்க தைரியத்தைக் கொடுத்தார். அஸ்வமேத யாகம் போன்ற யாகங்களைச்செய்ய, எங்களுடனேயே துணையாக இருந்து உதவி செய்தார்".

*ஸ்ரீ- நகுல- சகாதேவ உவாச -*
*யத் விபத்- கனதோ தைர்யம் வைரி- வர்க - வினாஸானாம்*
*அஸ்வமேதாதி சாஸ்மாகம்- ஸ்ரீ -கிருஷ்ண: ஸமபாதயத்*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.5.71)*

"அவரது துணை எங்களுக்கு இருந்ததால், எங்களது ராஜ்யத்தின் புகழ் உலகெங்கும் பரவியது. பல புனித செயல்கள் செய்ய அவர் உதவியாக இருந்தார். ஆனால், நாங்கள் அதை பகவானின் கருணையாக எடுத்துக் கொள்ளவில்லை. அவர் எங்களை விட்டுவிட்டு துவாரகைக்கு சென்று விட்டார். பகவானின் தாமரை முகத்தைப் பார்த்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. அவரது தாமரை முகத்தை நாங்கள் எப்போதும் தொடர்ந்து காண

வேண்டும். என்று ஏங்குகிறோம்.

"அவர் நிஜமாக எப்போது கருணை காட்டினார் தெரியுமா? அஸ்வமேத யாகம், இராஜசூய யாகம் செய்யும் போது. அப்போது அவருக்கு நாங்கள் முதல் மரியாதை கொடுத்து வழிபட்டோம்! அப்போது அவர் அதை ஏற்றுக் கொண்டார். அப்போது மட்டுமே கருணை வழங்கினார். ஏனென்றால், அப்போது அவர் தான் எங்களை வழி நடத்தினார். உண்மையான கருணை எங்கள் புகழைப் பரப்புவது அல்ல. அவருக்கு நாங்கள் முதல் மரியாதை செய்யவேண்டும், மற்றும் அவர் எங்களை வழி நடத்த வேண்டும். அவர் எப்போதும் எங்களுடனேயே இருக்க வேண்டும் என்வதே எங்கள் ஆசை. ஆனால் அவர் எங்களை ஏமாற்றிவிட்டு துவாரகைக்கு சென்று விட்டார். அவரின்றி, அவரது தரிசனமின்றி நாங்கள் மிகவும் துயரத்தில் உள்ளோம்!" என்று நகுல, சகாதேவர்கள் துயரத்தில் புலம்பினார்கள்.

## *திரௌபதியின் துயரம்*

திரௌபதி பகவான் ஶ்ரீகிருஷ்ணரின் பிரிய சகி. பாண்டவர்கள் நாரதரிடம் கூறியவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த திரௌபதி பேசலானாள். அவளது இன்னொரு பெயர் கிருஷ்ணை. ராஜசூய யாகம், அஸ்வமேத யாகம் போன்ற யாகங்கள் நடக்கும்போது பகவான் ஶ்ரீகிருஷ்ணரே புனிதநீரை திரௌபதியின் தலையில் தெளித்து, அவளது கேசத்தில் கவனம் செலுத்தினார்.

அவள் அழுகையுடனும், கனத்த இதயத்துடனும் பேச ஆரம்பித்தாள்: "ஶ்ரீகிருஷ்ணர் என்னுடைய பிரிய சகா (பிரியமான தோழன்). பல துயரமான சூழ்நிலைகளில் எல்லாம் என்னைக் காப்பாற்றினார். துரியோதனன், துச்சாதனன் போன்ற கொடியவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றி கருணை காட்டியிருக்கிறார். இது அவரது கடமையும் கூட. ஆனால், எப்போதும் என்னுடன் இருந்து என்னைக் காப்பாற்றுவார் எனத் தப்புக் கணக்கு போட்டுவிட்டேனே!" எனப் புலம்பினாள்.

*கர்தவ்யோ அனுக்ரகஸ் தேன ஸடேதி ஆஸீன் மதிர் மம*
*அதுனா பதிதாஸ் தாத -ப்ரைர் புத்ராதயோ அகிலா ;*
*தத்ராபி விததே சோகம் ந தத் இச்சானுசாரிணீ*
*கிந்த்வைச்சாம் ப்ராப்துமாத்மேஷ்டம் கிஞ்சித் தத்- தக் சலாத்*
*பலம் ..... (ஶ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.5.77,78)*

"குருஷேத்திரப் போரில் என் தந்தை (துருபதன்), சகோதரர்கள் திருஷ்டத்யும்னன், மகன் பிருதி விந்தியன், குழந்தைகள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக கொல்லப் பட்டார்கள். இது அனைத்தும் ஸ்ரீகிருஷ்ணரின் விருப்பப்படி நடந்தது என ஏற்றுக் கொண்டேன். அப்போது கூட நான் துக்கத்தால் புலம்பவில்லை. ஒவ்வொருவர் இறக்கும் போதும் இனிய வார்த்தைகளால் ஸ்ரீகிருஷ்ணர் எனக்கு ஆறுதல் கூறினார். ஆனால், இப்போது பகவான் என்னுடன் இல்லை" என திரௌபதி புலம்பி அழுதாள்.

## *குந்திதேவியின் வேதனை*

குந்திதேவி பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து பிரிந்த வேதனையில், தனக்கு துன்பங்கள் நேர்ந்த போதெல்லாம் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் எவ்வளவு அன்புடன் தன்னை பாதுகாத்தார் என்பதை நாரதரிடம் கூறி மன வருத்தம் கொண்டார்.

*ஸ்ரீ ப்ருதோ உவாச -*
*அனாதாயா: ச புத்ராயா மமாபத் - கணதோ அஸக்ருத்*
*த்வரயா மோசனாத் சம்யக் தேவகி - மாத்ர்தோ அபி யா:*
*க்ருபா- விசேஷ: க்ருஷ்ணஸ்ய ஸ்வஸ்யாம் அனுமிதோ மயா*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.5.83)*

"சிறுவயதிலேயே கணவனை இழந்த நானும் எனது குழந்தைகளும் எத்தனையோ துன்பங்களிலும் துயரங்களிலும் பாதுகாப்பு இன்றி தவித்துப் போகும் போது, பகவான் ஸ்ரீகிருஷ்ணரே எங்களைக் காப்பாற்றினார். தன் தாய் தேவகிக்குக் காட்டிய கருணையை விட எனக்கு அதிகம் கருணை காட்டினார். ஏனென்றால், தேவகியுடன் வசுதேவர் இருந்தார். ஆனால் நான் விதவை. எனவே, என்னைத் தனி இரக்கத்துடன் கவனித்துக் கொண்டார்."

"பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தேவகியை சிறையிலிருந்து மீட்டார். ஆனால், அவளது குழந்தைகளைக் காப்பாற்ற வில்லை. ஆனால் என்னுடைய குழந்தைகளை அவர் இன்று வரையிலும் காப்பாற்றுகிறார். கௌரவர்கள் பீமனுக்கு உணவில் விஷம் வைத்து ஆற்றில் தூக்கிப் போட்டனர். பாண்டவர்களை அரக்கு மாளிகையில் வைத்து நெருப்பு வைத்தனர். சூதாட்டத்தின் போது திரௌபதியை வஸ்திர ஹாரம் செய்தனர். உத்தராவின் வயிற்றிலிருந்த பாண்டவர்களின் கடைசி வாரிசையும்

அஸ்வத்தாமன் பிரம்மாஸ்திரத்தை ஏவி அழிக்கப் பார்த்தான். ஒவ்வொரு அபாயத்தின் போதும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரே எங்களைப் பாதுகாத்தார். ஆனால், இப்போது இங்கு நிலைமை வேறு! இங்கு குருஷேத்திரப் போர்க்களத்தில் தந்தையை, கணவனை, மகன்களை இழந்த பெண்களின் துயரக் குரல்கள் எங்கும் கேட்கின்றன. இது எனக்கு மிக்க துன்பத்தையே கொடுக்கிறது.

"பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் தரிசனம் இன்றி நாங்கள் வருந்துகிறோம்! அவர் கொடுத்த செல்வமும், ராஜ்யமும் எங்களுக்கு எந்த மகிழ்ச்சியையும் கொடுக்கவில்லை. எங்களுக்கு துன்பங்களை மட்டுமே கொடு என்று கேட்கிறேன்! அப்படியானால் துன்பங்களிலிருந்து எங்களை பாதுகாக்க வருவாரல்லவா?" என்று குந்திதேவி வருந்தினாள்.

குந்திதேவி மேலும் கூறினாள்: "எங்கள் எதிரிகளையெல்லாம் அழித்து விட்டு பகவான் எங்களுக்கு ராஜ்ஜியத்தைக் கொடுத்தார். இதனால் நாங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம் என்று நினைத்து அவர் இப்போது துவாரகையிலேயே தங்கி விட்டார். பிரச்சினை எதுவும் இல்லாத ராஜ்ஜியத்தை பகவான் எங்களுக்குக் கொடுத்தது தான் உண்மையில் பிரச்சினை. பிரச்சினைகள் இருந்திருந்தால் பகவான் அதைத் தீர்க்க ஓடி வந்திருப்பார்.

"ஸ்ரீகிருஷ்ணர் துவாரகையில் இருந்து திரும்பி வருவார் என்ற நம்பிக்கையை நான் இழந்து விட்டேன். இனி பகவானின் கருணை எனக்கு இறப்பைக் கொடுப்பது தான்" என குந்திதேவி புலம்பினாள்.

இப்போது யுதிஷ்டிரர் இந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல, நாரதரிடம் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர்கள் யாதவர்களே என்று கூறி நாரதரிடம் யாதவர்களின் தரிசனத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார்: "பகவான் ஸ்ரீகிருஷ்ணர் யது குலத்தில் பிறந்ததால், அவர்களுடன் இரத்த சம்பந்தம் கொண்டவர்கள். ஆனால், நாங்கள் தூரத்து உறவினர்கள். உங்களுக்கு யாதவர்களின் மகிமைகள் ஏற்கெனவே தெரியுமே! எனவே, துவாரகைக்கு சென்று யாதவர்களின் தரிசனத்தைப் பெறுங்கள்!” என்று நாரதரிடம் யுதிஷ்டிரர் கூறினார்.

பரீட்சித் மகாராஜா, தன் தாயார் உத்தராவிடம் தொடர்ந்து கூறுகிறார்: "அன்னையே! நீங்கள் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின்

சகோதரியின் மருமகள். எனவே, நீங்கள் மிகவும் அதிஷ்டசாலிகள்" எனப் புகழ்ந்தார்.

பாண்டவர்கள் கூறிய அனைத்தையும் கேட்ட பின்னர், இப்போது நாரத ரிஷி அஸ்தினாபுரத்திலிருந்து துவாரகைக்கு சென்றார்.

நகருக்குள் நுழைந்ததும் துவாரக தாமத்தை தண்டமிட்டு நமஸ்காரம் செய்தார். அத்துடன் தூரத்திலிருந்தவாறே அதிஷ்டசாலிகளான யாதவர்களைக் கண்டார். அப்போது யாதவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக சுதர்மா மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். ஒவ்வொருவரும் தங்களது இருக்கைகளில் சரியான வரிசைகளில் அமர்ந்திருப்பதை நாரதர் கண்டார். அனைவரையும் கவரும் வகையில் அவர்களது தேஜஸ் இருந்தது. அவர்கள் தங்களை பலவிதமான அணிகலன்களாலும், பாரிஜாத மலர் மாலைகளாலும் அலங்காரம் செய்திருந்தனர்.

சுதர்மா மண்டபம் பண்டிகைக் காலம் போல கோலாகலமாக இருந்தது. தேவர்களும், வைகுண்ட வாசிகளும் யதுக்களைப் பற்றியும், பகவான் ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றியும் பாடல்களைப் பாடியும், நடனக் கலைஞர்கள் நடனமாடிக் கொண்டும் இருந்தனர்.

*திவ்யாதி - திவ்ய - சங்கீத- நிர்த்யாதி பரமோத்சவை:*
*ஸேவ்யமானாம் விஸித்ரோக்த்யா ஸ்தூயமானாம்ஸ் ச வந்திபி:*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.5. 92)*

சூரிய ஒளி போன்ற தேஜஸுடன் விளங்கிய அந்த யாதவர்கள் ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியாகவும், நகைச்சுவையுடனும் உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் யாருடைய கண்களிலும் துயரத்தின் சாயல் சிறிது கூட இல்லை. அந்த யாதுக்கள், அரிதான தெய்வீக அணிகலன்களை அணிந்திருந்தனர். வயதான யாதவர்கள் கூட, பகவானின் தாமரை முகத்தைப் பார்த்துக் கொண்டு, பிரேமையைப் பருகுவதால், என்றும் இளமையுடன் இருந்தனர்.

இந்த கருத்து ஸ்ரீமத் பாகவதத்திலும் குறிப்பிடப்படுகிறது:

*தத்ர ப்ரவயஸோ அபி ஆஸன் யுவனோ அதி பலௌஜஸ:*
*பிபந்தோ யக்ஷைர் முகுந்தஸ்ய முகாம்புஜ - சுதாம் முஹு:*
*(ஸ்ரீமத் பாகவதம்: 10.45.10)*

துவாரகாவில் வசிக்கும் முதியவர்கள் தங்களது பக்தியின் சக்தியாலோ அல்லது எப்போதும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் தாமரை முகத்தைப் பார்த்து, பிரேமை என்னும் அமிர்தத்தைப் பருகுவதாலோ, எப்போதும் இளமையுடன் இருக்கிறார்கள்.

சுதர்மா மண்டபத்தில், உக்கிரசேன மகாராஜாவைச் சுற்றி அனைவரும் அமர்ந்து ஸ்ரீகிருஷ்ணரின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்தனர். எண்ணிலடங்காத யாதவர்களின் மனங்களும், கண்களும் அந்தபுரத்திலிருந்து வெளியே வரும் பகவானின் வருகையை எதிர் நோக்கியிருந்தது. அப்போது சிலர் பகவான் லீலைகளைப் பற்றியும், இன்னும் சிலர் அரசவையில் பேச வேண்டியதைப் பற்றியும் உரையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது நாரதரின் வருகையைப் பற்றிக் கேள்விப்பட்ட யாதவர்கள் ஆசையுடன் ஓடி வந்தனர். யாதவர்களை தண்டமிட்டு வணங்குவதற்கு தரையில் விழுந்த நாரதரை அப்படியே உயரத் தூக்கிக் கொண்டு சுதர்மா மண்டபத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு ஆசனத்தில் அமர வைக்க முயற்சி செய்தனர். அவர் ஆசனத்தில் அமர மறுத்து தரையில் அமர்ந்ததால், யாதவர்களும் அவரைச்சுற்றி தரையில் அமர்ந்தனர்.

நாரதரைப் பூஜிக்க ஏராளமான பூஜைப் பொருட்களைக் கொண்டு வந்தனர். நாரதர் அந்த பூஜைப் பொருட்களைத் தொட்டு வணங்கினாரே தவிர, தன்னை வழிபட அனுமதிக்கவில்லை.

## *பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் யாதவர்களே*

யாதவர்களை நோக்கி நாரத முனிவர் கூறினார்: "ஓ, யாதவர்களே, நீங்கள் மிகவும் அதிஷ்டசாலிகள். பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் தாமரைப் பாதங்களின் கருணை உங்களுக்குத் கிடைத்துள்ளது. நான் பிரபஞ்சம் முழுவதும் பயணிக்கும்போதும் உங்கள் புகழையே பாடவேண்டும்"

*ஸ்ரீ நாரத உவாச*
*போஹ் கிருஷ்ண - பதாப்ஜ மஹானுகம்பிதா*
*லோகோத்தரா மாம் அதுனா தயத்வாம்*
*யுஸ்மாகம் இவாவிரதம் யதாஹம் கீர்த்திம்*
*ப்ரகாயன் ஜகதி ப்ரமேயம்*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1. 5.100)*

"யது குலத்தில் பிறந்தவர்கள் வைகுண்டவாசிகளை விட

உயர்ந்தவர்கள். யாதவர்கள் வைகுண்டவாசிகளை விட புகழத் தகுந்தவர்கள். அத்தகைய தேஜஸ் அவர்களுக்கு இருக்கிறது என நாரதர் அவர்களைப் புகழ்ந்தார். தன்னுடைய பிரேமை மிகுதியால் பூமாதேவியைப் பார்த்து, "பூமாதேவியே, நீ எத்தனை அதிஷ்டசாலி! உன் மீது பாதம் வைத்து இந்த யாதுக்கள் நடக்கிறார்களே! நீ என்ன தவம் செய்தாயோ?" எனப் புகழ்ந்தார்.

## *பகவான் கிருஷ்ணர் வைகுண்டத்தையே மறந்து விட்டார்!*

யாதவர்களின் உன்னதமான பிரேமையினால் ஸ்ரீகிருஷ்ணர் வைகுண்டத்தையே மறந்து விட்டார்! அவர் எப்போதும் யாதவர்களுடன் உடல் ரீதியாக உறவு வைத்துள்ளார். அவர்களைப் பார்த்தல், தொடுதல், உரையாடுதல், அவர்களுடன் சேர்ந்து அமர்தல், உணவு அருந்துதல், அவர்களுடன் தூங்குதல், திருமண உறவு போன்றவற்றை வைத்துக் கொள்கிறார். எனவே, அவர் வைகுண்டத்தையே மறந்துவிட்டார்.

யாதவர்களுடன் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கொண்டிருக்கும் தொடர்பு யோகிகளை விட உயர்ந்ததாக இருக்கிறது. ஏனெனில், அவர்கள் பகவானுடனேயே இருப்பதால், முக்தி பற்றிய நினைப்போ, வைகுண்டம் பற்றிய நினைப்போ இல்லாமல் இருக்கிறது. எனவே, அவர்களது பக்தி வளர்ந்து கொண்டே போகிறது.

பத்மபுராணத்திலும், இந்த செய்தி கூறப்படுகிறது. பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கும், சத்யபாமாவிற்கும் நடந்த ஒரு உரையாடலில் பகவான் இதைக் கூறுகிறார். "எல்லா யாதவர்களும் எனது மக்கள். அவர்கள் எனக்கு மிகவும் பிரியமானவர்கள். அவர்கள் என்னைப் போல குணங்கள் உடையவர்களாக இருக்கிறார்கள்".

யாதவர்களின் அரசரான உக்கிரசேனரை பார்த்து "ஓ, உக்கிரசேனரே! அரசர்களுக்கெல்லாம் அரசரே, நீங்கள் யாதவர்களுக்கெல்லாம் தலைவர்! உங்கள் அதிஷ்டத்தை என்னவென்று சொல்வது? பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உங்களுக்குப் பேரக் குழந்தையாக வந்திருக்கிறார்! தூய பக்தர்களுக்கு பகவான் எவ்வாறு கருணை காட்டுகிறார் என்று உங்களுக்குத் தெரிகிறதா? நீங்கள் அரியாசனத்தில் அமர்ந்திருக்கும்போது, அவர் ஒரு

சேவகனைப் போல கைகட்டி நிற்கிறாரே! " என்று நாரதர் புகழ்ந்தார்.

இப்போது யாதவர்கள் நாரதரிடம் பேசலானார்கள்: "ஓ, நாரதரிஷி, நீங்கள் பகவான் ஸ்ரீகிருஷ்ணரால் மதிக்கப்படுபவர். நாங்கள் தாழ்ந்தவர்களுக்கெல்லாம் தாழ்ந்தவர்கள். நீங்கள் எங்களுக்கு நமஸ்காரம் செய்வது சரியல்ல. நீங்கள் பேசுவதில் வல்லவர். பிரம்ம தேவரைக் கூட உங்கள் வார்த்தை ஜாலங்களால் நீங்கள் ஜெயிக்க முடியும். நீங்கள் பேசியது நிஜமாகக் கூட இருக்கலாம். எங்களுக்கு துளியளவு உறவு பகவானுடன் இருந்தால், நீங்கள் கூறுவது உண்மையாக இருக்கலாம். பகவானது உறவு சிறிதளவு கிடைத்தால் கூட ஆன்மீக தளத்தில் சாதிக்கலாம். ஆனால், பகவானின் கருணை எங்களுக்கு இல்லவே இல்லை" என்றனர்.

## *பகவான் கிருஷ்ணரின் கருணை உத்தவருக்கே !*

யாதவர்கள் நாரதரிடம், பகவானின் கருணை உத்தவருக்கு மட்டுமே உள்ளது என்றும், அவர் பகவானின் மந்திரி மட்டுமின்றி, சேவகனாக எப்போதும் பகவானின் அன்புக்குரியவர் என்றும் கூறினார்கள்.

*கிந்த்வ் அஸ்மாஸூத்தவா: ஸ்ரீ மான் பராமானுகிரஹாஷ்பதம்*
*யாதவேந்திரஸ்ய யோ மந்த்ரீ ஸிஷ்யோ ப்ருத்ய: ப்ரியா மஹான்*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.5.116)*

யாதவர்கள் தொடர்ந்து பேசினார்கள்: "சில நேரங்களில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் எங்களை விட்டுவிட்டு சென்று விடுவார். பின் வந்து விடுவார். இதனால் அவர் திரும்பவும் எங்களைப் பிரிந்து சென்று விடுவாரோ என்ற துக்கம் எங்களுக்கு எப்போதும் இருக்கும். ஆனால், உத்தவர் எப்போதும் அவருடனேயே இருப்பார். ஸ்ரீகிருஷ்ணர் எங்கு சென்றாலும் அங்கு அவருடன் உத்தவரும் செல்வார்.

"சில நேரங்களில் உத்தவர் பகவானின் பிரதி நிதியாக செயல்படுவார். ஸ்ரீகிருஷ்ணர் உண்டு மிஞ்சிய உணவையே அவர் உண்பார். மற்ற யாதவர்களுக்கும் அதைக் கொண்டு கொடுப்பார். பகவான் அணிந்த ஆடைகள், அணிகலன்கள், மாலைகள் போன்றவற்றையே அவர் அணிவார். அவர் எப்போதும் கிருஷ்ண பிரேமையில், பகவானைத் தியானித்துக் கொண்டு இருப்பதால்,

அவர் ஸ்ரீகிருஷ்ணரின் நிறத்தில் இருப்பார்.

"உத்தவர் வசுதேவரின் சகோதரரின் மகன். பிரஹஸ்பதியிடம் கல்வி கற்றவர். மிகவும் புத்திசாலி! ஸ்ரீகிருஷ்ணரின் மகன் பிரத்யும்னனை விட உருவத்தில் ஸ்ரீகிருஷ்ணரைப் போலவே இருப்பார் (இந்த கருத்து ஸ்ரீமத் பாகவதத்திலும் குறிப்பிடப்படுகிறது).

"ஸ்ரீகிருஷ்ணரின் கட்டளையின்றி ஒரு கணம் கூட ஸ்ரீகிருஷ்ணரைப் பிரிய மாட்டார். அவர் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் முதன் மந்திரி. பகவானின் பிரதிநிதியாக சில நேரங்களில் செயல்படுவார். எடுத்துக் காட்டாக, ஒருமுறை சாம்பனை (ஜாம்பவதியின் மகன்) கௌரவர்கள் கைது செய்து விட்டனர். அப்போது ஸ்ரீகிருஷ்ணரின் சார்பாக உத்தவர் சென்று சாம்பனை மீட்டு வந்தார். பகவான் தூங்கும் வரை அவரது பாதங்களை தன் மடி மீது வைத்துக் கொண்டு தடவிக் கொடுத்து, தூங்கும் வரை பாத சேவை செய்வார்."

உத்தவரைப் பற்றி யாதவர்கள் கூறியதைக் கேட்டதும், உத்தவரின் இல்லத்திற்கு நாரதர் ஓட ஆரம்பித்தார். பிரேமைக்கான அறிகுறிகள் அனைத்தும் நாரதரின் உடலில் தோன்றின. இப்போது உக்கிரசேனர் நாரதரைத் தடுத்து நிறுத்தினார். பின் உக்கிரசேனர் நாரதரிடம் தனது வருத்தங்களைக் கூறினார்.

"ஓ நாரதரே, எனக்கு பகவானின் கருணை சிறிதும் கிடைக்கவில்லை. என் பேரன் கிருஷ்ணர் ராஜாங்க விஷயங்களை பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி என்னை இங்கு உட்கார வைத்து விட்டான். துவாரகாவைப் பார்த்துக் கொள்ள யாரும் தேவையில்லை. இது பகவானின் ராஜ்ஜியம். இதை தோற்கடிக்க எந்த எதிரிகளும் கிடையாது. இந்த துவாரகா நகரம் கடலுக்குள் கட்டப்பட்டிருக்கிறது. யாராலும் உள்ளே நுழைய முடியாது. இதைப் பார்த்துக் கொள்ள என்ன இருக்கிறது? என் பேரன் கொடுத்த கட்டளையை ஏற்று இந்த ராஜ்ஜியத்தை ஆட்சி செய்கிறேன். அவர் எனக்கு மரியாதை கொடுக்கும்போது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. சேவை செய்ய கொடுங்கள் என்று கேட்கும் போதும், நான் அரசவைக்கு வரும்போதும் எழுந்து நின்று எனக்கு மரியாதை கொடுக்கும் போதும் எனது மனம் மிகவும் வலிக்கிறது. என்னை ஏமாற்றியது போல ஸ்ரீகிருஷ்ணர் யாரையும் ஏமாற்றவில்லை. அவரை வழிபட விடாமல் என்னைத் தடுக்கிறார்.

ஆனால், உத்தவர் மகிழ்ச்சியாக இருக்கிறார். ஏனெனில், அவர் எப்போதும் பகவானுடனேயே இருக்கிறார். எனவே, பகவானின் கருணை உத்தவருக்கு மட்டுமே உள்ளது.

"எனவே நீங்கள் உடனே உத்தவரிடம் செல்லுங்கள். ஸ்ரீகிருஷ்ணர் சுதர்மா மண்டபத்திற்கு வரும் நேரம் கடந்து விட்டது. எனவே, ஸ்ரீகிருஷ்ணரை உத்தவரிடம் பேசிக் கொண்டிருக்காமல் உடனே சுதர்மா மண்டபத்திற்கு வரச்சொல்லுங்கள். எங்களுக்கு ஸ்ரீகிருஷ்ணரின் தரிசனம் கிடைக்க வேண்டும். உத்தவரிடம் கூறி, தயவு செய்து ஸ்ரீகிருஷ்ணரை சுதர்மா மண்டபத்திற்கு அழைத்து வரச் சொல்லுங்கள்" என்றார்.

உடனே நாரதர் உத்தவரின் இல்லத்திற்கு செல்ல தயாரானார்.

# அத்தியாயம் 6

## *மிகவும் பிரியமான பக்தர்கள்*

நாரதர் மிகவும் உற்சாகத்துடன் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் அரண்மனைகளில், உத்தவர் இருக்கும் இடத்தைத் தேடிச் சென்றார். ஆனால் கையில் வீணையை வைத்திருந்த நாரதர், பக்திப் பிரேமையில் இருந்த காரணத்தால் அதனை மீட்டி இசைக்க முடியவில்லை. பிரேமை மிகுதியால் பேய் போலவும், பைத்தியம் பிடித்தவர் போலவும் ஆடிப் பாடிக் கொண்டு சென்றார்.

*பூவாபியாஷாத் இவாபியாஸாம் ப்ராஸாதஸ்ய கதோ முனி:*
*பூதாவிஸ்தோ மஹோன்மாத-க்ர் ஹீதாஸ் ச யதேதர:*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1. 6. 3)*

பரீட்சித் மஹாராஜா தன் தாயார் உத்தராவிடம் "இனி நான் கூறுவதை மிகக் கவனமாகக் கேட்க வேண்டும்! அப்போது தான் என்னால் அதை முழு கிருஷ்ண பிரேமையுடம் கூற முடியும்", என்று கூறி பேசத் தொடங்கினார்.

அன்று சில காரணங்களால் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் மாளிகையின் உள் அறையில் அப்போதும் தூங்கிக் கொண்டிருந்தார். அவரது மனம் மிகவும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது. உத்தவர் தனியாக மாடியில் இருந்தார். அவருடன் பலதேவர், தேவகி மாதா, ரோகிணி, ருக்மணி, சத்யபாமா மற்றும் அனைத்து அரசிகளும் இருந்தனர். அவர்களுடன் கம்சனின் தாயாகிய பத்மாவதியும் இருந்தாள். பத்மாவதி எப்போதும் ஸ்ரீகிருஷ்ணரைப் பற்றி வம்பு பேசிக் கொண்டே இருப்பாள்.

ஸ்ரீகிருஷ்ணர் மனம் குழப்பத்தில் இருந்ததால், உத்தவர் அரண்மனையின் மாடியில் இருந்தார். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் துயரத்துடன் இருந்ததால், அனைவரும் அமைதியாக அங்கங்கே அமர்ந்திருந்தனர். அப்போது அங்கு நாரதர் வந்தார். நாரதரைப் பார்க்க அனைவருக்கும் புதுமையாக இருந்தது. கண்ணீரால் அவரது உடலும், முகமும் நனைந்திருந்தது. அனைவரும் எழுந்து நாரதரை மரியாதையுடன் உள்ளே அழைத்து வந்து ஆசுவாசப் படுத்த முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்களால் முடியவில்லை.

"நாரதரே! இதற்கு முன்பு உங்களை இப்படிப் பார்த்ததில்லை! ஏன் நீங்கள் இந்த மாதிரி இருக்கிறீர்கள்? உங்கள் உடல் நடுங்குகிறது. உங்கள் வாய் குளறுகிறது. மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்கின்றன. இந்த நிலையில் நாங்கள் இதுவரை உங்களைப் பார்த்ததில்லை. என்ன நடந்தது?", என அனைவரும் ஆர்வமுடன் கேட்டனர்.

உடனே நாரதர், "உத்தவரை சந்திக்க எனக்கு உதவுங்கள். அவர் தான் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர். அவரது பாத தூளி எனக்குக் கிடைக்க அருள் புரியுங்கள். அப்போது தான் எனது ஆத்மா சாந்தி அடையும். உத்தவருக்குக் கிடைத்த பகவானின் கருணை இதுவரை எந்த பக்தருக்கும் கிடைக்கவில்லை. இதற்கு முன்பும், இப்போதும், எப்போதும் கிடைக்கப் போவதில்லை. அவர் பகவானின் பக்தர்கள் அனைவர்களிலும் மிகச்சிறந்தவர்” என்று கூறினார். உண்மையாக பகவானின் கருணைக்குப் பாத்திரமானவரைக் கண்டு கொண்ட மகிழ்ச்சியில் பிரேமையில் ஆழ்ந்தார்.

பகவானின் கருணை, அவரது சொந்த மகனான பிரம்ம தேவருக்கோ அடுத்த மகன் பிரத்யும்னனுக்கோ, சகோதரன் சங்கர்ஷணருக்கோ, சிவபெருமான் போன்ற நண்பர்களுக்கோ, ருக்மணி, சத்யபாமா போன்ற அவரது மனைவியர்களுக்குக் கூட கிடைக்கவில்லை. பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணை உத்தவருக்கு இருக்கிறது என்பதை, பகவான் ஸ்ரீகிருஷ்ணரே தன் வாய் மூலமாகவே சாஸ்திரங்களில் கூறியிருப்பதைக் காண முடியும். மேலும், உத்தவரைப் பற்றி உக்கிரசேனரும் அரண்மனையில் நாரதரிடம் கூறியிருந்தார்.

நாரதர் கூறிய வார்த்தைகளைக் கேட்ட உத்தவர் எழுந்து ஓடி வந்து நாரதரின் தாமரைப் பாதங்களைக் கட்டி அணைத்துக் கொண்டார். இப்போது உத்தவருக்கு பிரேமை வந்து கண்ணீர் கொட்டியது.

இப்போது உத்தவர் பேசலானார். "நீங்கள் தான் உண்மையிலேயே பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு பக்தி சேவை செய்யும் உண்மையான குரு! நீங்கள் கூறியது போல, உக்கிரசேனரும் யாதவர்களும் கூறியது போல, எனக்கு பகவானின் கருணை உள்ளது என்றும், நான் தான் பக்தன் என்ற கர்வமும் எனக்கும் இருந்தது. ஆனால் நான் விரஜ பூமிக்கு செல்லும் வரையில் தான் எனக்கு அந்த எண்ணம் இருந்தது. கொஞ்ச

நாட்களுக்கு முன்பு ஸ்ரீகிருஷ்ணர் என்னை விரஜ பூமிக்கு அனுப்பி வைத்தார். அங்கு சென்ற பின்தான், நான் ஒன்றுமே இல்லாதவன் என்ற உண்மையை தெரிந்து கொண்டேன். நான் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவன் என்ற எனது அகங்காரம் துண்டு துண்டாக உடைந்து விட்டது. அங்கு நான் அனுபவித்த அனுபவங்கள் என் தலைக் கனத்தை நசுக்கி விட்டன. அந்த அனுபவத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. இது வரை பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்கு நான் தான் ஒரே வாரிசு என்று நினைத்திருந்தேன். விருந்தாவனம் சென்ற அனுபவம் சுமேரு மலை போல இருந்த என் கர்வத்தை தரை மட்டமாக்கிவிட்டது.

*ஈதானீம் யத் வ்ரஜே கத்வா*
*கிம் அபி அன்வபவம் தத:*
*மஹா- சௌபாக்ய - மானோ மே ச*
*சத்யாஸ் ஸுத்னதாம் கத:*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.6. 24)*

"உண்மையிலேயே பகவானின் கருணை எனக்கு இருந்ததால் தான் விரஜவாசிகளின் தரிசனம் எனக்குக் கிடைத்தது. விரஜவாசிகளுக்கு பகவானின் கருணை எந்த அளவிற்கு கிடைத்துள்ளது என்பதை நான் நேரில் தெரிந்து கொண்டேன்.

"கிருஷ்ணரின் பிரேமை எப்படி இருக்கும்? யாரிடம் இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்டேன். நான் எவ்வளவு கொடுத்து வைத்தவன்! ஸ்ரீகிருஷ்ணர் என்னை அங்கு அனுப்பாவிட்டால், பிரேமை என்றால் என்ன என்பது கூட எனக்குத் தெரியாமல் போயிருக்கும். பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் அவர்கள் கொண்ட பிரேமை வெள்ளம் என்னை அடித்துத் தள்ளி விட்டது. அந்த மாதிரி பிரேமையை அனுபவித்து வந்து விட்டேன்.

"இங்குள்ள எல்லோருக்கும் தெரியும், நான் அங்கு போய் விட்டு வந்த பின்பு எவ்வாறு நடந்து கொண்டேன் என்று. அங்குள்ள கோபியர்களுக்கு மகாபாவம் என்ற உத்தம பிரேம பக்தியை அனுபவிக்கும் பெரும் பாக்கியம் இருக்கிறது. அதனால் பகவானின் மகாபாவத்தை அவர்களால் அனுபவிக்க முடிகிறது. கோபியர்களுடன் உள்ள தூய அன்பினை, ஜட உலக வாழ்க்கையை வெறுப்பவர்கள் தான் அடைய ஆசைப் படுவார்கள்.

*காயம் காயம் யத்-அபிலாஸதா யத் ததோ அனுஷ்ததம் யத்*
*தத் ஸர்வேஷாம் சுவிதிதம் இத: ஸக்யதே அன்யன் ந வக்தம்*
*நத்வா நத்வா முனி-வரா மயா ப்ரார்த்யஸே காகுபிஸ் த்வம்*
*தத் - தத் விர்த்தா-ஸ்ரவண-ரஜத: சம்சாரயெதா விராமம்*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.6.27)*

"கோபியர்கள், முனிசாரி கோபிகள், சுருதி சாரி கோபிகள், சாதன சித்த கோபிகள் என மூவகைப் படுவார்கள். இராம அவதாரத்தில் இராமரின் அழகில் மயங்கி கட்டிப்பிடித்து முத்தமிட ஆசைப்பட்ட முனிவர்கள், பகவானின் கிருஷ்ண அவதாரத்தில் கோபியர்களாகப் பிறந்தனர். அவர்கள் முனிசாரி கோபிகள் எனப்பட்டனர். பக்தி சாதகங்கள் செய்து கோபியர்களாக வந்தவர்கள், சாதனை சித்த கோபிகள் எனப்பட்டனர்.

## *விரஜ பூமியில் புல்லாக பிறக்க வேண்டும்*

விரஜ பூமியில் கோபிகளின் தரிசனத்தை எடுத்துக் கொண்ட உத்தவர், விரஜ பூமியில் புல்லாகவோ, பூண்டாகவோ பிறக்க ஆசைப்பட்டார். இந்த செய்தி ஸ்ரீமத் பாகவதத்தில் (10.47.61) குறிப்பிடப்படுகிறது.

*ஆஸாம் அஹோ சரண-ரேணு - ஜுஷாம் அஹம் ஸ்யாம்*
*வ்ருந்தாவனே கிம் அபி குல்ம - லதௌ ஷதீனாம்*
*யா துஸ்த்யஜம் ஸ்வ -ஜனம் ஆர்ய- பதம் ச ஹித்வா*
*பேஜுர் முகுந்த -பதவீம் ஸ்ருதிபிர் விக்ருக்யாம்*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 10.47.61)*

'வேத ஞானத்தினால் தேடி கண்டுபிடிக்கப்பட வேண்டிய முகுந்தனின் தாமரைப்பாதங்களில் புகலிடம் கொள்வதற்காக, பிருந்தாவனத்து கோபியர்கள், கைவிடுவதற்கு மிகக் கடினமான தங்கள் கணவர்களையும், மகன்களையும், மற்ற குடும்ப அங்கத்தினர்களையும் மட்டுமன்றி தங்கள் கற்புடைமையைக் கூட கை விட்டனர். கோபியர்கள் பிருந்தாவனத்திலுள்ள புதர்களையும், செடி கொடிகளையும் புழுதி படிந்த தங்களது தாமரைப் பாதங்களால் மிதித்து அவற்றை ஆசீர்வதிப்பதால் அவற்றில் ஒன்றாக இருப்பதற்கு போதிய பாக்கியமுள்ளவனாக நான் இருக்க

வேண்டும்' என்று உத்தவர் கூறினார்.

பிருந்தாவனத்து கோபியர்களின் பெருமைகளை உத்தவர் கூறிக்கொண்டு வருவதைக் கேட்ட சத்யபாமா மற்றும் ஶ்ரீகிருஷ்ணரின் மற்ற மனைவிகளின் முகத்தில் கோபம் மற்றும் பொறாமையின் சாயல் தெரிந்தது. உடனே உத்தவர் சுதாரித்துக் கொண்டு "என்னை ஒருமுறை தான் ஶ்ரீகிருஷ்ணர் விருந்தாவனத்திற்கு அனுப்பினார். ஆனால் ரோகிணி மாதா அங்கு தான் இருந்தார். எனவே அவரிடம் கேளுங்கள்" என்று கூறி மெதுவாக நழுவினார்.

இதைக்கேட்ட ரோகிணி மாதா பேச ஆரம்பித்தாள்: "கிருஷ்ணரையும், பலராமரையும் அக்ரூரர் அழைத்து வந்த அந்த தருணம் விரஜபூமியில் உள்ள அனைத்தும் அழுதன. கற்களும் மலைகளும் கூட அழுதன. ஶ்ரீகிருஷ்ணர் திரும்பி வருவார் என்னும் எண்ணத்தில் கோபியர்கள் இன்னும் அங்கேயே இருக்கின்றனர். நல்ல காலமே அவர்களைத் தொடாதா? கிருஷ்ணரின் பிரிவை அவர்களால் தாங்க முடியவில்லை. அக்ரூரர் அழைத்து வந்தவுடன் கடலுக்குள் இருந்து எரிமலை வெடித்து சிதறுவதைப் போல துன்பத்தில் ஆழ்ந்தனர். கோபியர்களின் துயரத்தை பார்க்க முடியாமல் தான் நான் இங்கு வந்தேன். இப்போது நினைத்தாலும் என் மனத்தில் மிகக் கஷ்டமாக உள்ளது. அதனால் என்னை நீ திருப்பி நினைக்க வைக்காதே", என்று கூறிய ரோகிணி மாதா கிருஷ்ணரைப் பிரிந்திருக்கும் விரஜ பூமியின் நிலையை எடுத்துரைத்தார்.

## *விரஜபூமியில் கோபியர்களின் நிலை:*

"யசோதா தன் இல்லத்தில் திண்ணையில் அப்படியே இருக்கிறாள். கோபியர்கள் எந்த இடத்தில் அக்ரூரர் கிருஷ்ணரையும், பலராமரையும் அழைத்து சென்றாரோ, அந்த இடத்தில் அப்படியே பிணம் போல இருக்கின்றனர். கிருஷ்ணர் வருவார் என உயிரைப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். வசுதேவர் கோகுலத்திலிருந்து என்னை துவாரகைக்கு அழைத்து வந்து விட்டார். ஆனால் விரஜ பூமியில் யசோதா, 'கிருஷ்ணா! கிருஷ்ணா!' என கதறி அழைக்கும் குரல் கேட்டு கற்பாறைகள் கூட விக்கி விக்கி அழுகின்றன. மற்ற கோபிகைகள் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என எனக்குத் தெரியவில்லை. இப்போது அதைத் திருப்பியும் நினைவு படுத்துகிறாயே!

பயங்கரமாக இடியும் மின்னலும் தாக்குகின்றன. ஆனால், இரங்கி மழை பெய்யவில்லையே!

"சாந்தீபனி முனிவரிடம் கல்வி கற்க சென்ற கிருஷ்ணரும், பலராமரும் திரும்பி வருமுன் நான் துவாரகாவிற்கு வந்து விட்டேன். கோபியர்களின் துயரத்தை நான் கிருஷ்ணரிடம் கூறினேன். ஆனால், ஸ்ரீகிருஷ்ணரின் மனம் இரங்க வில்லை. அவர் விரஜ பூமிக்கு செல்லவில்லை. அவர் உன்னை (உத்தவரை) அனுப்பி வைத்தார்."

## *கிருஷ்ணரின் விரஜ லீலைகள்!*

ரோகிணி மாதா ஸ்ரீகிருஷ்ணரின் விரஜ லீலைகளையும், அவருக்கு விரஜவாசிகள் அளித்த பாதுகாப்பினையும் விவரிக்கிறாள்: "நான் கிருஷ்ணர் விரஜ பூமிக்கு வருவதற்கு முன்பே அங்கிருந்தேன். அனைத்து லீலைகளையும் கண்கூடாகப் பார்த்தவள் நான். எப்போதும் விரஜ பூமியில் அசுரர்களின் தொந்தரவு இருந்து வந்தது. கிருஷ்ணர் பூதனை முதல் கேசி வரை ஏராளமான அசுரர்களை அழித்தார். எப்போதும் அசுரர்களின் தொல்லை இருந்ததால், எப்போதும் கிருஷ்ணருக்கு பாதுகாப்பு வேண்டும் என்ற பயத்திலேயே இருந்தோம். இது தவிர பிரம்மா, இந்திரன் போன்ற தேவர்களால் கூட பல துயரங்கள் வந்தன (பிரம்ம விமோகன லீலை, கோவர்தன லீலை).

"விரஜவாசிகள் எப்போதும் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் மீது கொண்ட பிரியத்தால் கிருஷ்ணருக்கு பாதுகாப்பு வேண்டும் என்றே நினைத்தனர். விரஜவாசிகள் எப்போதும் கிருஷ்ண பிரேமையில் இருப்பதால், எதையும் நந்தன் நந்தன் ஸ்ரீகிருஷ்ணரை திருப்திப் படுத்தவும், சந்தோசப்படுத்தவும் செய்தனர். ஆனால், உன் நந்த நந்தன் ஸ்ரீகிருஷ்ணர் விரஜ பூமியில் உள்ளவர்களுக்கு என்ன செய்தார்? விரஜவாசிகள் படும் கஷ்டம் உங்களுக்கு தெரியுமா? இது பற்றி பேச என்ன இருக்கிறது?" என கோபத்துடன் பேசலானார்.

## *கருணையே இல்லாத கோபர்கள் - பத்மாவதி குற்றச்சாட்டு*

இப்போது கம்சனின் தாயான பத்மாவதி தலையை ஆட்டிக் கொண்டு பேச ஆரம்பித்தாள். கம்சனின் தாயாரான பத்மாவதி துடுக்காக பேசுபவர். புத்தியும் குறைவு. கம்சனை கிருஷ்ணர்

கொன்றதால் எப்போதும் குறை கூறிக்கொண்டே இருப்பாள். அவள், 'கோபர்கள் கருணை இல்லாதவர்கள்' என எப்போதும் குற்றம் சாட்டினாள்.

அவள் மேலும் பேசினாள்: "சிறு வயதிலேயே கருணை இல்லாத மாடு மேய்க்கும் கோபர்கள் கிருஷ்ணரை மாடு மேய்க்க விட்டிருக்கிறார்கள். முட்கள் நிறைந்த காடுகளில் செருப்பு கூட கொடுக்காமல் மாடு மேய்க்க விட்டிருக்கிறார்கள். என் பேரனுக்கு சாப்பாடு கூட கொடுக்காததால் அவன் கொஞ்சம் பாலையோ, வெண்ணையையோ அடுத்த வீடுகளில் எடுத்து சாப்பிட்டால், மாடு கட்டும் கயிற்றால் கட்டி வைத்து விடுகிறார்கள் (தாமோதர லீலை). எந்த விதமான விவஸ்தையும் இல்லாதவர்கள் தான் உண்மையில் விரஜவாசிகள். அதுமட்டுமா? கோபிகள் கிருஷ்ணரை கண்டபடி திட்டுவார்கள். (பாலை கறக்கும் முன் கன்றுக் குட்டிகளை அவிழ்த்து விடுவான் கிருஷ்ணன்). கிருஷ்ணர் கம்சனைக் கொல்ல மறைந்து வாழ்ந்த சூழலில் அதையெல்லாம் சகித்துக் கொண்டிருந்தான். அவர்களுக்கு கிருஷ்ணர் என்ன செய்ய வேண்டும்?'", என கோபமுடன் பேசினாள் பத்மாவதி.

அதை ரோகிணி மாதா காதில் கூட போட்டுக் கொள்ள வில்லை. ஆனால், "கிருஷ்ணர் துவாரகைக்கு வந்து ஏராளமான எதிரிகளைக் கொன்று விட்டு, மதுராவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வருகிறார். சௌகரியமாக இருக்கிறார். தேவர்கள் இங்கு வந்து கிருஷ்ணரை புகழ்கிறார்கள். பாரிஜாத பூவிற்காக இந்திரனுடன் சண்டைக்குப் போகிறார். தேவையில்லாத வேலை பார்க்கிறார். ஆனால், விரஜவாசிகளை மட்டும் நினைப்பதில்லை", என்று ரோகினிமாதா புலம்பினாள்.

## *கிருஷ்ணரின் இதயம் வெண்ணெய் போன்றது -- ருக்மணியின் கவலை!*

ரோகிணி மாதா பேசியதை ருக்மணி தேவியினால் தாங்க முடியவில்லை. அவள் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் இதயத்தில் வீற்றிருக்கும் லட்சுமி தேவி. எனவே, அவள் பேச ஆரம்பித்தாள். "அம்மா! ஸ்ரீகிருஷ்ணரின் மனது உங்களுக்குத் தெரியாது. அவர் மனம் வெண்ணெய் போல மிருதுவானது. நீங்கள் ஏன் இப்படி பேசுகிறீர்கள்? அவர் இதயம் மென்மையானது. ஸ்ரீகிருஷ்ணரின் இதயத்தைப் பற்றியும், அதன் அந்தரங்கத்தைப் பற்றியும் உங்களுக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரியும். அதை நான்

கூறுகிறேன் கேளுங்கள்" என்று கூறி தொடர்ந்தாள்.

"ஸ்ரீகிருஷ்ணர் எப்போதும் கனவில் கூட விரஜபூமியைப் பற்றித்தான் உளறிக் கொண்டே இருப்பார். இனிய குரலில் பசுக்களின் பெயரை சொல்லி அழைப்பார். அப்போது அவர் குரல் தேன் போல இனிமையாக இருக்கும். சில நேரங்களில் கோபர்களையும் கோபிகைகளையும் பெயர் சொல்லி அழைப்பார். இன்னும் சில நேரங்களில் தூக்கத்திலேயே திரிபங்க ரூபமாக படுத்துக்கொண்டு, கையில் புல்லாங்குழல் வைத்திருக்கும் பாவனையில் தூங்குவார்.

"அதுமட்டுமா? தூக்கத்திலேயே 'ஓ மையா! புதிதாகக் கடைந்தெடுத்த வெண்ணெய் கொடுங்கள்' என்பார். 'ஓ ராதே, ஓ லலிதே!' என்பார். சில நேரங்களில் என் ஆடையைப் பற்றிக் கொண்டு, 'சந்திராவளி நீ என்ன செய்கிறாய்' என்பார். இன்னும் சில நேரங்களில் தலையணை, படுக்கை நனையும்படி பிழியப் பிழிய அழுவார். சில சமயம் தூக்கத்திலிருந்து திடீரென எழுந்து அழ ஆரம்பிப்பார். துயரக் கடலில் அவர் எழுந்து அழுது புலம்புவது இரவில் எனக்குக் கேட்கும். சில நேரங்களில் தனது தாமரை முகத்தை உத்தரீயத்தால் மூடிக் கொண்டு புலம்பி அழுவார். சில நாட்கள் தினசரி எழுந்து செய்யும் காலைக் கடன்களைக் கூட செய்யமாட்டார். இன்று இரவு கூட அப்படிதான் நடந்தது. இன்னும் அவர் எழுந்திருக்கவில்லை", என்று ருக்மணிதேவி கவலையுடன் கூறினாள்.

*கிம் அபி கிம் அபி ப்ருதே ராத்ரௌ ஸ்வப்பன் அபி நாமபிர்*
*மதுரா-மதுரம் ப்ரீதியா தேநூர் இவாஹ்வயதி க்வசித்*
*உத சகி-கணாம் காம்சித் கோபான் இவாத மனோ-கராம்*
*ஸமபினாயதே வம்ஸி-வக்ராம் த்ரி பங்கி-பராக்ரிம்*
*( ஸ்ரீ பிருகத் பகவதாமிர்தம் : 1.6.51)*

"ருக்மணிதேவி கூறியதைக் கேட்ட சத்யபாமா பொறாமையுடன் "ஓ, ருக்மணி நீ என்ன இப்படித்தான் உளறுவாயா? அவர் கனவில் மட்டும் தான் இப்படி செய்கிறாரா? விழித்திருக்கும் போதும் இப்படித்தான் செய்கிறார்! ஆனால், தூக்கத்தில் பேசுவது போல நடிக்கிறார்! நாம் பெயருக்குத்தான் அவரது மனைவிகள். அனால், அவரது மனதில் எப்போதும் பிருந்தாவனத்துக் கோபிகைகள் தான் இருக்கின்றனர்" என்று கூறினாள்.

## *பலராமரின் கோபம்!*

சத்யபாபா பேசிக் கொண்டிருப்பதைக் கேட்ட பலராமருக்குக் கோபம் வந்தது. எனவே, கோபத்துடன், "கிருஷ்ணர் ஏன் தூக்கத்தில் உளற வேண்டும்? கனவில் அழுவது போல செய்து நம்மை முட்டாளாக்குகிறார். நான் இரண்டு மாதங்கள் விரஜ பூமியில் இருந்தேன். விரஜவாசிகளை சகஜ நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்தேன். ஆனால் என்னால் முடியவில்லை. யமுனை நதிக்கரையில் அவர்கள் வசிக்க வீடுகள் கட்டிக் கொடுத்தேன். 'உங்கள் பிரிவால் கிருஷ்ணர் துக்கத்தில் இருக்கிறார். அங்கு எதிரிகளையெல்லாம் அழித்துவிட்டு உங்களைப் பார்க்க வந்து விடுவார்' என ஏராளமான உறுதி மொழிகளைக் கொடுத்தேன். அவர்களை சமாதானப் படுத்த முடியவில்லை. கிருஷ்ணர் இல்லாமால் அவர்களுக்கு ஒன்றுமில்லை. கிருஷ்ணர் தான் அவர்களது ஆனந்தம். எனவே, விரஜ பூமியிலிருந்து விரைவாக திரும்பி வந்து விட்டேன்.

*தத்ர மாச-த்வயம் ஸ்தித்வா தேஸாம் ஸ்வாஸ்தியம் சிகீத்ஸதா*
*தன் ந ஷக்தம் மயா கர்தும் வாக்பிர் ஆச்சாரிதைர் அபி*
*( ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம் : 1.6.59)*

"நான் துவாரகாவிற்கு திரும்பி வந்ததும் ஸ்ரீ கிருஷ்ணரிடம் 'விரஜவாசிகளின் உயிரைக் காப்பாற்றுங்கள்' என்று கூறினேன். கண்டிப்பாக போகலாம் என தன் வாயால் கூறினார். ஆனால், மனதால் என்ன நினைத்தாரோ, அங்கு போவதாகத் தெரியவில்லை. அவர் உங்களையும் ஏமாற்றுகிறார். விரஜ வாசிகளையும் ஏமாற்றுகிறார்" என்று பலராமர் கூறினார்.

பலராமர் கூறியதைக் கேட்டதும், பிரேமையால் ஸ்ரீகிருஷ்ணர் படுக்கையிலிருந்து எழுந்து ஓடி வந்தார். பலமான குரலுடன் கதறிக் கதறி அழுதார். பக்த வக்சலனான பகவானா இப்படி அழுவது? ஸ்ரீகிருஷ்ணரின் தாமரைக் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டியது. தாமரைக் கண்கள் சிவந்து விட்டன.

## *பகவான் கிருஷ்ணர் பேசினார்!*

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இப்போது பேச ஆரம்பித்தார்: "என்னுடைய இதயம் இடி மாதிரி இருக்கிறது. இரண்டாக

வெடித்துப் போகவில்லையே! என் இதயம் விரஜ வாசிகளுக்காக உருகவில்லையே! விரஜவாசிகள் நான் பிறந்ததிலிருந்தே என்னைப் பாதுகாத்தனர். அப்படி ஒரு பிரேமையை அவர்கள் என் மீது செலுத்தியும் நான் அவர்களை மறந்து விட்டேனே! நான் கோபியர்களுக்கு கொடுமை செய்து விட்டேனே! அந்த விரஜவாசிகள் மென்மையான இதயத்தை உடையவர்கள். அவர்களுக்குத் தீவிரமான துன்பத்தைக் கொடுத்து விட்டேனே! என் சகோதரன் உத்தவரே, உனக்கு அனைத்தும் தெரியும். இப்போது நீ கூறு! நான் என்ன செய்ய வேண்டும்? என்னைத் துயரக் கடலில் இருந்து காப்பாற்று!" என்றார்.

தேவகி மாதா தன் மகன் கிருஷ்ணருக்கு மட்டுமன்றி, நந்தகோபரின் மனைவியான யசோதாவிற்கும் மிகவும் நெருக்கமானவள். எனவே, அவள், "உன்னுடைய நலம் விரும்புகிற விரஜவாசிகளின் ஆசையை நிறைவேற்று. அவர்கள் எதை விரும்புகிறார்களோ அதை அவர்களுக்கு செய்" என்றாள்.

## *பத்மாவதியின் கவலை!*

பகவான் கிருஷ்ணரின் பாட்டி பத்மாவதி மிகவும் கவலைப் பட்டாள். ஶ்ரீகிருஷ்ணர் யது குலத்தின் வாரிசு. ஶ்ரீகிருஷ்ணர் விரஜபூமிக்கு சென்று விட்டால், இந்த ராஜ்ஜியத்தை யார் பாதுகாப்பது? இந்த ராஜ்ஜியம் தனது கைவிட்டுப் போய் விடுமோ என பயந்து ஶ்ரீகிருஷ்ணரின் மனநிலையை மாற்ற முயற்சி செய்தார். "ஓ கிருஷ்ணா, நீ எதற்காக புலம்புகிறாய்? நீயும் பலராமரும் அங்கு பதினோரு ஆண்டுகள் இருந்தீர்கள். அவர்கள் உங்களுக்கு சாப்பிட, குடிக்க மற்றும் என்னென்ன வசதிகள் கொடுத்தார்களோ அதைக் கணக்குப் பார்த்து, இரண்டு மடங்காக அவர்களுக்கு பணமாகக் கொடுத்து விடலாம். கர்க முனிவரை வைத்து கணக்குப் பார்த்து நந்த கோபருக்கு இரண்டு மடங்காக நாம் கொடுத்து விடலாம். மேலும் நீங்கள் அங்கு அவர்களுக்காக மாடு மேய்த்ததற்கு அவர்கள் ஒருவேளை நமக்கு பணம் கொடுத்தால் நாம் அதை வாங்கிக் கொள்ளலாம். தரவில்லையென்றால் விட்டுவிடலாம்" என்றாள்.

பத்மாவதி கூறியதைக் கேட்ட பகவான் ஶ்ரீகிருஷ்ணர், மிகக் கவலையுடனும், வேதனையுடனும் உத்தவரிடம் "உத்தவரே, நீ விரஜ பூமிக்கு சென்றிருந்ததால், விரஜவாசிகளின் மனநிலை உனக்குத் தெரியும். விரஜ வாசிகளின் வாழ்க்கைக்கு நான் என்ன

செய்ய வேண்டும்? தயவு செய்து இப்போதே கூறு" என்று கேட்டார்.

## *விரஜவாசிகளுக்கு கிருஷ்ணர் மட்டுமே வேண்டும்*

இதைக் கேட்ட உத்தவர் மேலும் குழப்பத்திற்கு ஆளாகி மனதில் கோபமுடன் பெருமூச்சு விட்டபடி பேசலானார்: "விரஜவாசிகள் பணத்தையோ, இந்த மொத்த அரசையோ விரும்பவில்லை. இந்த உலகம் முழுவதும் உள்ள எந்த ஐஸ்வரியங்களையும் அவர்கள் விரும்பவில்லை. உயர் லோகங்களில் உள்ள செல்வங்களையும் அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் உங்களை மட்டுமே விரும்புகிறார்கள். அவர்களுக்கு நீ மட்டுமே வேண்டும். நான் கூறியதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டீர்கள். இனி என்ன முடிவு எடுக்கவேண்டுமோ, அதை முடிவு செய்யுங்கள்" என்று உத்தவர் கூறினார்.

உத்தவர் மேலும் கூறினார். "இதற்கு முன்பு நந்தகோபர் வாயிலாக நீங்கள் கொடுத்தனுப்பிய (கம்சனைக் கொன்ற உடன் கிருஷ்ணர் நந்தகோபரிடம் தன் அணிகலன்கள், ஆடைகள் அனைத்தையும் கொடுத்தனுப்பினார்) நகைகள், ஆடைகள் அனைத்தையும் பார்த்து விரஜவாசிகள் துயரக் கடலில் மூழ்கி விட்டனர். அவர்கள் அணிகலன்களையோ, ஆடைகளையோ விரும்பவில்லை. அவர்கள் உம்மை மட்டுமே விரும்புகிறார்கள். அந்த அணிகலன்களையெல்லாம் பார்த்து "நாங்கள் இதற்கா ஆசைப்பட்டோம்? இவற்றை கிருஷ்ணர் அனுப்பி விட்டாரே, இதுவா அவர் எங்களுக்குக் காட்டும் கருணை?" என்று இன்னமும் துயரக் கடலில் மூழ்கினர்.

"நந்தகோபரும், கோபர்களும் கொண்டு வந்த நகைகளையும், அணிகலன்களையும் பார்த்ததும் எங்கள் உயிர் தொண்டைக் குழிக்குள் முட்டிக் கொண்டிருக்கிறது. என்று விரஜவாசிகள் புலம்புகின்றனர். உம் தாயார் யசோதா உட்பட விரஜவாசிகள் அனைவரும் உமது வருகையை எதிர் பார்த்து எதுவும் உண்ணாமல், கிட்டத்தட்ட அனைவரும் இறக்கும் நிலையில் இருக்கின்றனர்.

*ததஸ் த்வத் -கமநாசாஞ்சஹித்வா சஹா யசோதயா*
*ம்ருத -ப்ராயா பவான் - மாத்ரா ரிபேரே அனாசனம் மஹத்*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம் :1.6.84)*

"அவர்களுக்கு நீ திரும்பி வருவாய் என்ற நம்பிக்கை போய் விட்டது. அவர்கள் எதையுமே சாப்பிட மறுத்து பட்டினி இருக்கின்றார்கள்", என்று உத்தவர் கூறினார்.

இப்போது பகவான் ஸ்ரீகிருஷ்ணர் விரஜவாசிகளிடம் கொண்ட தீவிர பிரேமையால், தனது தாமரைக் கரங்களால் விரஜவாசிகளுக்கு கடிதம் எழுத ஆரம்பித்தார். "அன்பான விரஜவாசிகளே, என் முன் இருக்கும் கடமைகளை முடித்து விட்டு, என் உறவினர்களை திருப்திப் படுத்தி விட்டு, வெகு விரைவில் அங்கு வருவேன்" எனக் கடிதம் எழுதினார்.

ஆனால் இதனால் என்ன நடக்கும் என்பதை உத்தவர் இப்போது புரிந்து கொண்டார். ஸ்ரீகிருஷ்ணர் விரஜ பூமிக்கு செல்லப் போவதில்லை என்றும், இந்த கடிதம் விரஜ பூமிக்கு சென்றால் விரஜவாசிகளின் இதயம் சுக்கு நூறாக உடைந்து விடும் என்பதையும் உணர்ந்தார். எனவே, உத்தவர், "கிருஷ்ணரே! நீங்கள் விரஜபூமிக்கு செல்ல பாருங்கள்" எனக் கதறி அழுதார். மேலும் உத்தவர் கூறினார்: "கிருஷ்ணரே! நான் கூறுவதை தயவு செய்து கேட்க வேண்டும். உம்முடைய கமலப் பாதங்கள் விரஜவாசிகளை நோக்கி நடக்கவில்லையென்றால், விரஜவாசிகளின் உயிருக்கு நான் உத்திரவாதம் கொடுக்க முடியாது" என்றார்.

உத்தவர் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த பத்மாவதிக்கு கோபம் வந்தது. கோபத்துடன் "முட்டாள் தேவகியே! நான் ஒன்றை நன்றாக தெரிந்து கொண்டேன். உத்தவரை விரஜபூமிக்கு அனுப்பியது தவறு. அவர்கள் ஏராளமாகப் பால் பொருட்களை உத்தவருக்குக் கொடுத்துத் தங்கள் கைக்குள் போட்டுக் கொண்டு, திருப்பி உன் மகனை மாடு மேய்க்க அழைத்து செல்லலாம் என நினைத்திருக்கிறார்கள். கொடிய விலங்குகளிடமிருந்து பசுக்களையும் கோபச் சிறுவர்களையும் பாதுகாக்க கிருஷ்ணரையும், பலராமரையும் அழைத்துச் செல்ல உத்தவரை வைத்து முயற்சி செய்கிறார்கள்." என்றாள்.

## *கோபியர்களின் கிருஷ்ண பிரேமை*

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த ரோகிணி மாதாவிற்கு கடுமையான கோபம் வந்தது. ரோகிணி மாதா பேசினாள்: "ஓ கம்சனின் தாயாரே! விரஜவாசிகள் கிருஷ்ணரை மாடு மேய்க்க வைத்திருக்கவில்லை. கிருஷ்ணர் மீது அவர்களுக்கு அப்படி ஒரு

பிரேமை இருந்தது. மர நிழல்களுக்கு இடையே கிருஷ்ணர் சிறிது நேரம் மறைந்து நின்றால் கூட, அவரைப் பார்க்க முடியாமல் 'கிருஷ்ணா! கிருஷ்ணா' எனக் கத்தி அழைப்பார்கள். அவரைப் பார்க்க முடியாத ஒரு பகல் பொழுது அவர்களுக்கு ஒரு பிரளய காலம் போல இருந்தது. கிருஷ்ணர் மாடு மேய்த்து திரும்பி வரும்போது மாலை நேரத்திற்காக எதிர்பார்த்திருப்பார்கள். பின்னர் அவரது குழலோசை கேட்கும். அதில் கோபியர்கள் மயங்கி விடுவார்கள். அவர் பிருந்தாவனத்திற்கு மாடு மேய்க்க செல்லவில்லை. கோப சிறுவர்களுடனும், பலராமருடனும் விளையாடவே செல்கிறார்", என்று கூறி, பிருந்தாவனம் எத்தனை சிறப்பு வாய்ந்தது என்பதை பத்மாவதிக்குக் கூறினாள்.

## *விருந்தாவனத்தின் சிறப்பு:*

இப்போது ரோகிணி மாதா விருந்தாவனத்தின் மகிமைகளைப் பற்றி பேச ஆரம்பித்தாள்: "விருந்தாவனத்தின் குளங்களில் ஏராளமான வாசனை மிகுந்த மலர்கள் உள்ளன. அன்னங்களும், சக்கரவாகப் பறவைகளும் நீந்தி விளையாடுகின்றன. மணம் மிக்க மலர்களைச் சுற்றி வண்டுகள் ரீங்காரமிடுகின்றன.

*யத்ராதி -மத்தாம்பு - விகங்க -மாலா - குலீ க்ர்தாழி -ஆவாளி -விப்ரமேன*
*விசாலிதானாம் கமலோத்பலானாம் ஸரங்ஸி கந்தைர் விலாசஜ் - ஜலானி*
*(ஸ்ரீ பிருஹத் பக்வாதாமிர்தம்:1.6.107)*

"யமுனையின் கரைகள் சுத்தமாகவும், சிறு புற்கள் நிறைந்து இயற்கையாகவே அழகாகவும் அமைந்துள்ளது. குயிலும், மயிலும் நிறைந்து காணப்படுகின்றன. யமுனைக் கரையில் உள்ள மரங்களில் பூக்கும் பூக்களும் பழங்களும் தாழ்ந்து யமுனைக்குள் விழுவதால் பழச்சாறுகள் கலந்து இனிமையாகவும் நறுமணத்துடனும் விளங்கும்.

"பிருந்தாவனக் காடுகளில் மாடு மேய்ப்பது கடினமானதல்ல. பறவைகளும் விலங்குகளும் அன்பு கொண்டு ஒன்றுக்கொன்று சேர்ந்து விளையாடுகின்றன. பிருந்தாவனத்திலும், கோவர்த்தன மலையிலும் திருட்டோ வன்முறையோ எதுவும் கிடையாது." பசுக்களுக்கு எந்த கஷ்டமும்

கிடையாது", என்று ரோகிணி கூறியதைக் கேட்ட பத்மாவதி, "நீ பிருந்தாவனம் பற்றிக் கூறியது உண்மையாக இருந்தால் இப்போது பசுக்கள் புல்லை சாப்பிட வேண்டியது தானே! அவர்களே தங்களைப் பார்த்துக் கொள்ளலாமே, அங்கு போகத் தேவையில்லையே!" என்றாள்.

இதைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணரின் முகம் வாடி வெளுத்து விட்டது. தனது பக்தர்களுக்கு என்னவாகுமோ என்ற பயத்தில் உறைந்து நின்றார். பலராமரின் முகத்தைப் பார்த்த கிருஷ்ணர் அவரது கண்களிலும் கண்ணீர் நிறைந்திருப்பதைக் கண்டார். பலராமரால் இதற்கு மேல் தாங்க முடியவில்லை. விக்கி விக்கி அழ ஆரம்பித்தார். விரஜவாசிகள் இறந்து விடுவார்களோ என உரத்த குரலில் அழ ஆரம்பித்தார்.

இப்போது பலராமர் தெளிவாக பேச ஆரம்பித்தார்: "ஓ கிருஷ்ணா! பசுக்கள் மட்டுமா? பிருந்தாவனத்தில் உள்ள மான்கள், பறவைகள் அனைத்தும் உனக்கு பிரியமானது தானே! பந்திர் வனத்தில் உள்ள கடம்ப மரங்கள், கொடிகள் அனைத்தும் உனக்குப் பிரியமானது தானே! பிருந்தாவனத்திலுள்ள புற் பூண்டுகள், கொடிகள் அனைத்தும் உனக்குப் பிரியமானது தானே! அவை அனைத்தும் உன் பிரிவால் இலைகள் அனைத்தையும் உதிர்த்து விட்டன. அங்குள்ள குளங்களில் நீர் வற்றி விட்டன. யமுனையிலும் நீர் வற்றி விட்டது. கோவர்த்தன மலை பூமிக்குள் மூழ்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு மேல் என்னால் பேச முடியாது. நீ விரஜவாசிகள் மீது கருணை காட்டவில்லை யென்றால் எமராஜன் தன் கருணையைக் காட்டி தன்னுடன் அழைத்துச் செல்வார்.

## *கோபியர்கள் உடலைக் கூட விட முடியவில்லை!*

"கிருஷ்ணா! நீ யமுனையில் இருந்து காளியனை விரட்டியதால், யமுனை நதி சுத்தமானது. காளியனை விரட்டாமலிருந்தால் யமுனைநதி நீரைக் குடித்து உயிரை விட்டிருப்பார்கள். யமுனை வற்றி விட்டதால் யமுனையிலும் நீர் இல்லை. அல்லது யமுனையில் விழுந்து உயிரை விட்டிருப்பார்கள். அதுவும் முடியவில்லை.

"கிருஷ்ணா! நீ கோவர்த்தன மலையை கையில் தூக்கிப் பிடித்தபோது சொர்க்கத்தையே தொட்டது. இன்று தரைக்குள் மூழ்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அவர்களால் மலையில்

இருந்து விழுந்தும் உயிரை விட முடியவில்லை. பகவானின் நாமத்தை முழுவதும் உச்சரித்துக் கொண்டிருப்பதால், அந்த அமிர்தத்தால் அவர்களால் சாக முடியவில்லை. உன் பிரிவால் காடுகள் தீப்பற்றி எரிகின்றன. அதில் விழுந்து தான் அவர்கள் உயிரை விட வேண்டும்", என்று நிலைமையை பலராமர் எடுத்துரைத்தார்.

## *பலராமரும் கிருஷ்ணரும் புரண்டு அழுதனர்*

இதைக் கேட்டதும் ஸ்ரீகிருஷ்ணர் பலராமரின் கழுத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கத்தி அழ ஆரம்பித்தார். இரண்டு பகவான்களும் தரையில் உருண்டு புரள ஆரம்பித்தனர். பக்கத்தில் நின்றிருந்த ரோகிணி, தேவகி, உத்தவர், ருக்மணி, சத்யபாமா அனைவரும் விக்கி அழ ஆரம்பித்தார்கள். அந்த இடம் துக்க களமாகி விட்டது.

அந்தபுரத்திலிருந்து வந்த அழுகைக் குரல்களைக் கேட்டு யாதவர்கள் அனைவரும் பயந்து விட்டனர். வசுதேவர், உக்கிரசேனர், யாதவர்கள் அனைவரும் அந்தப்புரத்திற்குள் ஓடி வந்தனர். கர்க முனிவர் பிராமணர்களுடன் ஓடி வந்தார். துவாரகை பிரஜைகளும் ஓடி வந்தார்கள். ஒரு நிலையில் யாருக்கும் என்ன செய்வது எனத் தெரியவில்லை. பகவான் ஸ்ரீகிருஷ்ணர் மயக்கம் போட்டு விழுந்து விட்டார்.

# அத்தியாயம் 7

## *மிகச்சிறந்த பக்தர்களின் சிகரம்*

பரீட்சித் மஹாராஜா, தன் அன்னை உத்தராவிடம் கூறுகிறார்: "ஓ அன்னையே, ஸ்ரீகிருஷ்ணர் மற்றும் அவரது குடும்பத்தினரின் அழுகுரல் அனைத்து பிரம்மாண்டங்களிலும் எதிரொலித்தது. விரும்பத் தகாத, துன்பத்திற்கு அறிகுறியான நட்சத்திரங்கள் வானில் தோன்ற ஆரம்பித்தன. கெட்ட சகுனங்களைக் கண்ட பிரம்ம தேவர் துவாரகாவிற்கு வந்தார். அவருடன் புராண, இதிகாசங்கள், வேதங்கள் ஸ்ருதி, ஸ்மிருதிகள் அனைத்தும் வந்தன. ஸ்ரீகிருஷ்ணரின் பிரேமை அனைத்தையும் உணர வைத்தது.

*தத்ராண்ய -போதகாபாவாத் ஸ்வயம் ஆகாக் சதுர் -முஹா*
*வ்ர்தோ வேத- புராணாத்யை:பரிவாரை:ஸுரைர் அபி*
*(ஸ்ரீ பிருஹத்பகவதாமிர்தம்:1.7.2)*

பிரம்மதேவர், தன் குருவும், தந்தையும், மகா நாராயணருமான ஸ்ரீகிருஷ்ணரின் நிலைமையைப் பார்க்க துவாரகாவிற்கு இறங்கி வந்தார். ஸ்ரீகிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமான கோபிகைகளின் பிரேமையால் பகவான் இந்த நிலைக்கு ஆளானார். பகவானின் இந்த நிலையைப் பார்த்து பிரம்ம தேவரும் துக்கத்தில் ஆழ்ந்து அழ ஆரம்பித்தார். பகவான் அழுது புரண்டு மயங்கிக் கிடப்பதை அவரால் பார்க்க சகிக்கவில்லை. திக்பிரமை பிடித்து அப்படியே நின்று அழுதார். அவரால் நிலமையை ஜீரணிக்க முடியவில்லை. பகவானை எவ்வாறு சுய நினைவுக்கு கொண்டு வருவது என நினைத்து ஏதோ செய்ய தீர்மானித்தார்.

வினதையின் மகனான கருட பகவான், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பக்கத்தில் நின்று அழுது கொண்டிருந்தார். பிரம்ம தேவர் கருடனை உரத்த குரலில் அழைத்தார். பின் பகவான் ஸ்ரீகிருஷ்ணரை எவ்வாறு சுய நினைவுக்கு கொண்டு வருவது என்பது பற்றி பேச ஆரம்பித்தார்.

"ஓ கருட பகவானே! துவாரகாவில் கடலுக்கும் ரைவத மலைக்கும் இடையில் ஒரு பிருந்தாவனம் விஸ்வகர்மாவால்

உருவாக்கப்பட்டுள்ளது. அங்கு விரஜவாசிகள், நந்த கோபர், யசோதா, மாடு மேய்க்கும் கோபர்களின் அனைவரின் சிற்பங்கள் தத்துல்யமாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த நவ விருந்தாவனம் மதுரா மண்டலத்தில் அமைந்துள்ள விருந்தாவனம் போலவே உள்ளது. நீ அங்கே கிருஷ்ணரையும், பலராமரையும் உன்மேல் கவனமாக தூக்கி வைத்துக் கொண்டு வர வேண்டும். ரோகிணி தேவியைத் தவிர யாரும் உடன் வரக்கூடாது" என்றார்.

கருடன் கிருஷ்ணரையும், பலராமரையும் அதே நிலையில் அப்படியே தூக்கிக் கொண்டு நவ விருந்தாவனத்திற்குப் பறந்தார். வசுதேவர் மற்றும் மற்ற யாதவர்களை அவரவர் இருப்பிடத்திற்கு செல்லுமாறு பிரம்மதேவர் பணித்தார். இப்போது பலராமருக்கு சற்று நினைவு திரும்ப ஆரம்பித்திருந்தது.

கருடன் மெதுவாக தன் முதுகில் கொண்டு சென்ற ஸ்ரீகிருஷ்ணரை புதிதாகக் கட்டப்பட்டுள்ள விருந்தாவனத்திற்கு கொண்டு சென்று, அங்கு ஒரு படுக்கையில் படுக்க வைத்தார். அங்கு விஸ்வகர்மாவால் சிருஷ்டிக்கப்பட்ட கோப, கோபிகைகளின் சிற்பங்கள் இருந்தன.

*ஸ்ரீ நந்த-நந்தனஸ் தத்ர பர்யங்கே ஸ்தாபித: ஷனை:*
*ஸாக்ஷாத் இவாவதிஸ் யத்ர தத் கோப- கோபிகா:*
*(ஸ்ரீ பிருஹத்பகவதாமிர்தம்: 1.7.12)*

## *கிருஷ்ணரை இந்த கோலத்தில் பார்த்தவர்களின் நிலை!*

தேவகி மாதா, ருக்மணி, சத்யபாமா உட்பட்ட ராணிகள் மற்றும் ஸ்ரீகிருஷ்ணரின் பாட்டி பத்மாவதி ஆகியோரால் ஸ்ரீகிருஷ்ணரின் இந்த நிலையைப் பார்த்து, அந்த இடத்தை விட்டு அகல இயலவில்லை. இருந்த போதிலும் பிரம்மதேவரின் வேண்டுகோளின் படி, அவர்கள் தூரத்தில் மறைந்து நின்று அங்கு நடப்பதை கவனித்தனர். தேவர்கள், யாதவர்கள் யாரையும் பக்கத்தில் செல்ல அனுமதிக்கவில்லை.

இவை அனைத்திற்கும் தானே காரணம் என நினைத்த நாரதர், மேகங்களுக்கிடையே யோக நிலையில் இருந்து பகவானின் இந்த அற்புதமான லீலைகளைப் பார்க்கலானார். கருடன் மேகங்களுக்குக் கீழே இருந்து, தன் இறக்கைகளை விரித்து நிழல் ஏற்படுத்திக் கொடுத்தார்.

இப்போது பலராமருக்கு சற்று நினைவு திரும்பியிருந்தது. பிரம்ம தேவரின் உள் நோக்கம் தெரிந்திருந்ததால், தன் தாமரை முகத்தை நீரால் கழுவி விட்டு, தன் இளைய சகோதரனின் தாமரை முகத்தை நீரால் கழுவினார். பின் கோபர்கள் மாடு மேய்க்க செல்லும் போது அணியும் அரை கச்சத்தையும் ஆடையையும் அணிவித்தார். ஒரு புல்லாங்குழலை கிருஷ்ணரின் இடுப்பில் சொருகினார். ஒரு ஊது கொம்பை வலது கையிலும், இடது கையில் ஒரு கம்பையும் கொடுத்தார். கடம்ப மலர்களால் ஆன மாலையை கழுத்தில் அணிவித்தார். குஞ்சாக் காடுகளில் உள்ள பூக்களால் காதணிகளை செய்து இரண்டு காதுகளிலும் மாட்டினார்.

*க்ஷிப்ரம் ஸ்வஸ் யானுஜாபி ஸமார்ஜியா வதனாம்புஜம்*
*வஸ்த்ரோதராந்தரே வம்சீம் ஸ்ருங்க - வெத்ரே ச ஹஸ்தயோ:*
*கந்தே கடம்ப - மாலாஸ் ச பார்ஹபீதம் ச மூர்த்தனி*
*நவம் குஞ்சாவதாம்சம் ச கர்ணயோர் நிததே சனை:*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.7.19,20)*

விஸ்வகர்மாவால் நேர்த்தியாக உருவாக்கப்பட்ட விருந்தாவனத்தில், பலராமர் உரத்த குரலில் கிருஷ்ணரை அழைக்கலானார். "ஓ, கிருஷ்ணா! பையா, எழுந்திரு! எழுந்திரு! இன்று நாம் மாடு மேய்க்க செல்ல மிகவும் தாமதமாகி விட்டோம்! பசுக்கள் தானாகவே காட்டுக்குள் செல்ல ஆரம்பிக்கின்றன. ஸ்ரீதாமாவால் வழி நடத்தக் கூடிய உனது தோழர்கள் உனக்காக காத்திருக்கிறார்கள். உன் தாயும், தந்தையும் உன்மீது கொண்ட அன்பினால் உன்னை எழுப்பவில்லை. உன்னுடைய தாமரை முகத்தைப் பார்த்து கோபிகைகள் தங்களுக்குள் ஏதோ கிசு கிசுக்கிறார்கள்" என்று பலராமர் பலமுறை அழைத்தார். அப்போதும் ஸ்ரீகிருஷ்ணர் எழுந்திருக்கவில்லை.

பின் பலராமர் கிருஷ்ணரின் கையைப் பிடித்துத் தூக்கி உட்கார வைத்தார். இப்போது மயக்கத்தில் இருந்து விழித்த கிருஷ்ணர் ஆச்சரியத்தில் 'சிவ, சிவ' என்றார்.

## *கிருஷ்ணரது செயல்!*

இப்போது கிருஷ்ணர் தன் தாமரைக் கண்களைத் திறந்து எல்லா திசைகளையும் பார்த்தார். அப்போது நந்தகோபர் (சிற்பம்) தன் முன் நிற்பதைப் பார்த்தார். அவருக்கு தனது பணிவான

மரியாதையை அளித்தார் (விரஜ பூமியில் கிருஷ்ணர் இருந்தபோது, ஒவ்வொரு நாளும் காலை எழுந்தவுடன் நந்தகோபருக்கு கை கூப்பி தலை தாழ்த்தி மரியாதை செய்வது வழக்கம்). பக்கத்தில் யசோதா மாதா தன்னுடைய தாமரை முகத்தை பார்த்தபடியே நிற்பதைக் கண்டார். ஆனால், யசோதாவின் கண்கள் இமைக்காமல் இருப்பதைப் பார்த்தார். (சில நேரங்களில் விரஜ கோபிகைகள் தன்னை மறந்து இமைக்காமல் நிற்பார்கள்)

## *அன்னையே, நான் ஓர் கனவு கண்டேன்!*

இப்போது பகவான் ஸ்ரீகிருஷ்ணர் யசோதாவிடம் (சிற்பம்) பேச ஆரம்பித்தார். "ஓ, அன்னையே, இன்று அதிகாலையில் நான் ஒரு வித்தியாசமான கனவு கண்டேன். அதனால் நான் கண் விழிக்க நேரமாயிற்று. நான் இங்கிருந்து மதுராபுரிக்கு சென்றது போலவும், அங்கு கொடிய அரசன் கம்சனைக் கொன்றது போலவும், ஜராசந்தன், நரகாசுரன் போன்ற அரக்கர்களைக் கொன்றது போலவும், அதனால் தேவர்கள் மகிழ்ச்சியடைந்தது போலவும் கனவு கண்டேன் அன்னையே!" என்றார்.

*மது-புர்யாம் இதோ கத்வா துஷ்டா கம்ஸாதயோ ஹத:*
*ஜராசந்தாதயோ பூபா நிர்ஜிதா சுகிதா: ஸுரா:*
*(ஸ்ரீ பிருஹத்பகவதாமிர்தம்: 1.7.30)*

ஸ்ரீகிருஷ்ணர் மேலும் பேசினார், "அது மட்டுமல்ல, ஒரு கடற்கரையில் பெரிய துவாரகாபுரி என்னும் நகரத்தை நான் உருவாக்கினேன். இன்னும் ஏராளமான கனவு கண்டேன். அதையெல்லாம் விளக்கமாகக் கூற இப்போது நேரமில்லை. மாடு மேய்க்க செல்ல நேரமாகிவிட்டது. கனவு கண்டதால் நீண்ட நேரம் தூங்கி விட்டேன் தாயே."

*அனீன ஸ்வப்ன - விக்னேன தீர்க்கேன ஸ்வாந்த - ஹாரினா*
*அன்ய - வாஸரா - வத் - கலே ஸயனாம் நோத்திதம் மயா*
*(ஸ்ரீ பிருஹத்பகவதாமிர்தம்: 1.7.32)*

ஸ்ரீகிருஷ்ணர் மேலும், "ஓ பலராமா நாம் காட்டிற்குள் மாடு மேய்க்க செல்லும்போது அந்த கனவு பற்றி விளக்கமாகக் கூறுகிறேன்" என்றார்.

*(பரீட்சித் மகாராஜா தன் தாயார் உத்தராவிடம் கூறுகிறார்)*

இப்போது கிருஷ்ணர் மாடு மேய்க்க செல்லும்போது மதிய உணவு கொண்டு போவாரே, அந்த உணவினை யசோதாவிடம் கேட்கிறார். இப்போது ரோகிணி மாதா புத்திசாலித்தனமாகப் பேச ஆரம்பித்தாள். "ஓ மகனே! இன்று நீ அதிக நேரம் தூங்கி விட்டதால், உன் தாயாருக்கு உடல் நிலை சரியில்லை. மாடுகளும் மாடு மேய்க்கும் சிறுவர்களும் காட்டிற்குள் சென்று விட்டார்கள். இப்போது நீ கிளம்பு. நான் முதல் தரமான உணவு சமைத்து உனக்கு கொடுத்தனுப்புகிறேன்" என்றாள்.

இந்த வார்த்தைகளை ரோகிணி மாதாவிடமிருந்து கேட்ட ஸ்ரீகிருஷ்ணர், தன் தாயாருக்கும் ரோகிணி மாதாவிற்கும் நமஸ்காரம் செய்து விட்டு தாயார் யசோதாவைப் பார்த்து சிரித்துக் கொண்டு, தன் தாயாரின் கைகளிலிருந்த வெண்ணெயை திருட்டுத் தனமாக எடுத்தார். பலராமரை அழைத்த கிருஷ்ணர், அவர் பசுக்களுடன் சென்று விட்டதைக் கண்டார். யசோதாவின் கையில் இருந்த வெண்ணையை கையில் எடுத்துக் கொண்டாரே தவிர, பலராமரையும், தோழர்களையும் அடையும் வரை அவர் உண்ணவில்லை. ரோகிணி மாதா கூறியதை அவர் அப்படியே நம்பிவிட்டார்.

வீடுகளின் வெளியே நிற்கும் கோபியர்களைப் பார்த்து பேசிவிட்டு, சந்திராவளியுடன் பரிகாசமாகப் பேசினார். ராதாராணி தன் சகிகளுடன் நிற்கிறார். அவரைப் பார்த்து வசீகரமாக சிரிக்கிறார். பின் ராதா ராணியிடம் பேசுகிறார்.

*ஸ்ரீ நந்த- நந்தனா உவாஸ --*
*ப்ராணேஸ்வரி ராஹா:--ப்ராப்தம் ஏகாகிநாம் ச மாம்*
*சம்பாசசே கதம் நாட்ய தத்தி ஹிம் வ்ர்த்தாஸி மானினீ*
*(ஸ்ரீ பிருகத்பகவதாமிர்தம்: 1.7.41)*

"ஓ, ப்ராணேஷ்வரி, என் ஆத்மாவை ஆட்கொண்டவளே! நீ என்னுடன் ஏன் பேச மாட்டேன் என்கிறாய்? நான் உனது பக்தன். நான் உன்னைக் காண தனியாக வந்திருக்கிறேன். ஏன் நீ கர்வத்துடன் நிற்கிறாய்? என் மீது கோபமா? நான் என்ன தவறு செய்தேன்? அதி அற்புதமானவளே! எனக்கு இன்று ஒரு கனவு வந்தது. அதனால் நான் தூக்கத்திலிருந்து தாமதமாக எழுந்தேன். அது உனக்குத் தெரியுமா?" என்று கிருஷ்ணர் கேட்டார்.

"அவருக்கு ராதா ராணியின் கோபத்தை எப்படி தணிப்பது

என்பது தான் பிரச்சினையாக இருந்தது. பிரேமையால் விரஜ கோபிகள் சில நேரங்களில் அப்படியே சிலை போல நின்று விடுவார்கள். இதை ஸ்ரீகிருஷ்ணரும் பார்த்திருக்கிறார். எனவே, அவர் பார்த்து பேசிக் கொண்டிருப்பது சிலையா அல்லது உண்மையிலேயே ராதா ராணியா என்பது கூட தெரியாமல் மேலும் பேசிக் கொண்டே வந்தார்.

"ஓ ராதே! கனவில் நான் உன்னை விட்டு வெகு தூரம் சென்று விட்டேன். அப்போது நான் ஏராளமான ராணிகளை திருமணம் செய்து கொண்டேன். அவர்கள் இறக்கப் போவதாக இருந்தார்கள். எனவே, நான் அவர்களைத் திருமணம் செய்து கொண்டேன். நிறைய குழந்தைகளும், பேரக் குழந்தைகளும் எனக்கு இருந்தனர்.

*த்வம் விஹாயான்யதோ கத்வா விவாஹா பஹவ: க்ர்தா:*
*தேஷாம் க்ஷிதிப்ப - புத்ரீனாம் உத்யதானாம் ம்ருத்திம் ப்ரதி*
*புத்ர - பௌத்ராயதாஸ் தத்ர ஜனித்தா தூர- வர்த்தினா*
*(ஸ்ரீ பிருஹத்பகவதாமிர்தம்: 1.7.43)*

"இப்போது நான் உடனே காட்டுக்கு செல்கிறேன். மாடு மேய்க்கும் சிறுவர்களுடன் செல்லாமல் நான் தனியாக வந்தேன். இன்று மாலை நான் உன்னுடன் இருப்பேன்" என்றார். பின் ராதாராணி மீது கை நிறைய பூக்களைத் தூவினார். ராதா ராணியின் சிலையை கட்டி அணைத்து முத்தமிட்டார்.

## *விரஜ பிரேமையுடன் கிருஷ்ணரைப் பார்ப்பவர்கள்*

விரஜ ஆடையுடனும், கையில் புல்லாங்குழலுடனும் ஸ்ரீகிருஷ்ணர் காட்டிற்குள் செல்வதைத் தூரத்தில் இருந்து பார்த்த தேவகிக்கு மார்பில் தாய்ப்பால் சுரந்தது. ருக்மணி, ஜாம்பவதி மற்றும் மற்ற ராணிகள் ஸ்ரீகிருஷ்ணரை இராஜ குமாரனாகத் தான் பார்த்திருக்கிறார்கள். இன்று தான் விரஜ கிருஷ்ணராகப் பார்க்கிறார்கள். அதனால் அவர்களுக்கு பிரேமை அதிகமாகி மயக்கமடைந்து ஒவ்வொருவராக கீழே விழுந்தனர்.

*ருக்மணி-ஜாம்பவதி -ஆதியா: புராணுதேன கர்ஹிசித்*
*மஹா - பிரேம்ணா கதா மோஹம் தைர்ய-ஹான்யாபதன்*
*க்சித்தௌ*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.7.47)*

பத்மாவதிக்கு விரஜ கிருஷ்ணரைப் பார்த்ததும் வில்லத்தனம் போய்விட்டது. பத்மாவதியும், சத்யபாமாவும் கைகளை விரித்துக் கொண்டு கிருஷ்ணரைக் கட்டிப் பிடித்து முத்தமிட வாய் அசைவுகளால் காட்டினர்.

சூரியதேவனின் மகளான யமுனாதேவி ஏற்கெனவே இந்தமாதிரி பார்த்திருக்கிறாள். துவாரகாவில் அவள் காளிந்தி. உத்தவரும், காளிந்தியும் சேர்ந்து சத்யபாமாவையும், பத்மாவதியையும் கிருஷ்ணரிடம் செல்ல விடாமல் இழுத்துப் பிடித்தனர். அப்போது கோவிந்தர் சமுத்திரத்தைப் பார்த்தார். அது யமுனா நதி என நினைத்துக் கொண்டு, தன் தோழர்களை யமுனை நீரில் விளையாட வருமாறு இனிமையான குரலில் கூவி அழைத்தார்.

"ஓ ஸ்ரீ தாமா, ஓ சுபாலா, ஓ அர்ஜுனா, ஓ தோழர்களே, எங்கே போகிறீர்கள்? எல்லோரும் சந்தோஷமாக இங்கே ஓடி வாருங்கள். முதலில் நம் பசுக்களை யமுனையில் தண்ணீர் குடிக்க வையுங்கள். அடுத்து நாம் இங்கு சந்தோஷமாகக் குளிக்கலாம். இனிமையான, சுத்தமான, குளிர்ந்த யமுனை நதியில் விளையாடி மகிழ்வோம்" எனக் கூறி பெரும் அலைகளுடனிருக்கும் அந்த சமுத்திரத்திற்கு பசுக்களை அழைத்து வருமாறு கூறினார். (யமுனையும் கறுப்பு நிறம் - கடலும் கறுப்பு நிறம்).

## *பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மனக்குழப்பம்*

சமுத்திரத்தில், யமுனையை விட அலைகள் அதிகமாக இருந்ததால் கிருஷ்ணருக்கு சந்தேகம் வந்தது. எல்லாத் திசைகளையும் சுற்றிப் பார்த்தார். அங்கு பிரம்மாண்டமான துவாரகையைக் கண்டார். அவருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. விரஜ பூமியில் இந்த கடல் எப்படி வந்தது? நான் எப்படி இங்கு வந்தேன்? நான் யார்? இது விரஜ பூமியா? இல்லையா? நான் நந்த கோபரின் மகனா? துவாரகையில் எப்படி விரஜ பூமியில் உள்ள ஆடை வந்தது? நான் விரஜவாசியா அல்லது துவாரக வாசியா எனக் குழம்பினார். இவ்வாறு கிருஷ்ணர் குழப்பத்தில் இருக்கும்போது பலராமர் பேச ஆரம்பித்தார்.

## *நீ வைகுண்ட வாசனே!*

பலராமர் கிருஷ்ணரிடம், "ஓ வைகுண்ட வாசனே,

தேவர்கள் உங்களிடம் வந்து அசுரர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்ட வேண்டினார்களே! பூமியின் பாரத்தைத் தீர்க்க வருவதாக பூமித்தாயிடம் கூறினாயே! அதை மறந்து விட்டாயா? நீ யார் என்பதை நினைத்துப் பார். நீ இங்கு வந்திருக்கும் காரணம் அசுரர்களை அழிக்கவே. அது மட்டுமன்றி உன் அத்தை மகன் யதிஷ்டிரர் யக்ஜம் செய்ய ஆசைப்படுகிறார். அதற்கு உதவி செய்ய வேண்டியதும் உன் வேலையே. மேலும் யுதிஷ்டிர மகாராஜாவுக்கு ஏராளமான எதிரிகள் இருக்கிறார்கள். நீ சால்வனைக் கொன்று விட்டாய்! ஆனால் சால்வனின் சகோதரன் ஏராளமான அரசர்களுடன் சேர்ந்து யுதிஷ்டிர மகாராஜாவுக்கு தொந்தரவு கொடுக்கிறான். யதுக்களின் உதவியுடன் யுதிஷ்டிரரின் எதிரிகளை அழித்து உன் பக்தர்களைக் காப்பாற்று" என்று கூறினார்.

பலராமர், கிருஷ்ணரின் மனநிலையை மாற்றப் பார்த்தார். யுதிஷ்டிரரிடம் செல்லுமாறு கூறியதும், பகவான் மிகவும் கோபம் கொண்டார். "ஓ அண்ணா, பலராமா! சால்வனின் சகோதரனுடன் சேர்ந்து யுதிஷ்டிரரை எதிர்க்கும் அந்த எதிரிகள் யார்? உடனடியாகச் சொல். அவர்களை இப்போதே தனியாக சென்று அழித்து விடுகிறேன்" என்றார்.

## *துவாரகையின் அரசன்!*

இப்போது ஸ்ரீகிருஷ்ணர் சுற்றும் முற்றும் பார்த்தார். தன்னை துவாரகையின் அரசனாகவும் யாதவர்களின் தலைவனாகவும் கண்டார். துவாரகை அரண்மனையில் அவர் தூக்கத்தில் இருந்தது இப்போது நினைவுக்கு வந்தது. தனது விரஜ ஆடையையும், புல்லாங்குழலையும் பார்த்தார். 'துவாரகை கடற்கரையில் மாடு மேய்கிறதா?' என சிரித்தார். பலராமர் நடந்தது அனைத்தையும் விளக்கினார். பிரம்மாவின் ஆலோசனைப் படி அனைத்தும் நடந்ததாகக் கூறினார். பின்னர் பலராமர் ஸ்ரீகிருஷ்ணரின் கை கால்களில் இருந்த அழுக்குகளைக் கடல் நீரில் கழுவினார்.

இப்போது பகவானின் மனதை அறிந்த கருடன் வந்து தன்னுடைய முதுகில் பகவானை சுமந்து துவாரகை சென்றார். உத்தவருடன் தேவகி மாதா உட்பட ராணிகள் அனைவரும் அரண்மனைக்குள் சென்றனர். தன்னுடைய மகனை அன்புடன் வரவேற்ற தேவகி மாதா, அனைவருக்கும் உணவு தயாரிக்க சென்றாள். பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ராணிகள் ஆங்ககாங்கே

தூண்களுக்குப் பின்னால் வெட்கத்தால் மறைந்து நின்று கொண்டிருந்தனர். சத்யபாமா மட்டும் அங்கு வரவே இல்லை. ஸ்ரீகிருஷ்ணர் உத்தவரிடம் 'சத்யபாமா எங்கே? அவள் மட்டும் வரவில்லை' என்று கேட்டார்.

இப்போது உத்தவர் ஸ்ரீகிருஷ்ணரிடம் பேசலானார், "ஓ பிரபு! நீங்கள் துவாரகை கடலுக்கும், ரைவத மலைக்கும் இடையில் அமைக்கப்பட்ட அந்த நவ விருந்தாவனத்திற்கு போனீர்களே, அப்போது பட்டத்து ராணிகளுடன் பத்மாவதியும் இருந்தாள். அங்கு நீங்கள் யசோதா, நந்த கோபர், விரஜவாசிகளுடன் நடந்து கொண்டதைப் பார்த்து திக்பிரமை பிடித்து நின்று விட்டனர். அந்த பிரேம ரஸத்தை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. விரஜ வாசிகளின் மீதுள்ள பிரேமை, ஏக்கம் அனைத்தையும் விரஜ வாசிகளின் சிற்பம் மீது காட்டினீர்கள். அதை பத்மாவதி தவறாக புரிந்து கொண்டாள். எனவே அவள் தேவகி மாதா மற்றும் அரசிகளை கண்டபடி திட்டினாள்.

"'புண்ணியம் செய்யாததால் தேவகி உனக்கு இப்படி ஒரு பையன் பிறந்திருக்கிறான். ஆனால், யசோதா எத்தனை பாக்கியம் உடையவள். அதிஷ்டமில்லாத ருக்மணி, முட்டாள் சத்யபாமா, நீங்கள் அனைவரும் பாக்கியம் இல்லாதவர்கள். கிருஷ்ணரின் இதயத்தில் நீங்கள் இல்லை! அவன் இதயத்தில் கோபிகைகள் தான் இருக்கிறார்கள். நீங்கள் ஏமாந்து விட்டீர்கள். நீங்கள் இனி வாழவே தேவையில்லை' என்று பத்மாவதி கூறினாள். அதனால் தான் ராணிகள் ஆங்காங்கே மறைந்து நிற்கின்றனர். சத்யபாமா வரவில்லை" என்றார்.

## *தேவகியின் தவமும் -யசோதா வின் தவமும்!*

பத்மாவதி பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்த தேவகி கோபத்துடன் பேசலானாள்: "முட்டாள் பெண்ணே! நான் எனது முந்தைய பிறவியில் வாசுதேவ கிருஷ்ணரிடம் 'நீயே எனக்குக் குழந்தையாக வரவேண்டும்' என தவம் செய்தேன். எனவே, வாசுதேவ கிருஷ்ணர் எனக்குக் குழந்தையாக பிறந்தார்.

"ஆனால், யசோதாவும் நந்தகோபரும் பிரம்மதேவரை நோக்கி தவம் செய்து, பகவான் லீலைகளில் பங்கேற்க வேண்டும் என்றும் பக்தி சேவை செய்ய வேண்டும் என்றும் கேட்டனர். அதனால் அவர்களுக்கு அந்த பாக்கியம் கிடைத்தது."

*ஆஸ்சர்யம் அத்ர கிம் முர்க்கே பூர்வ - ஜென்மானி யத் தப :*
*ஸமம் ஸ்ரீ - வாசுதேவேன மயாகாரி ஸுதாயா தத்*
*அதோ அயம் ஆவயோ:ப்ராப்த: புத்ரதாம் வர-தேஸ்வரா :*
*அஸ்மின் நந்த - யஷோதாப்யாம் பக்தி:ஸம்ப்ரார்த்திதா விதிம்*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1. 7.77,78)*

பிரம்மதேவர் பகவானின் சிறந்த பக்தர். பகவான் பக்த வச்சலன் என்பதால் பக்தர்களுக்காக இரங்குகிறார். யசோதாவும் நந்தகோபரும் பகவான் மீது கொண்ட பிரேம பக்தி தனக்கு மிகவும் பிடித்திருப்பதாக தேவகி மாதா கூறினாள்.

## *கோபிகைகளுக்கு பரிந்து பேசும் ருக்மணிதேவி!*

பகவான் கிருஷ்ணரின் கருணைக்குப் பாத்திரமானவர்கள் விரஜ கோபிகள், என்று கோபியர்களுக்கு பரிந்து பேசினாள் ருக்மணி. "அந்த கோபிகள், கணவர் குழந்தைகள் உட்பட அனைத்தையும் ஸ்ரீகிருஷ்ணருக்காக விட்டு விட்டனர். கிருஷ்ணரை திருப்திப் படுத்துவதை மட்டுமே இலக்காகக் கொண்டிருந்தார்கள். அதனை நம்மால் விவரிக்க முடியாது. ரஸலீலை போன்ற லீலைகளால் பகவான் கிருஷ்ணரை மொத்தமாகத் திருப்திப் படுத்தினர். இது பராக்கிய ரஸம்.

"ஆனால், நாங்கள் கிருஷ்ணரை விரும்பி திருமணம் செய்து, குழந்தைகளையும், பேரக் குழந்தைகளையும் திருப்திப் படுத்துவதிலேயே எங்கள் அன்பைக் கொடுக்கிறோம். சுவக்கிய ரஸம் அவர்களிடம் இல்லை. ப்ராக்கிய ரஸம் அவர்களிடம் உள்ளது. ஒரே மூச்சாக பகவானை மட்டுமே திருப்திப் படுத்தினார்கள். அவர்களுக்கு எதையும் திருப்பிக் கொடுக்க முடியவில்லையே என பகவான் ஏங்குகிறார். பகவானுக்கு இன்பத்தைக் கொடுக்கக் கூடிய ஆடைகளை அணிந்து கொண்டு குஞ்சாக் காடுகளில் பகவானைத் திருப்திப் படுத்தினார்கள்.

"பகவான் கோபிகளுடன் கொண்ட அன்பு எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. நாங்கள் தீவிரமாக பக்தி சாதகங்கள் செய்து மட்டுமே பகவானை அடைய முயற்சி செய்ய வேண்டும். ஆனால், அவர்களது மனம் ஸ்ரீகிருஷ்ணரிடமே லயித்து விட்டது. அவர்கள், வழிபாடு, சாதகம், பக்தி, பிரேமை அனைத்தையும் அவருக்கே கொடுத்தனர்" என்றாள்.

## சாதுக்களால் கூட செய்ய முடியாத பிரேமை

கோபிகைகள் பகவானிடம் வைத்திருக்கும் பிரேமை அசாத்தியமானது. அவர்கள் வைத்திருக்கும் பிரேம பக்தி சாதுக்களால் கூட செய்ய முடியாது. ஸ்ரீகிருஷ்ணர் அவர்களுக்காக ஏங்குகிறாரே! அது மிகவும் சரியானது. துவாரகாவின் ராணிகளுக்கு குழந்தைகள், பேரக் குழந்தைகள் என ஏராளமான விஷயங்கள் உள்ளன. ஸ்ரீகிருஷ்ணரே ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கடமையை செய்கிறார்.

ருக்மணி தேவி தொடர்ந்தாள்: "நாங்கள் பந்தப்பட்டவர்கள். கோபியர்கள் மீது நாங்கள் பொறாமைப்படக் கூடாது. நாங்கள் ஸ்ரீகிருஷ்ணரை கணவராக, எஜமானராக மரியாதையோடு நடத்துகிறோம். ஆனால், விரஜ கோபிகள் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எதையும் நினைத்துக் கூட பார்க்க வில்லை. பிரேமை மட்டுமே கோபிகைகளிடம் இருந்தது. தகாத நேரத்தில் கிருஷ்ணர் அழைக்கும்போது கூட சத்தம் போடாமல், மாமனார், மாமியார் மற்றும் கணவர்களை விட்டு விட்டு, ஆபரணங்களை மாற்றி மாற்றி அணிந்து கொண்டு, அவசரத்தில் ஒரு கண்ணுக்கு மை தீட்டியும், இன்னொரு கண்ணுக்கு மை தீட்டாமலும் ஓடிப் போவார்கள்."

## சத்யபாமாவின் கோபம்!

ருக்மணி தேவி கூறியதைக் கேட்ட பகவானின் மகாராணியான சாம்பவதி போன்ற அனைத்து மகாராணிகளும் ஒப்புக்கொண்டனர். ஆனால், சத்ரஜித்தின் மகளான சத்யபாமாவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, கோபமுடனும், பொறாமையுடனும் தன் அரண்மனைக்குள் சென்று விட்டாள். கோபிகைகளின் சிற்பங்களுடன் ஸ்ரீகிருஷ்ணர் செய்த லீலைகளை பார்த்த சத்யபாமா தரையில் புரண்டு அழுதாள். உடனே ஸ்ரீகிருஷ்ணர், பணிப்பெண்ணை அனுப்பி சத்யபாமாவை அழைத்து வருமாறு பணித்தார்.

பின் அவர் சத்யபாமாவிடம், "குறுகிய புத்தியுடைய சத்யபாமா! முன்பு ருக்மணி தேவிக்கு பாரிஜாத மலர் கிடைத்தபோது பொறாமையுடன் சண்டை போட்டாய்! இப்போது விரஜ கோபிகளிடம் கோபம் கொள்கிறாய்" என கண்டித்தார்.

'விரஜவாசிகள் என்னிடம் கொண்டுள்ள பிரேம பக்திக்கு ஈடாக அவர்களுக்குக் கொடுக்க என்னிடம் எதுவும் இல்லை' என்றும், 'அவர்களுக்கு என்றென்றும் கடனாளியாக இருக்கிறேன்' என்றும் கூறுகிறார் பகவான். பிரம்ம தேவரின் பிராத்தனையின் போது பகவான் இதைக் குறிப்பிடுகிறார்.

*ஸ்துவதா ப்ரம்மணோக்தம் யத் வ்ர்தா -வாக்யம் ந தன் ம்ர்ஷா*
*தேஷாம் பிரத்யுப காரே அஹம் அஸத்தோ அதோ மஹா -ர்ணீ*
*(ஸ்ரீ பிருஹத் பகவதாமிர்தம்: 1.7.93)*

## *விரஜகோபிகளின் கிருஷ்ண பிரேமை எத்தகையது?*

ஸ்ரீகிருஷ்ணர் மேலும் கூறினார்: "நான் இப்போது விரஜ பூமிக்கு சென்று அங்கு வசித்தாலும் அவர்கள் திருப்தி அடைய மாட்டார்கள். நான் எப்போது பிரிந்து விடுவேனோ என்ற கவலையில் தான் அவர்கள் இருப்பார்கள். அவர்கள் இப்போது ஜட உடல் தேவைகளைக் கூட மறந்து விட்டார்கள். நான் விரஜ பூமிக்கு சென்று வசித்தாலும், அங்கு சென்று லீலைகள் புரிந்தாலும் கூட, நான் எப்போது பிரிந்து விடுவேனோ என்னும் துயரத்தில் அவர்களுடைய நிலை இன்னமும் மோசமாகி விடும். அந்த துயரம் இரு மடங்காகி விடும்.

"அந்த விரஜவாசிகளின் பிரேமை எத்தகையது தெரியுமா? அடர்ந்த கார் மேகங்களைப் பார்த்தாலும், கார் மேக வண்ணத்தில் உள்ள தமால மரத்தைப் பார்த்தாலும், என்னுடைய சியாம நிறத்தை நினைத்து கட்டிப் பிடித்து முத்தமிடுகின்றனர். நான் அங்கு செல்வது என்பது கொதிக்கிற எண்ணையில் தண்ணீரை ஊற்றுவது போன்றது. அவர்களது இதயங்கள் வெடித்து சிதறுவதை என்னால் பார்க்க இயலாது.

"விரஜ கோபிகள் இப்போது "மகாபாவம்" என்னும் உச்ச கட்டமான பிரேம நிலைக்கு வந்து விட்டார்கள். இந்த மகாபாவம் யசோதைக்கோ, நந்த கோபருக்கோ கூட கிடையாது. பிருந்தாவன கோபிகளுக்கு மட்டுமே அது உண்டு." இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணர் கூறினார்.

## *துவாரகையின் ராணிகள்*

துவாரகையில் ஸ்ரீகிருஷ்ணர் 16,108 ராணிகளை திருமணம் செய்து கொண்டார். அவர் கம்சனை அழிக்க மதுராவிற்கு வந்தார். அப்போது அவர் அந்த ராணிகளை திருமணம் செய்ய விரும்பவில்லை. ஆனால் அவர்களைக் காப்பாற்ற திருமணம் செய்ய வேண்டியிருந்தது. ருக்மணி தேவி ஒரு பிராமணர் மூலம் ஸ்ரீகிருஷ்ணருக்குக் கடிதம் எழுதி அனுப்பினார். அவளை கொடிய அரசன் சிசுபாலனிடமிருந்து காப்பாற்ற வேண்டியிருந்தது. எனவே, திருமணம் செய்து கொண்டார்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார்: "நான் நேரடியாக ருக்மணி தேவியைப் பார்த்த போது கோபிகைகளின் நினைவு இன்னும் அதிகரித்து வலியைக் கொடுத்தது. ஏனெனில், ருக்மணிக்கும் கோபிகைகளுக்கும் சில விஷயங்களில் ஒற்றுமை இருந்தது. அது மட்டுமன்றி நீங்களும் 16,108 கோபிகளைப் போல கார்த்தியாயினி விரதம் இருந்தீர்கள். என்னுடைய தெய்வீக இன்பங்களும் மகிமைகளும் விரஜ பூமிக்கு மட்டும் தான் பொருந்தும்".

## *விரஜபூமியும் - பகவானின் லீலைகளும்!*

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் விரஜபூமியில் இருக்கும்போது ஏராளமான லீலைகள் செய்தார். சிறு வயதிலேயே விரஜ பூமியில் ஏராளமான அசுரர்களைக் கொன்றார். கிரி ராஜா கோவர்த்தன மலையை தனது இடது கை சுண்டு விரலால் தூக்கினார். பகவான் அந்த மாதிரி லீலைகளை செய்யும் போது, பிரம்ம தேவர் மற்றும் அனைத்து தேவர்களும் போற்றினார்கள். விரஜவாசிகளைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது? பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தனது அழகாலும், புல்லாங்குழலின் தெய்வீக ஒலியாலும் விரஜ வாசிகளுக்குப் பிரேமையைக் கொடுத்தார்.

விரஜாவில் கிருஷ்ணரின் அழகு பிரபஞ்சத்தையே அழகு படுத்தியது. அசைவது, அசையாதன அனைத்தும் அவரது அழகில் மயங்கி நின்றன. அவரது அமிர்தம் போன்ற புல்லாங்குழல் ஒலி விரஜாவைக் கவர்ந்து இழுத்தது. அண்ட சராசரங்களும் பகவானின் அழகையும், ஆடையையும், புல்லாங்குழல்

ஓசையையும் கேட்டு மயங்கி நின்றன. விரஜபூமியில் ஸ்ரீகிருஷ்ணர் பிரேமையில் இருந்தார். பிரேமையை ரசித்து அனுபவித்தார்.

*ரூபேண வேஷேன ரவாமிர்த்தேன*
*வம்ஸ்யாஸ் ச பூர்வானு தித்தேன விஸ்வம்*
*சம்மோஹிதம் பிரேம பரேண க்ரித்னாம்*
*திஸ்தானு தூரே விரஜ வாஸினஸ் தே*
*(ஸ்ரீ பிருகத் பகவதாமிர்தம்: 1.7.110)*

பிரம்மதேவர், இந்திரன், சந்திரன் போன்ற தேவர்களும் சித்தர்களும் மேலே இருந்து பகவானின் லீலைகளைப் பார்க்கும் போது அவர்களுக்கும் பிரேம பக்தி எழுந்தது. அதுபோல பசுக்கள், கன்றுகள், மான்கள், மரங்கள், பறவைகள், புல் பூண்டுகள், செடிகொடிகள், நதிகள், மேகங்கள் போன்றவற்றிலும் பிரேமை பாய்ந்தது.

"இதெல்லாம் உண்மையா? என்பதை காளிந்தியிடம் கேட்டுப் பார். காளிந்தி தான் யமுனா. எமராஜனின் சகோதரியான யமுனா தான் நான் கூறியவற்றிற்கு சாட்சி" என்று பகவான் கூறினார்.

## *ராகானுக பிரேமையை இங்கு உருவாக்க முடியாது!*

ராகானுக பிரேமையை இங்கு தன்னால் உருவாக்க முடியாது என்றார் பகவான். "நான் அங்கு நடத்திய லீலைகளை இங்கு எனது உறவினரான யாதவர்களிடம் சுதந்திரமாக செய்ய முடியவில்லை. ஏனென்றால், நான் இங்கு ராஜாவாக இருக்கிறேன். ஆயுதங்களை வைத்து சத்திரியனாக போருக்குப் போகிறேன். அங்கு வைசியராக இருந்து மாடு மேய்த்தேன். விரஜ பூமியில் நான் உருவாக்கிய ராகானுக பிரேமையை என்னால் இங்கு உருவாக்க முடியவில்லை. விரஜ பூமியில் புல்லாங்குழலை ஊதி எளிதாக கோபிகளின் கோபத்தை நீக்கி விடுவேன். ஆனால், இங்கு என் புல்லாங்குழலால் கூட உங்கள் கர்வத்தைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே, புல்லாங்குழலை ஒதுக்கி வைத்து விட்டேன்" என்றார்.

## விரஜலீலைகளை சுகதேவரால் கொஞ்சம் பேச முடியும்!

விரஜபூமியில் பகவான் செய்த லீலைகளில் சிறிதளவை மட்டுமே வியாசதேவரின் மகனான சுகதேவ கோஸ்வாமியால் பேச முடியும். அவர் பகவானுக்கு மிகவும் பிரியமானவர். ஏனென்றால், விரஜவாசிகளின் பிரேம பக்தியில் அவரும் இருக்கிறார். மேலும், அவர் பகவானின் விரஜ லீலைகளை, விரஜ பிரேமையில் இருக்கும் பரீட்சித் மகாராஜாவிற்கு மட்டுமே கூற முடியும். பரீட்சித், சுகதேவ கோஸ்வாமியின் மரியாதைக்குரிய சீடன் மட்டுமன்றி தாயார் உத்தராவின் கர்ப்பதிலிருந்து பகவானால் பாதுகாக்கப்பட்டவர்.

*ஏகா: ச மே தத்- வ்ரஜ - லோக - வத் ப்ரிய*
*ஸ்தாத்ரின் - மஹா -ப்ரேமா - பர-ப்ரபாவதா:*
*வக்ஷ்யதி அத: கிஞ்சனபாதராயணீர்,*
*மஜ் - ஜீவிதே சிஷ்ய - வரே ஸ்வ - சன்னிபே*
*(ஸ்ரீ பிருஹத்பகவதாமிர்தம்: 1.7.117)*

எனவே, பகவானின் விரஜ லீலைகள் இந்த உலகிற்கு வெளிவரக் காரணமாக இருந்தவர்கள் சுகதேவ கோஸ்வாமி மற்றும் பரீட்சித் மஹாராஜா ஆவார்கள்.

## உத்தவரின் செயல்

இப்போது, தான் கஷ்டப்பட்டு ஸ்ரீகிருஷ்ணரையும் பலராமரையும் நவ விருந்தாவனத்திற்கு கொண்டு போய் காப்பாற்றி வந்திருக்கிறோம் என்று நினைத்த உத்தவர், இதற்கு மேல் ஸ்ரீகிருஷ்ணரை பேச விடாமல் ராணிகளிடம் சைகையில் ஏதோ கூறினார். உடனே ராணிகள் அனைவரும் வந்து ஸ்ரீகிருஷ்ணரின் பாதத்தில் தலை வைத்து வணங்கினர். தேவகி மாதாவையும், ரோகிணி மாதாவையும் உணவு கொண்டு வருமாறு உத்தவர் கூறினார். பின் பலராமரை அழைத்து நாரதர் வந்திருக்கும் செய்தியை ஸ்ரீகிருஷ்ணருக்கு கூற வைத்தார்.

## நாரதரின் தயக்கம்

நாரதர், இத்தனைப் பிரச்சினைகளுக்கும் தான் காரணமாகி விட்டோமே என்ற பயத்திலும், தயக்கத்திலும்

வெளியே நின்று விட்டார். பலராமர், நாரதர் வந்து வெளியே நிற்கும் செய்தியை ஸ்ரீகிருஷ்ணரிடம் கூறியதும், "நாரதர் ஏன் வெளியே நிற்கிறார்? என்னிடம் ஏன் வரவில்லை? யார் தடுத்தது?" என்று கேட்டார்.

உடனே உத்தவர் சிரித்துக் கொண்டே, "அவர் பயந்து விட்டார். எனவே, அவர் உள்ளே வராமல் வெளியே நின்று விட்டார்" என்றார். ஸ்ரீகிருஷ்ணரே நேரடியாக சென்று நாரதரை அழைத்து வந்தார். பின் ஸ்ரீகிருஷ்ணர், "நாரதர் எப்போதும் எனக்கு பயப்படுவதில்லையே" என்றார். உடனே உத்தவர், "பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர் யார்? என பிரபஞ்சம் முழுவதையும் சுற்றி ஒரு பிரச்சினையை உண்டாக்கி விட்டாரே!" என்றார்.

## *நாரதா! நீ என் நலத்தை விரும்புபவர்!*

பகவான் ஸ்ரீகிருஷ்ணர், "ஓ நண்பரே, நாரதா! என்னைத் திருப்திப் படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்ட நீங்கள் இப்போது எனக்கு ஒரு பெரிய உதவி செய்திருக்கிறீர்கள். நீ என் நலத்தை விரும்புகிறவர். நெருப்பின் தகிப்பு நமக்கு வேதனையைக் கொடுக்கும். அதுபோல, அன்பான காதலர்கள் பிரிக்கப்படும் போது துன்பப்படுவார்கள். அதுபோல நானும் துன்பப்பட்டேன். நான் எல்லாவற்றையும் தொலைத்தது போல கஷ்டப்படுகிறேன்" என்று கூறினார்.

அதற்கு நாரதர், "உங்களுக்கு இப்படி ஒரு கஷ்டத்தை நான் கொடுத்து விட்டேனே!" எனக் கூறி கண் கலங்கி நின்றார்.

அதற்கு பகவான், "பிரிவாற்றாமையால் இந்த மாதிரி சோகம் இருக்கும். இது பிரேமையின் தாக்கம். பிரேமை தீவிரமாக இருக்கும்போது துக்கமும் தீவிரமாக இருக்கும். யார் ஒருவர் தான் விரும்புபவர்களை ஞாபகப்படுத்தி விடுவார்களோ, அவர்கள் தான் உண்மையான நலம் விரும்பி! நீங்கள் அதை செய்திருக்கிறீர்கள்! நாரதா, நீங்கள்தான் என் உயிர் நண்பன், நலம் விரும்பி!" என்றார்.

மேலும், "தேவர்களில் சிறந்த நாரத முனிவரே, இப்போது நீங்கள் எனக்கு மிகவும் நன்மை செய்திருக்கிறீர்கள். நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனவே, நீங்கள் விரும்பிய வரத்தைக் கேளுங்கள்" என்று பகவான் கூறினார்.

(பரீட்சித் மகாராஜா தன் தாயாருக்கு நாரதரின் செயலை கூறுகிறார்)

பகவான் கூறியதைக் கேட்ட நாரத முனிவர் "ஜய, ஜய" என முழக்கமிட்டபடி, விரஜ லீலைகளில் வெளிப்பட்ட பகவானின் நாமங்களைத் தன் வீணையை மீட்டி கீர்த்தனை செய்தார்.

பரிக்ஷித் மகாராஜ் கூறினார்: "ஓ, அன்னையே, முனிவர்களில் சிறந்த நாரதர், பிரயாகையில் உள்ள தசாஸ்வமேத என்ற புனித தலத்திலிருந்து துவாரகாபுரி வரை பயணம் செய்து அனைத்து பக்தர்களுடனும் பேசியிருந்தார். அந்த பக்தர்கள் அனைவரும் பகவான் கருணையால் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டனர். நாரதருக்கு இது தெரிந்திருந்தாலும் பகவானின் உதடுகளிலிருந்து நேரடியாகக் கேட்க விரும்பினார்.

எனவே அவர் பகவானிடம் "ஓ ஸ்ரீகிருஷ்ண சந்திரரே! ஆனந்தத்தின் உருவமே, உமது தெய்வீக கருணையாலும், பக்தியாலும், மற்றும் பிரேமையாலும் எவரும் ஒருபோதும் திருப்தியடையக் கூடாது என்பதற்காக இந்த வரத்தை உம்மிடம் கேட்கிறேன்" என்றார். உடனே பகவான் கிருஷ்ணர், "ஓ, நாரதா! தந்திரமானவர்களிலேயே மணிமகுடம் போன்றவர் நீர்! என்ன மாதிரியான வரத்தை நீர் கேட்டிருக்கிறீர்கள்? எனது கருணை, பக்தி, பிரேமையின் இயல்பு அனைவருக்கும் தெரியுமே!" என்றார்.

## *பக்தியின் தரத்தில் வேறுபாடு*

மேலும் பகவான், "ஓ, சாதுக்களில் சிறந்தவரே! பிரயாகையிலிருந்து இங்கு நீர் வந்து சேரும் வரை, கண்ட மற்றும் கேட்ட அனைத்து பக்தர்களும் முழுமையான பூரணத்துவத்தை அடைந்தவர்கள் தான். அவர்கள் எனது கருணைக்கு பாத்திரமானவர்கள். இருப்பினும், அவர்களின் பக்தியின் தரத்தில் வேறுபாடு உள்ளது" என்றார்.

## *நாரதர் பெற்ற வரங்கள் !*

இதைக்கேட்ட நாரதர் ஆனந்தத்துடன் நடனமாடினார். பின்னர் அவர் பகவானிடம், "இன்று என்னுடைய பணி வெற்றிகரமாக முடிந்தது. ஏனென்றால், உமது கருணைக்குப் பாத்திரமான அனைத்து பக்தர்களையும் நான் பாராட்டினேன். பகவானே, நீங்கள் என்மீது கொண்ட அசாதாரணமான கருணையால் நீங்கள் கொடுக்கும் வரங்களை பெற்றுக் கொள்கிறேன்" என்றார்.

## *நாரதர் கேட்ட முதல் வரம்:*

நாரதர் முதல் வரத்தைக் கேட்டார்:

*பாயம் பாயம் வ்ரஜ- ஜன- கண - பிரேமவாபி மரால*
*ஶ்ரீமான் - நாமாம்ருதம் அவிரதாம் கோகுலாப்தி*
*தத்-தத்-வேஷசரிதா -நிகரோஜ்ரம்பிதம் மிஸ்தம்- மிஸ்தம்*
*ஸர்வலோகான் ஜகதி ராமாயன் மத்த ஸிஸ்தோ*
*(ஶ்ரீ பிருகத் பகவதாமிர்தம்: 1.7.143)*

"ஓ, ராஜ ஹம்ஸமே, விரஜவாசிகளின் தெய்வீக அன்பு என்னும் நதியில் நீந்துபவரே, கோகுலத்தில் இடையர் சிறுவனின் உடையணிந்து, உமது தெய்வீக லீலைகளால் வெளிப்படும் திருநாமங்களின் அமிர்தத்தை எப்போதும் ஆனந்தமாகப் பருகி, உங்கள் திருநாமங்களால் அனைவரையும் மகிழ்வித்து நான் எங்கும் அலைந்து திரிய வேண்டும்".

## *நாரதர் கேட்ட இரண்டாவது வரம்:*

அடுத்து நாரதர் இரண்டாவது வரத்தைக் கேட்டார்.

*த்வதீயாஸ் தா: க்ரீதா: சாக்ர்த் அபி புவோ வாபி வாஸசா*
*ஹ்ருதா ஸ்ருத்யாங்கைர் வா ஸ்புர்ஷதி க்ருதா-தி: கச்சித் அபி யா:*
*ச நித்யம் ஶ்ரீ-கோபி-குச-குலச-கஷ்மீர-விலாஸத்-*
*த்வதீயாங்கிரி-த்வந்த்வே கலயது-தரம்-பிரேம-பஜனம்*
*(ஶ்ரீபிருஹத் பகவதாமிர்தம்: 1.7.144)*

"யாரெல்லாம் விரஜ பூமியில் நடந்த லீலைகளை வாயால் பேசுகிறார்களோ, யார் தங்கள் காதுகளால் கேட்கிறார்களோ, யார் தனது மனத்தால் இதயத்துக்குள் வாங்கிக் கொள்கிறார்களோ, யார் நீங்கள் லீலை செய்த இடத்தைத் தொடுகிறார்களோ அவர்களுக்கு பிருந்தாவனக் கோபிகள் குங்குமத்தால் அலங்காரம் செய்யும் உங்கள் தாமரைப் பாதங்களுக்கு சேவை செய்யும் பாக்கியம் கிடைக்க வேண்டும்."

நாரத முனிவர் கேட்ட இரண்டு வரங்களைக் கேட்ட பகவான் ஶ்ரீகிருஷ்ணர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தன் தாமரைக் கரங்களால் மிக்க மரியாதையுடனும் மகிழ்ச்சியுடனும்

வரங்களை நாரதருக்குக் கொடுத்தார்.

வரங்களைப் பெற்ற நாரதர், மிக்க மகிழ்ச்சியுடன் பகவானைப் போற்றி ஆடிப் பாடினார். ருக்மணி தேவி அனைவருக்கும் உணவு பரிமாறினாள். சத்யபாமா சாமரம் வீசினாள். சாம்பவதி போன்ற அனைத்து ராணிகளும் அவர்களுக்குத் தேவையான சேவைகளை செய்தனர். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் நாரதரின் கரங்களை சந்தணக் குழம்பு கொண்டு ஆச்சாமனம் செய்து, அவரை பலவகையான ஆபரணங்களாலும், மலர் மாலைகளாலும் அலங்கரித்தார்கள்.

## *நாரதரின் பிரயாகைப் பயணம்!*

அதன் பிறகு நாரதர் பிரயாகையில் அவருக்காக காத்திருந்த முனிவர்களுக்கு சேவை செய்யவும், மகிழ்விக்கவும் ஆர்வமுடன் பகவானின் கருணைக்குப் பாத்திரமான பக்தர்களைத் தேடி வெவ்வேறு இடங்களுக்கு அலைந்து திரிந்தபோது, தான் அனுபவித்த பக்தியின் மகிமைகளை ஆனந்தமாகப் பாடி சென்றார். நாரதரின் அறிவுரைப்படி, பிரயாகையில் கூடியிருந்த சாதுக்கள் ஸ்ரீமதன கோபாலரின் தாமரைப் பாதங்களை வழிபட ஆரம்பித்தனர்.

## *கோப கிஷோரரை பாடுங்கள்!*

பரீட்சித் மகாராஜா தன் அன்னை உத்தராவிடம் "ஓ, அன்னையே நீங்கள் தினமும் ஸ்ரீகோப கிஷோரரை பஜனை செய்து பாட வேண்டும். அந்த இளமையான மாடு மேய்க்கும் சிறுவன், கோபியர்களின் பிரேமையால் மயக்கப்பட்டவன். அவன் ராஸ லீலையின் அமிர்த சமுத்திரம். எப்போதும் கோபியர்கள் சூழ அமர்ந்திருப்பவன். அவன் கோபியர்களின் சேவையை விரும்பும் போது, நீயும் நாம சங்கீர்த்தனத்தில் அன்புடனும் பக்தியுடனும் ஈடுபட வேண்டும்.

"ஓ, அன்னையே நீங்கள் கோபியர்களின் ராஸ லீலை போன்ற லீலைகளில் காணப்படும் அன்பு, மற்றும் பிரேமையுடன் ஸ்ரீகோபிநாத்தை பஜனை செய்தால், அவருடைய கருணையால் கோபியர்களின் மகிமைகளில் சிலவற்றை உண்மையாகவே புரிந்து கொள்ள முடியும்" என்று கூறினார்.

## *யாருக்கு கோபி பிரேமை கிடைக்கும்?*

*ஏதன் மஹாக்யான - வரம் மஹா - ஹரே:*
*காருண்ய - சாராலயா - நிஷயார்தகம்*
*யா: ஷ்ரத்தயா ஸம்ஷ்ரயதே கதாஞ்சனா,*
*ப்ராப்னோதி தத்- பிரேம ததைவ ஸோ அபி அரம்*
*(ஶ்ரீபிருஹத்பகவதாமிர்தம்:1.7.160)*

"இந்த பிருஹத் பகவதாமிர்தத்தில் பகவானின் கருணைக்குப் பாத்திரமானவர்கள் யார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. யார் ஒருவர் இந்த உயர்ந்த தெய்வீகக் கதையை உண்மையுடன் கேட்கிறார்களோ, உச்சரிக்கிறார்களோ, ஏற்றுக் கொள்கிறார்களோ, அவர்கள் பகவான் ஶ்ரீகிருஷ்ணரின் கோபி பிரேமையை விரைவில் பெறுவர்."

ஹரே கிருஷ்ணா !

முற்றும்.

# வினாக்கள்

**1. ஸ்ரீ பிருஹத்பாகவதாமிர்தத்தின் ஆசிரியர் யார்?**

1. ஸ்ரீ ரூப கோஸ்வாமி
2. ஸ்ரீ ஜீவ கோஸ்வாமி
3. ஸ்ரீ சனாதன கோஸ்வாமி
4. ஸ்ரீகோபால பட்ட கோஸ்வாமி

**2. பரீட்சித் மகாராஜாவின் தாயார் பெயர் என்ன?**

1. சுபத்திரை
2. உத்தராதேவி
3. திரௌபதி
4. காந்தாரி

**3. ஸ்ரீல சனாதன கோஸ்வாமி கோவர்த்தன மலையை தினமும் எத்தனை முறை பரிக்கிரமா செய்வார்?**

1. இரண்டு முறை
2. மூன்று முறை
3. ஒரு முறை
4. நான்கு முறை

**4. புண்ணிய நதிகளின் மணி மகுடமாக இருப்பது எது?**

1. யமுனை
2. சரஸ்வதி
3. கங்கை
4. பிரயாகை

**5. தேவர்களின் குரு யார்?**

1. விஸ்வகர்மா
2. பிரகஸ்பதி
3. யமுனாச்சாரியார்
4. சுக்கிராச்சாரியார்

**6. வாமன தேவரின் தாயார் யார்?**

1. அதிதி
2. திதி
3. கீர்த்திகா தேவி

**7. மஹா பிரளயம் வருமோ என்ற பயத்தில் இருப்பவர் யார்?**

1. இந்திரன்
2. பிரம்மதேவர்
3. சிவபெருமான்

**8. வாமன தேவரின் மனைவியின் பெயர் என்ன?**

1. லட்சுமி தேவி
2. துர்கா தேவி
3. கீர்த்திகா தேவி

**9. இரண்யகசிபுவிற்கு வரம் கொடுத்தது யார்?**

1. இந்திரன்
2. பிரம்மதேவர்
3. சிவபெருமான்

**10. பிரகலாதனைக் காப்பாற்ற வந்த அவதாரம் எது?**

1. மோகினி அவதாரம்
2. நரசிம்ம அவதாரம்
3. வாமன அவதாரம்
4. கூர்ம அவதாரம்

**11. ஸ்ரீ பிருஹத் பாகவதம் யாருக்கு சொல்லப்பட்டது?**

1. அர்ஜுனன்
2. ஜனமேஜயன்
3. பரீட்சித்

**12. சாம வேதத்தைக் கற்பதில் சிறந்தவர் யார்?**

1. பைலர்
2. வைசம்பாயனர்
3. ஜைமினி
4. சமத்து

**13. பிரயாகை அந்தணர் எந்த விக்கிரகத்தை வழிபட்டார்?**

1. கிருஷ்ணா விக்கிரகம்
2. நரசிம்மர் விக்கிரகம்
3. ராதாகிருஷ்ணா விக்கிரகம்
4. சாளக்கிராம சிலா

**14. தேவலோகத்தின் தலைவன் யார்?**

1. இந்திரன்
2. பிரம்மதேவர்
3. பிரகஸ்பதி

**15. பாரிஜாத மரம் எந்தலோகத்தில் உள்ளது?**

1. சிவலோகம்
2. இந்திரலோகம்
3. பிரம்மலோகம்
4. சத்யலோகம்

**16. இந்திரனின் ஆசனத்தைக் கைப்பற்றியது யார்?**

1. இரண்யகசிபு
2. இரணியாட்சகன்
3. பலிமகாராஜா

**17. இந்திரனுக்கு சொந்தமான வனம் எது?**

1. கடம்ப வனம்
2. காண்டவ வனம்
3. மது வனம்

**18. பிரம்மலோகத்தில் பகவான் எவ்வாறு அழைக்கப் படுகிறார்?**

1. சங்கர்ஷணர்
2. மகா புருஷர்
3. விராட புருஷர்

**19. கோபச் சிறுவர்களையும், கன்றுக் குட்டிகளையும் திருடிச்சென்றவர் யார்?**

1. பிரம்மதேவர்
2. வருணதேவன்
3. இந்திரன்
4. சிவபெருமான்

**20. நந்தகோபர் குளிக்கும்போது கடத்திச் சென்றவர் யார்?**

1. வாயு தேவன்
2. வருண தேவன்
3. அக்னி தேவன்

**21. சிவபெருமான் முழு சக்தியுடனும் எங்கு இருக்கிறார்?**

1. கைலாயமலையில்
2. சதாசிவலோகத்தில்
3. சிவ ஆலயங்களில்

**22. சதாசிவலோகத்தில் சிவபெருமான் யாரை வழிபடுகிறார்?**

1. மகாபுருஷர்
2. வாமனர்
3. சங்கர்ஷணர்

**23. சங்கராச்சாரியாராக அவதரித்தது யார்?**

1. சிவபெருமான்
2. இந்திரன்
3. பிரம்மதேவர்

**24. சிவபெருமான் _______ குண அவதாரம்**

1. சத்வ
2. ரஜோ
3. தமோ

**25. பிரளய காலத்தில் சிவபெருமான் என்ன தாண்டவம் ஆடி பிரபஞ்சத்தை அழிக்கிறார்?**

1. ஆனந்த தாண்டவம்
2. ஊழித்தாண்டவம்
3. சிவ தாண்டவம்

**26. பாணாசுரனுக்கு பகவான் என்ன முக்தி அளித்தார்?**

1. சாலோக்ய முக்தி
2. சாமீப்ய முக்தி
3. சாரூப்ய முக்தி

**27. தாஸ்ய பாவத்தில் பகவானுக்கு பக்தி சேவை செய்தது யார்?**

1. பிரகலாத மகாராஜா
2. அர்ஜுனன்
3. ஹனுமான்
4. பிருந்தாவனக் கோபியர்கள்

**28. குருக்ஷேத்திரப் போரின் போது அர்ஜுனனின் தேர்க்கொடியில் இருந்தது யார்?**

1. பிரம்மா
2. இந்திரன்
3. ஹனுமார்

**29. பிரகலாதரின் தந்தை யார்?**

1. இரண்யாட்சகன்
2. இரண்யகசிபு
3. பாணாசுரன்

**30. ஹனுமார் எங்கு இருப்பதாக பிரகலாதர் நாரதரிடம் கூறினார்?**

1. சுதள லோகம்
2. மகாதள லோகம்
3. கிம்புருஷ வர்ஷம்

**31. பகவான் கிருஷ்ணரின் பிராண சகா யார்?**

1. அர்ஜுனன்
2. பீமன்
3. சகாதேவன்

**32. பகவான் கிருஷ்ணரின் பிராண சகி யார்?**

1. சுபத்திரா
2. திரௌபதி
3. உத்தரா

**33. பிரம்மலோகத்திற்கு இன்னொரு பெயர் என்ன?**

1. பித்ரு லோகம்
2. சத்யலோகம்
3. வைகுண்டலோகம்

**34. பூலோகம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

1. ஆனந்தம் அனுபவிக்கும் இடம்
2. துன்பத்தை அனுபவிக்கும் இடம்
3. நீதிக்கான இடம்

**35. உத்தவர் யார்?**

1. வசுதேவரின் சகோதரரின் மகன்
2. கிருஷ்ணரின் முதன் மந்திரி
3. பிரஹஸ்பதியிடம் கல்வி கற்றவர்
4. அனைத்தும்

**36. வைகுண்ட லோகம் எத்தகையது?**

1. ஜட இயற்கைக்கு அப்பாற்பட்டது
2. முக்குணங்களுக்கு அப்பாற்பட்டது.
3. நிரந்தரமானது
4. அனைத்தும்

**37. மனித பிறவிகள் யாருக்குக் கடமைப் பட்டுள்ளனர்?**

1. தேவர்களுக்கு
2. பித்ருக்களுக்கு
3. சாதுக்களுக்கு
4. அனைத்தும்

**38. பகவான் கிருஷ்ணரின் சாந்த பக்தன் யார்?**

1. பிரகலாதன்
2. அர்ஜுனன்
3. ஹனுமான்
4. பிருந்தாவன கோபிகைகள்

**39. கம்சனின் தாயார் பெயர் என்ன?**

1. காளிந்தி
2. ரோகிணி
3. பத்மாவதி

**40. யசோதா மாதாவின் பக்தி பாவம் என்ன?**

1. மாதுர்யபாவம்
2. வாத்சல்யபாவம்
3. ஸக்ய பாவம்
4. சாந்தபாவம்

**41. பிருந்தாவன கோபிகைகளின் பக்தி பாவம் எது?**

1. மாதுர்ய பக்தி பாவம்
2. பிரேம பக்திபாவம்
3. மகாபாவம்
4. அனைத்தும்

**42. யமுனா தேவி யார்?**

1. சூரிய தேவனின் மகள்
2. இந்திரனின் மகள்
3. யமராஜனின் மகள்